உள்ளே.....


1. காற்றாகி வா! .................................... 5

2. பார்வை ஒன்றே போதுமே! ................. 132


# காற்றாகி வா!

## 1

அமைதியாய் உறங்கியது நகரம்.

உறங்கும்போதும் பணக்காரனுக்கும் ஏழைக்கும் வித்தியாசம் உண்டுதானே? பஞ்சணையில் பட்டு போர்த்தி படுத்திருப்பவனுக்கும் கோரைப் பாயில் கந்தல் மூட்டையைத் தலைக்கு வைத்துச் சுருண்டிருப்பவனுக்கும் உள்ள வித்தியாசம் இங்கும் தெரிந்தது.

நடையோரக் குடித்தனங்களோ, அவை இறைந்த குப்பைகளோ இல்லை. துர்நாற்ற சாக்கடை, சாலையோர வண்டிகள், ஆட்டோ, அதில் தூங்கும் ஓட்டுநர்கள் இல்லாத துப்புரவான அகன்ற வீதிகள்.

ஆங்காங்கே படுத்துக் கண்மூடி, விழித்ததும் கண்ணில்படும் வேற்றாளைப் பார்த்துத் தொண்டை வற்றக் குரைக்கும் தெருநாய்களுமில்லை. முக்கியமாய் - சுவர்களை



அலங்கோலமாக்கும் போஸ்டர்கள் ஒன்றுகூட இல்லை. 'ராத்திரியானால் நாமும்தான் உறங்கணும்' என்ற சலிப்போடு பாதி கண்மூடி இருக்கவில்லை வீதி விளக்குகள்.

நிதானமாய் அத்தனையையும் ரசித்தவன் சிரித்துக் கொண்டான்.

இது பாரிஸ் - பிரான்சின் தலைநகரம்! வேறெப்படி இருக்கும்... நடுத்தர வர்க்கத்தினர் வாழும் பகுதி என்பதால்தான் இந்நேரம் இத்தனை அமைதி. சற்று முன் முன்னிருந்த நகரின் மையப்பகுதி என்னமாய் ஜொலித்தது... நாகரிகமும் செழிப்பும் கலந்து என்னமாய் கண்களை நிறைத்தன.

ஐரோப்பாவில் ஆகஸ்ட் மாதம்தான் தோதான சீதோஷ்ணம் என்பதால் அதிகக் குளிரில்லை. ஆனாலும் பாஸ்கர் தன் ஜெர்க்கினின் பாக்கெட்டுகளில் கைகளை நுழைத்திருந்தான். நம்மூர் வெயிலுக்கு பழகிய உடம்பு வெடவெடத்தது.

தெருவின் ஒவ்வொரு திருப்பத்திலும் தெருவின் பெயர் தெளிவாய் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆக, 'ரூ-டீ-சாலிக்னி'யைக் கண்டுபிடிப்பது சிரமமாயில்லை. இரண்டாம் நிமிடம் 11-ம் எண் வீட்டின் முன் நின்றான்.

அக்கட்டடம் நிச்சயம் 200 ஆண்டு பழைமையானது.

சாம்பல் நிற பெருஞ் சதுர கற்களால் எழும்பியிருந்த அது, 'இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும் நான் இப்படியேதான் இருப்பேன்' என்ற கர்வத்துடன் நிமிர்ந்திருந்தது.

உள்ளே ஆறு குடித்தனங்கள் இருப்பதை வெளியேயிருந்த ஆறு அழைப்பு மணிகள் தெரியப்படுத்தின.



தன்னிடமிருந்த விலாச அட்டையை எடுத்துப் பார்த்தவன் கவனமாய் நாலாவது குமிழை அழுத்தினான். முழுசாய் ஐந்து நிமிடம் காத்திருந்த பிறகு மறுபடி அழுத்தினான்.

பத்தாவது நிமிடம் சற்று சந்தேகம் வந்தது. பாஸ்டர் தேவகிருபை தூங்கிவிட்டாரோ? அவர் குறிப்பிட்ட நேரம்தானே இது... 'பத்து மணிக்கு மேல் வாப்பா... அந்த சான்றிதழை நீயேகூட தேடி எடுத்துக்கலாம்' என்றிருந்தாரே...?'

இதுவரை ஜெர்மனிக்கு வியாபாரம் முன்னிட்டு சிலமுறை போயிருந்தாலும் பிரான்சுக்கு அவன் வருவது இதுவே முதல் முறை.

பண்டைய கால கம்பீரமும் முன்னணி நாகரிகமும் குழைந்த அற்புத நாடுதான் இதுவும்.

ஏற்றுமதிக்காக இங்கும் நிறைய வாய்ப்புகள் இருப்பது வந்த இரு நாட்களிலேயே தெரிந்ததில் அவனுக்கு வெகு திருப்தி.

ஆனால், அயல் தேசம் வந்ததின் முக்கிய நோக்கம், பாஸ்டரைப் பார்த்து திருமண சான்றிதழை வாங்கிப் போவதுதான். வந்த அன்றே தேவாலயம் போய் அவர்கள் மூலம் பாஸ்டர் தேவகிருபை பற்றி அறிந்து கொண்டான். அவரது தொலைபேசி எண் அறிந்து தொடர்பு கொண்டுவிட்டான்.

போனிலேயே அவர் குரல் மூசுமூசென்று இளைத்தது. ஆஸ்துமா போலும். இப்போதும் உடம்புக்கு முடியாமல் தவிக்கிறாரோ?

இன்னொரு முறை அழைப்பு மணியை அழுத்துவதா அல்லது மறுநாள் வரலாமா என்று குழம்பி நின்ற நேரம் அந்த ஒன்பதடி உயர அகன்ற மரக்கதவு சற்றே விரிந்தது.

மூச்சிரைத்தபடி நிற்கும் கிழவரை எதிர்பார்த்த அவன் கண்கள் கிடைத்த காட்சியில் திகைத்தன. இருண்ட கதவின் இடைவெளியில் ஒளிக்கீற்று போல நின்றது ஒரு இளம்பெண்!

வெளிறிய முகத்தைச் சுற்றி சற்றுக் கலைந்திருந்த சுருள் கூந்தலை ஒரு கையால் லாவகமாய் ஒதுக்கியபடி இவனைப் பார்த்தாள்.

இவனைப் போலவே அவள் முகத்திலும் சற்று குழப்பம். அதிக உயரமில்லை என்றாலும் பார்வையில் மிடுக்கிருந்தது. என்ன நிறமென்றே கணிக்க முடியாத களிம்பு நிற உடைகள் அவள் உடலை கனமாய் மூடி மறைத்திருந்தன. கால்களில் கருப்பு ஷூக்கள்.

''நான் பாஸ்டர் தேவகிருபையைப் பார்க்கணும்...''

அவள் மவுனமாய் நின்றாள்.

''இது அவர் வீடுதானே?''

நிச்சயப்படுத்திக் கொள்வது போல ஒரு முறை திரும்பி வீட்டைப் பார்த்தவள் முணங்கினாள் - ''ம்ம்...''

''அவர்தான் பத்து மணிக்கு மேலே வரச் சொன்னார்.''

அவளது மெல்லிய புருவங்கள் சற்றுச் சுருங்கின.

''ஒரு முக்கியமான சான்றிதழ் தேவை. நானேகூட தேடி எடுத்துக்கலாம்னார்...''

''வாங்க'' ஒதுங்கி வழிவிட்டான்.

சதுரமான திறந்தவெளி. அதன் சின்னத் தோட்டத்தைக் கடந்தவர்கள் கீழ்புறமிருந்த பகுதி ஒன்றுள் நுழைந்தனர்.



மற்ற வீடுகளிலும் சன்னமான விடிவிளக்கு வெளிச்சம்தான். பேச்சு, சிரிப்பு சத்தங்கள் இல்லாமல் பெரிய சமாதி போலிருந்தது.

'சத்தமில்லாவிட்டால் சமாதியா?' என்று தன்னையே கடிந்து கொண்டான். ஆனாலும் சன்ன ஒளியும் பழைய அமைதியான கட்டடமும், உள்ளே முதுகைச் சொடக்கிய குளிரும் அப்படியொரு நினைப்பைத் தோற்றுவித்திருக்கும் என்று சமாதானமும் கொண்டான்.

வரவேற்பறையின் கணப்பருகே போய் குனிந்தவளது சுருள் கேசம் இரு பக்க தாள்கள் வழியே பெருகி வழிந்தது. செந்தணல்பட்ட அவளது மென் முகம் ஜொலித்தது. அறையில் சற்று வெப்பம் பரவியதும், தன் விரிந்த கூந்தலைக் கோதி முடிச்சிட்டவள் அவன் முகம் பார்த்துக் கேட்டாள்... ''என்ன விஷயமாய் பார்க்க வந்தீங்க?''

இவளிடம் சொல்வதா வேண்டாமா என்று ஒரு கணம் தயங்கினான்.

''கல்யாண சான்றிதழ் ஒன்று தேவைப்படுது. என் அத்தைக்கு 21 ஆண்டுகளுக்கு முன்னே பாரிசிலே கல்யாணமானது. அதைப் பதிவு செய்தவர் உங்க...'' கேள்வியோடு அவளையே பார்த்தான்.

''என் தாத்தா அவர்...'' விளக்கினாள்.

''ஓ... இந்த நேரம் அவரைத் தொந்தரவு செய்வதற்காய் மன்னிக்கணும். ஆனால் நான் காலையில் வர்றதாய்தான் சொன்னேன்... அவர்தான் இன்னைக்கு இந்நேரம்... குறிப்பிட்டு...''



சற்று முன் தணல் பட்டு கனிந்திருந்த அவள் முகம் திடீரென வெளுத்தது.

''திருமணமான தேதி, பெயர்கள் பற்றிய தகவல்கள் தரேன். சான்றிதழைத் தந்தால் நகல் எடுத்திட்டு அசலை பத்திரமாய் கொண்டு தந்திடுறேன்.''

''கோயிலைப் புதுப்பிக்கிறதால் பழைய ரிக்கார்ட்சை எல்லாம் தாத்தாகிட்ட தந்திருந்தாங்க. அவருக்குத்தான் அவற்றுடைய பின்னணி எல்லாம் தெரியும். இது ஆலய பாரிஷ் தந்த வீடு. அதனால் மறுக்க முடியாது. அறைகளின் அத்தனை அலமாரிகளிலேயும் காகிதக் கட்டுகள்தான். ஆலயம் புதுப்பிக்கப்பட்டாச்சு. இதுகளை வைத்துப் பராமரிக்க தனியாய் ஒரு அறையும் தயாராகியிருக்காம்... இனி எல்லாம் அங்கே போயிடும்'' சன்னமாய் உதடு பிரித்து மிருதுவாய் அவள் பேசியது மகுடி ஓசை போல அவனை மயக்கியது.

''ஆனா வெறுமே விபரம் மட்டும் தராமல் உங்களுக்குத் தேவையான சர்டிபிகேட்டை நீங்களே தேடித்தான் எடுத்துக்கணும்.''

''சரி மேடம்...'' மறுபடி சற்று இழுத்தான்.

அதிலிருந்த கேள்வி புரிந்தாற்போல ''பத்மினி'' என்றாள்.

இவன் புருவங்கள் மேலேறின. பியூலா, ஸ்டெல்லா போன்ற ஒரு பெயரை எதிர்பார்த்தவனுக்கு இதுவும் சற்று ஆச்சரியம்தான். அழகில் சிறந்தவர்களைப் பத்மினி வகையினர் என்பார்களாமே... இவளது அழகைக் கண்டு வைத்த பெயர் போலும். வெகு சாதாரண உடையில் இருந்தாலும் அவளது அழகு அசாதாரணமானது என்பது அந்த அரை இருட்டிலும் தெளிவாய் தெரிந்தது.



''சாரி... நாளைக்கு நான் வெர்ஷெயில் போகணும். ஏற்றுமதி தொழிலில் இருக்கேன். உலர்ந்த பழங்களை அனுப்பறது - அது சம்பந்தமான ஒரு அப்பாயிண்ட்மென்ட். வெர்ஷெயில் இங்கேயிருந்து ஒரு மணி நேரப் பயணம்னு சொன்னாங்க...''

''ம்ம்...'' என்றவள் முகம் சற்றுப் பிரகாசமானது.

''அங்கே போயிருக்கீங்களா?'' ஆவலாய் வினவினான்.

''நோ. சன் கிங்லூயினுடைய உலகப் பிரசித்தி பெற்ற அரண்மனை அங்கேயிருக்குன்னு . படிச்சிருக்கேன்...'' அவ்வளவுதான்.''

''எத்தனை ஆண்டுகளாய் பிரான்சில் இருக்கீங்க பத்மினி?'' பெயர் சொல்லி, நெருக்கமாய்த் தொனித்த அக்கேள்வியில் சுருங்கி விட்டாள்.

''நாளைக்கு எனக்கும் ஓய்வு இல்லை. ஆக இப்பவே தேடி எடுத்துக்கோங்க'' என்றாள் பட்டென அந்த நெருக்கத்தை அவள் வளர்க்க விரும்பவில்லை.

ஆயிரக்கணக்கான மைல்கள் கடந்த அயல்தேசத்தில் சக இந்தியனைக் கண்டால் யாருக்குமே உற்சாகம்தான். பிரான்ஸ் வந்ததிலிருந்து அவன் அந்தத் தினுசு புன்னகைகளைப் பல பெற்றிருந்தான். பாகிஸ்தானியர்களைக் கண்டாலும்கூட பாசம் பெருகும். ஆனால், வீடு தேடிவந்த இந்தியனுக்கு இப்பெண் இதுவரை ஒரு சிநேகப் புன்னகை... ஏன் பார்வைகூடத் தரவில்லை என்பது விநோதமாய்ப் பட்டது.

பாதி இருட்டில் கரு வைரங்களாய் மின்னின அவளது விழிகளின் கீழே வளையமிட்டிருந்தது எது...? சோகமா...? அச்சமா...? துணிந்து கேட்டு விட்டான். ஏதேனும் பிரச்சினையா பத்மினி?''

அவனை நேரே ஒரு கணம் பார்த்தவள் ''ஆமா, தாத்தா இறந்துட்டாங்க... இன்னைக்கு மதியம்தான். நாளைக் காலை இறுதிச் சடங்கு இருக்கும்... அதான் எனக்கும் வேலை இருக்குன்னேன்'' என்றாள் மெல்ல.

## 2

அவனது திகைப்பை சற்று திருப்தியுடன் பார்த்தாள்.

'இப்படி ஒரு தகவலை எதிர்பார்த்திருக்கவே மாட்டார்... பாவம். எத்தனைத் தோரணையான இளைஞர்! வெளிநாடு வந்து வியாபாரம் பேசுமளவிற்குத் திறமை, பணம், கம்பீரம்... ஆனால், மரணம் என்று கேட்டதுமே அதிர்ந்துதான் விட்டார்... ஆனாலும் நிலைகுலையவில்லை.

ஆனால் வீட்டிற்குள்ளேயே கிடந்து வெளியுலகே பழகாத தனக்கு எத்தனைப் பெரிய அதிர்ச்சி இது...? இழப்பு என்று சொல்ல வேண்டுமோ? உலகில் தனக்கென்று இருந்த ஒரே சொந்தம் தாத்தாதான். அவரும் போனது இழப்புதான்... அவரை இறுகப் பற்றியிருந்தால்தானே இழக்க? தாத்தாதான் யாரையும் மிக நெருங்கவே விட்டதில்லையே...

''சாரி... அப்படீன்னா ஏன் யாரும் உங்களுக்குத் துணையாய் இல்லை?'' பாஸ்கர் கேட்டான்.

'மனிதர் சீக்கிரமே சுதாரித்து விட்டார்' என்று மனதிற்குள்ளாக அவனைப் பாராட்டியவள், ''வந்திருந்தாங்க. தாத்தாவை துடைத்து உடைமாற்றி பெட்டிக்குள்ளேயும் வைச்சாச்சு. காஃபினுக்கு ஆர்டர் தந்ததுகூட அவங்கதான் - அதாவது அக்கம் பக்கத்தில் உள்ளவங்க. நாளைக்கான



அடக்கத்துக்கும் சர்வீசுக்கும் ஏற்பாடு செய்தாச்சு. இதற்கு மேல் அவங்ககிட்டேயிருந்து எதிர்பார்க்கிறதும் தப்பில்லையா?''

''உங்க தாத்தாவுடைய நண்பர்கள் யாரும்...?''

''தாத்தாவுக்கு வயசு 76. நண்பர்களுக்கும் வயசாகியிருக்கும்... தாத்தாவைப் போல சீக்குகளோட அல்லாடிட்டு இருப்பாங்களாயிருக்கும்... யாரும் இங்கே வந்ததில்லை.''

''பாதிரி வேலையிலும் அவரில்லை போல...?''

''இல்லை. ஆலயத்துக்குச் சொந்தமான இந்த வீட்டில் தொடர்ந்து எங்களைத் தங்க அனுமதிச்சதே நிர்வாகத்தோட கருணை.''

''குடும்பத்தார் யாரும் இங்கில்லையா?''

''என்னைத் தவிர யாருமில்லை. அவருக்கு உடல்நிலை ரொம்ப பலகீனமானப்புறம் இந்தியாவிலிருந்து என்னை இங்கே கூட்டிட்டு வந்துட்டாங்க.''

''எத்தனைக் காலமாய் இங்கே இருக்கீங்க?''

கேட்டவனைச் சற்று ஆழ்ந்து கவனித்தாள். ''இவரும் வித்தியாசமானவர்தான். முதலில் சற்று திகைத்தாலும் ஒரேயடியாய் குலையாத திடம். தன்னிடம் பரிதாபம் காட்டி உருகவுமில்லை. இயல்பாய் கேள்விகளைக் கேட்டபடி இருக்கிறாரே?'

''ரெண்டு வருடமாய்.''

''பாரிசைச் சுற்றிப் பார்த்திருக்கீங்களா?''

''இல்லை. இந்தத் தெருவைத் தாண்டிப் போனதில்லை. ஞாயிற்றுக்கிழமை சர்ச் போவேன். அதுவும் ரொம்ப பக்கத்தில்



தான்'' அவள் குரலில் வருத்தமில்லை. ஆனாலும் அதன் ஆழத்தில் கசப்பிருந்ததாய் தோன்றியது.

பாஸ்கருக்கு சற்று முன் தான் கண்டுகளித்திருந்த 'லிடோ' நைட் கிளப்பின் ஆரவாரமும் ஆனந்தக் கொந்தளிப்பும் கண்களில் இன்னும் ஆடின.

பணமும் பகட்டுமான பாரிசுக்குப் பொருத்தமான மாயலோகம் 'லிடோ', செல்வத்தோடு கலையும் அழகும் கைகோர்த்து பார்ப்பவரை எல்லாம் பரவசத்தில் ஆழ்த்திய நிகழ்ச்சி. உலகத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்து தினம் ஆயிரக்கணக்கானோர் அதைக் கண்டுகளிக்க, பாரிசில் வாழும் பலர் அந்தப் பக்கம் போகும் வாய்ப்புங்கூட இன்றிக் கிடக்கின்றனர்.

''சரி... நாளைக்கு அடக்கம். அதுக்கு அப்புறம் என்ன செய்யப்போறீங்க?''

தனக்குத்தானே கேட்கவும் பயந்து அவள் ஒதுங்கிய கேள்வி இது! அதை வெகு இயல்பாய் நாற்காலியில் சாய்ந்தபடி கேட்கிறாரே?

''அப்புறம் இங்கே இருக்க முடியாது... இந்தியாவுக்குத்தான் போகணும்...''

''ரெண்டு ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் எங்கே இருந்தீங்க?''

''தெற்கே சாயர்புரம்.''

''கண்டிப்பாய் படிச்சிருப்பீங்க. நெல்லை பக்கம் திரும்பின இடமெல்லாம் கல்லூரிங்கதானே?''



''ஆமா. எம்.ஏ. பொருளாதாரம். அங்கே போய் வேலை தேடணும். டீச்சர், வார்டன் இல்லை நோயாளியைப் பராமரிக்கிற ஆயாவாய்... ஏன்னா ரெண்டு ஆண்டாய் நான் நல்லாப் பழகின வேலை இது'' அவளையும் மீறி குரலில் துளி கசப்பு கலந்திருந்தது. கைவிரல்களை இறுகக் கோர்த்திருந்தாள். மிக மெல்லிய நீண்ட விரல்கள்.

அப்படியானால் இவளது உடலும்கூட மெல்லியதாய்தான் இருக்க வேண்டும் என்று சம்பந்தா சம்பந்தமில்லாது கற்பனை செய்த தன் புத்தியைத் தட்டி ஒடுக்கினான்.

''தாத்தாவுடைய உடல்?''

மெள்ள விரல்களைப் பிரித்து இடதுபுறமாய் கைக்காட்டினாள்.

''நான் பார்க்கலாமா?''

எழுந்து நடந்தவளைப் பின் தொடர்ந்தான். பிறரைப் போல சடலத்தின் அருகே கண்மூடி சில நிமிடங்கள் பிரார்த்திக்காமல், உற்று பார்த்தபின் வெளியேறினான்.

அரை இருட்டில் ஒரு அந்நியனுடன் இருப்பது சங்கடம் தர விளக்குகள் அத்தனையையும் போட்டாள். தாத்தா இருந்திருந்தால் இதற்கு அனுமதி கிடைத்திருக்காது. 'பத்தரைக்கு மேல் வெளிச்சமோ சத்தமோ எனக்கு ஆகாது. நேரத்தே படு' என அதட்டுவார்.

மறுபடி வந்து அதே நாற்காலியில் அமர்ந்தவன், ''நான் இந்தியா போகும்போது நீங்களும் என் கூட வரலாம் பத்மினி'' எனவும் பிரமித்துப் போனாள்.

''இப்ப... இப்ப நீங்க வந்த வேலை...?''

''ஆமா. அதை இப்பவே முடிச்சிடலாம்னு நினைக்கிறேன். இந்தாங்க. இதுதான் என் அத்தை, மாமாவுடைய பேர், கல்யாண தேதி. நீங்க ஒரு பக்கம் தேடினால் நான் அடுத்த அலமாரியைக் குடையறேன்.''

''இப்ப... இப்பவா?''

''இன்று இரவு நீங்க எப்படியும் தூங்கப் போறதில்லை. என் வேலையையேனும் முடிக்க உதவலாமே.''

'சின்னப் பொண்ணு நீ எப்படியம்மா ஒரு சடலத்தோட இரவு முழுக்கத் தனியாயிருப்பே... நானும் துணையாய் இருக்கட்டுமா?' என்று ஒரு அந்நியன் கேட்டிருந்தால் பயந்து மறுத்திருப்பாள். ஆனால். இப்பொழுது விகல்பமாய் நினைக்கவோ மறுக்கவோ அவளுக்கு சந்தர்ப்பம் தராமல் அவன் வேலையில் இறங்கி விட்டிருந்தான்!

ஒரு குட்டை முக்காலியை இழுத்து அலமாரியின் அருகே போட்டு அமர்ந்தவன், கீழ்த்தட்டிலிருந்து ஆராய்ச்சியைத் தொடங்கியிருந்தான்.

''அடடே, இந்த ஃபைல்ல வருஷம் போட்டிருக்கே. 1958. நமக்கு இத்தனைப் பழசு தேவையில்லை. 1979தான் வேணும். சீக்கிரம் கண்டுபிடிச்சுடலாம்னு தோணுது'' உற்சாகமானான்.

புதிராய் இருந்த எதிர்காலத்தைப் பற்றி சிந்திப்பதைவிட கிடைத்த சிறு வேலையில் மூழ்குவது சுலபம் எனத் தோன்ற பத்மினியும் தேடும் படலத்தில் இறங்கினாள்.

''இதோ... இதோயிருக்கு 1979.''

அவசரமாய் வந்தவன் அவள் கையிலிருந்த கோப்பை ஆவலுடன் வாங்கினான். ''செப்டம்பர் மாதம்...'' காகிதங் களைப் புரட்டியவன் இதோ கிடைச்சிடுச்சு. குட்'' என்றான்.



''ம்... ஏன்ஜலின் அன்ட் கருணாகரன் - சரிதான். நகலெடுத்துட்டு இதை மறுபடி இங்கேயே வைச்சிடுங்க.''

''கண்டிப்பாய். உங்க தாத்தா முறையாய் அடுக்கி வைச்சிருந்ததால் சுலபமாய் கண்டுபிடிச்சாச்சு.''

''ம்ம்...''

பிரகாசமான ஒளியில் அவளை நெருக்கத்தில் பார்த்த வனுக்குள் வினோதமான உணர்வுகள் புரண்டன. அது பச்சாதாபமா, பரிவா அல்லது அழகைக் கண்ட ஆர்வமா... புரியவில்லை. பல்பின் தங்க ஒளியில் அவள் சருமம் பொன்னாய் மின்னியது. உரிக்காத நுங்கின் பழுப்பும் பளபளப்பும் கலந்த சருமம் தொள தொளப்பான ஸ்வெட்டரை மீறி சிறியவளாய் தெரிந்தாள். அவளும் தன்னை அச்சத்துடன் பார்ப்பது புரிந்தது.

ஏறக்குறைய ஆறடி உயரத்தில் அகலமும் லேசான தாடியுமாய் ஒரு ஆண் வீடு வந்ததோடு இல்லாமல், இயல்பாய் பேசிப் பழகுவது இவளுக்கும் புது அனுபவம். பெரியவர் உயிரோடிருந்த காலத்தில் வெளியாட்களை அதிகம் சந்தித்திருக்க சாத்தியமில்லை.

இருவரும் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் எடை போட்டபடி நின்றிருந்தனர். ''இப்படி சான்றிதழுக்காக பலர் உங்க வீடு தேடி வருவாங்க. அவசரமாய் நாட்டைவிட்டுப் போறவங்க பல ஆண்டுகள் கழிச்சு அதைக் கேட்டு எழுதறதுண்டு. தாத்தா தேடி அனுப்புவார்.''

''முந்தாநாள்தான் நான் போன் செய்தேன். அன்னைக்கே சுகவீனமாய் இருந்தாரா?''





''ஆமா. இளைப்பு கடுமையாக இருந்துச்சு. தாத்தாவுக்கு ஆஸ்துமாவோட மூட்டுவலியும். பக்கத்து போர்ஷன்ல ஒரு டாக்டர் உண்டு. அவர்தான் அப்பப்போ வந்து பார்த்து மருந்து தருவார். அவர் மனைவி நர்ஸ்... இரண்டு பேருமாய்தான் தாத்தாவைப் பார்த்துக்கிட்டாங்க.''

''நீயும் இன்றிரவு அங்கே... அவங்களோடயே தங்கியிருக்கலாம்...''

''கூப்பிட்டாங்க. எனக்கு... எனக்குத்தான் தாத்தாவைத் தனியே விட்டுப் போக மனசில்லை'' அவள் குரலில் அழுகையில்லா விட்டாலும் வேதனை இருந்தது.

நூதனமாய் அவளைப் பார்த்தவன்,

''அடுத்த வாரம் நான் இந்தியா போறேன்'' என்றான்.

தன்னையும் உடன் வரச்சொல்லி அவன் தந்த அழைப்பு மறக்கவில்லைதான். ஆனால், யார் என்றே தெரியாத நபருடன் எப்படிப் போவது? உறவென்று யாருமில்லாத தனக்கு வேறு யார்தான் துணை? கடவுளே அனுப்பியது போல இந்த இராத்திரி இவர் ஏன் வரவேண்டும்?

பயணத்திற்கான பணம் தன்னிடம்... அதாவது தாத்தாவிடம் உண்டா என்று கூட அறியாத இந்நிலையில் என்ன செய்வதென்று புரியாமல் நின்றாள்.

## 3

பாஸ்டர் தேவகிருபை பிறந்தது வளர்ந்ததெல்லாம் பாண்டிச்சேரியில்தான்.



பள்ளியில் கற்ற பிரெஞ்ச்சோடு, சில ஆசிரியர்களோடு அம்மொழியைப் பேசியும் பயின்றதில் மொழி வசமானது.

வேதாகமக் கல்லூரியில் சேர்ந்தவர் கல்யாணம் கட்டி ஒரு பெண்ணையும் பெற்று வளர்த்தார். பிராட்டஸ்டன்ட் சபை குருமார் கல்யாணம் செய்துகொள்வார்கள். அவர்களது ஊழியத்தில் மனைவிக்கும் பெரும் பங்கு உண்டு. அவருக்கு அனைத்திலும் கை கொடுத்த மனைவி சீக்கிரமே இறந்துவிட, ஏற்கனவே உலக வாழ்வில் அதிகப் பற்றற்ற பாஸ்டருக்கு மிச்சம் மீதியும் அழிந்தது. சமய, சன்மார்க்கம் பற்றி பல புத்தகங்களை எழுதியவரின் மகளுக்கு உறவினர்தான் சேர்ந்து மாப்பிள்ளை பார்த்து திருமணத்தை நடத்தினர்.

தன் ஒரே மாப்பிள்ளை விபத்தொன்றில் காலமானபோதும் அவர் மகளுக்கு ஆறுதலாய் சொன்னது ஒரு வித வசனம்தான் - 'கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்.

அவருடைய நாமத்துக்கே ஸ்தோத்திரம். அவரது விதவை மகள் ஒரு பள்ளியின் வார்டனாகப் பணிபுரிந்து தன் சொச்ச காலத்தை முடித்து, தன் மகள் பத்மினிக்கு சொத்தாக விட்டுச் சென்றதுதான் பார்த்த உத்தியோகத்தைத்தான்.

பத்மினிக்கு அசாதாரண அழகு வாய்த்திருந்தது. குளித்து இடுப்பு வரை சுருள் சுருளாய் அடர்ந்த கூந்தலை அவள் ஆற்றும்போது கடல் கன்னிதான் தவறி தரையேறி விட்டாளோ என்று அவள் தாய்க்கே பிரமிப்பு எழும். மிக மிருதுவான, பச்சை நரம்புகள் ஓடுவது தெரியும், சருமம் இத்தனை மெல்லிசாய் கூட இருக்கக்கூடுமா என வியப்பூட்டும் இடை. சிற்ப செதுக்கலான அங்கங்கள். தன்னை ஓயாத காய்ச்சல்படுத்தியதும் பத்மினியின் தாய்க்கு எழுந்த கவலை

எல்லாம் மகளைப் பற்றிதான்... ஒரு வேளை தான் இறந்து விட்டால் தன் இளம் மகளின் கதி என்ன என்ற பதட்டம்.

உடனே பிரான்ஸ் நாட்டின் ஆலயம் ஒன்றில் பணியாற்ற போய்விட்டிருந்த தகப்பனுக்குக் கடிதம் எழுதினாள். அவள் பயந்தபடியே, என்னவென்று மருத்துவர் கணிப்பதற் குள்ளேயே, நோய் அவளை முழுங்கி விட்டது. மகளது கடிதத்திற்கு மதிப்பு தந்த பாஸ்டர் தேவகிருபை இந்தியா வந்தார். பேத்தியுடன் பாரிஸ் திரும்பினார்.

பத்மினிக்கு பிரெஞ்சு மொழியுடன் தாத்தாவுமே பரிச்சயம் இல்லாதவை தான். அயல் தேசம் கிளம்ப மனமேயில்லை.

''நான் இந்த வேலையிலே இங்கேயே இருக்கிறேனே தாத்தா?'' - கெஞ்சினாள்.

''உங்கம்மாவுக்கு உன்னைத் தனியே விடப் பிரியமில்லையேம்மா.''

''ஆனா... பாரிஸ்... போறதுன்னால்...?''

''அவ்வீடு பாதுகாப்பானது. வேண்டிய பொருளுங்க வீடு தேடி வந்துரும். நீ வெளியே போகவே நேராது'' என்றிருந்தார். உண்மைதான். சதா இருண்டிருந்த அப்பெரும் வீட்டு வளாகத்தினுள் சிறை வைக்கப்பட்டது போல் ஒரு அனுபவம் அது.

அக்கம் பக்கத்தில் இளம் வயதினர் யாருமில்லை. இசை, சிரிப்பு, ஏன் பேச்சும்கூட சொற்பம்தான்... தாராளமாய் பிறரிடம் பேச முடியாதபடி மொழி வேறு இடித்தது.

ஆக பத்மினிக்கு மூச்சடைத்தது.



ஒரே திருப்தி உடல்நிலை பலவீனமாயிருந்த தாத்தாவிற்கு தன் உதவி இதமாக இருந்தது என்பதுதான். மூச்சிரைத்தபடி அவர் எழுதியதை தெளிவாய் மீண்டும் எழுதித் தொகுப்பாள்.

மருந்தோடு, பத்தியமாகவும் சமைத்துப் பரிமாறினாள். இரு வருடங்களாய் உலகின் அந்த நாகரிக நகரில் இருந்தும், ஆசை தீர சுற்றிப் பார்த்ததில்லை.

ஒருமுறை தாத்தாவின் நண்பரது இறுதி யாத்திரைக்காக வெளியே போனபோது பஸ் ஜன்னலின் வழியே ஈபிள் டவரை பார்த்ததோடு சரி!

''தாத்தா... அதோ அதுதானே ஈபிள் டவர்?''

''ம்ம்...''

''இங்கேயிருந்து பார்க்க நம்ப டி.வி. டவர் மாதிரிதான் தோணுது.''

''ஆயிரம் அடி உயரம். 1898-ல் ஒரு கண்காட்சியப்ப நிர்மாணிச்சது.''

''ஓகோ...''

''பிரெஞ்ச் நாட்டு கொடியை உயரே பறக்க விடறதுக்காகன்னு செய்தது. பிறகு இதை ஏன் பிரிக்கன்னு அப்படியே விட்டுட்டாங்க. அதான் நிக்குது...''

நகரின் நேர்த்தியும், புராதன கவர்ச்சியும் மனதைக் கொள்ளையடித்தன. அச்சாலைகளில் வாய் பார்த்தபடி நடக்க கால்கள் துறுதுறுத்தன.

பெண்களின் அலங்காரம் அசரடித்தது. எல்லோர் மீதும் வித்தியாசமான நறுமணங்கள். ஜனத்திரளின் நடுவே நின்று



கண்களை மூடினால் கலவையான நறுமணங்கள் கிறங் கடித்தன. பிரெஞ்ச் வாசனைத் திரவியம் உலகப் பிரசித்தம் அல்லவா?

ஆனால், அவளுக்கு அக்கடைகளுள் நுழைய வாய்க்க வில்லை. நூற்றுக் கணக்கில் 'சென்ட்' குப்பிகள் மாதிரிக்காக வாசலில் அணிவகுத்திருக்கும். இலவசமாய் பீய்ச்சி, முகர்ந்து, ஆராயலாம். ஆனால், அதைக்கூட இதுவரை செய்ததில்லை அவள்.

''போனோம், வந்தோம்னு இருக்கணும் பத்மினி. அநாவசியமா எங்கேயும் நிற்காதே. கோயில் ஆராதனை முடிஞ்சதும் நேரே வீடு வந்திரு.''

''சரி தாத்தா'' தாத்தாவின் எச்சரிக்கைகளுக்கு மதிப்பளிப்பதில் தன் ஆசைகளை மழுங்கடித்தாள்.

மொழிப் பிரச்சினையால் அவ்வளாகத்து பிற குடித்தனக்காரக்காரர்களிடமும் பழகி ஒன்ற முடியவில்லை. டாக்டர் ஓரளவு ஆங்கிலம் பேசுவார் என்றாலும் அவருக்கெங்கே நேரம்?

சிறுவர்களின் விளையாட்டு, டி.வி.யின் சத்தம், கீரைக்காரி, பழக்காரனது கூவல்கள் அற்ற அமைதி அவளை அமுக்கும்.

பண்டைய எகிப்தில் இறந்த மன்னரான பாரோவுடன் அவரது மனைவிகள், வேலைக்காரர்கள், பொன், பொருள் என்று எல்லாமுமாய் வைத்து சமாதி அமைத்தது போல சீக்காளி தாத்தாவுடன் இந்த ஆளண்டாத வீட்டில் ஏறக்குறைய எழுநூறு நாட்கள்... இப்போது ஜன்னல் ஒன்று திறந்தாற்போல இவர்... குளிர் காற்றும் இதம்தான்.



ஆனால் இவருடன் போகலாமா... போய் என்ன செய்வது என்பதும் புரியாத நிலை. தன்னுடைய அநாதரவான நிலை புரிந்துதான் இந்த அந்நியன் இப்படி ஒரு அழைப்பு தந்து விட்டாரோ?

ஓரக்கண்ணால் புதியவனை நோட்டமிட்டாள்.

அடர்ந்த புருவங்களும் சற்றே, கழுகு போன்ற எடுப்பான மூக்கும் அச்சமூட்டினாலும் அவன் விழிகள் நேர்மையானதாக இருந்தன. பார்வை அலைபாயாமல் அவள் முகத்தை நேரே பார்த்தது - சற்று முரட்டு உதடுகள் என்றாலும் சமயங்களில் மென்மையாகின.

''கொஞ்சம் டீ கிடைக்குமா, பத்மினி?''

குழப்பத்துடன் நிமிர்ந்தாள். அந்நியரையும் உபசரிக்க வேண்டும்தான். ஆனால், இந்த சூழ்நிலையிலுமா?

''நீங்க சாப்பிட்டாச்சா?'' அடுத்த கேள்வியைக் கேட்டான்.

''இல்லை, டாக்டருடைய மனைவி சாப்பாடு தந்தாங்க. ஆனா... அது அப்படியேதான் இருக்குது.''

''பசிக்கலையா?''

அவனைச் சற்று எரிச்சலுடன் பார்த்தாள்.

மதியத்திலிருந்து ஏதும் சாப்பிடாததாலும் ஏற்பட்ட எரிச்சல் அது என்பதை அவள் உணரவில்லை.

''ஏற்கனவே மனசு துன்பத்திலிருக்குது. உடம்பையும் ஏன் துன்புறுத்தணும்? சாப்பிடலாமே?''

எழுந்தவன் சின்ன தேடலுக்குப் பின் சமையலறையைக் கண்டுபிடித்து அதனுள் புகுந்தான்.

''இதென்ன புது வம்பு'' என்பதாய் அவனைப் பின் தொடர்ந்தாள்.

''சுமாராய் டீ போடுவேனேத் தவிர, சமைக்கத் தெரியாது பத்மினி.''

ஏதோ தான் கேள்வி கேட்டாற் போலல்லவா பதில் வருகிறது! அவள் அவஸ்தையாய் நின்றாள்.

''இதுதான் உங்க கனவா?'' சிறுவலை மூடி போட்ட தட்டைத் திறந்து பார்த்தான். கோழி ரோஸ்ட்டைச் சுற்றி வேக வைத்த காய்களும், உருளைக் கிழங்கு வறுவலும் சமர்த்தாய் காவல் நின்றன.

''குட்... மைக்ரோவேன் ஓவன்ல வைச்சாப் போதுமே... இது நமக்குத் தெரிஞ்ச விஷயம்'' உற்சாகமாய் தட்டை அடுப்பிற்குள் வைத்து மின் குமிழ்களை உத்தேசமாய் தட்டினான். 'ஓவன்' சிறு உறுமலுடன் சுழல ஆரம்பித்தது.

''இப்ப எனக்கு டீ...'' கைகளைப் பரபரவென்று தேய்த்தபடி பாத்திரங்களை மாட்டியிருந்த அடுக்கை ஆராய்ந்தான்.

''நான் போடறேன்'' என்றவள் காரியத்தில் இறங்கினாள். அதற்குள் இரு கோப்பைகளை எடுத்து அளவாய் அதில் சர்க்கரை இட்டவன் 'பீப்... பீப்' என்று 'அழைத்த 'ஓவனி'லிருந்து ஆவி பறந்த அவளது உணவுத் தட்டையும் மேசைக்குக் கொண்டு வந்தான். புதிதாய் கிளம்பிய உணவின் மணத்தில் வயிறு மறுபடி பசித்தது.

''உடம்பைக் கவனிச்சுக்கணும். இனி பட்டினி கிடந்து ஆகப்போறதென்ன?'' வார்த்தைகள் ஆறுதலுக்காக சொல்லப் பட்டாலும் அவன் குரலில் குழைவோ கனிவோ இல்லை.



பிள்ளையை அதட்டும் தாயின் தொனி. கணக்கான தேநீரைக் கோப்பையில் ஊற்றி அவன் பருக ஆரம்பிக்க, இவளும் சாப்பிடலானாள். முள் கரண்டியைப் பற்றியிருந்த விரல்கள் நடுங்கின. அது பசியா...துக்கமா என்று விளங்கவில்லை.

அவன் ஜன்னலைத் திறந்து இருட்டின் பின்னணியில் வெளிச்ச வியர்வையை முத்துக்களாய் பெருகியிருந்த நகரின் அழகை வெறித்தபடி தேநீரை சுவைக்க, இவளும் முழுக்க சாப்பிட்டு முடித்தாள்.

பாஸ்கர் பழத்தட்டில் இருந்த ஒரு பேரிக்காயைக் கழுவி துண்டமிட்டு நீட்ட, அதிலும் இரண்டை எடுத்து மென்றாள். அதன் பிறகு தேநீர்...

இப்போது விரல்களின் நடுக்கம் மனதின் பதட்டம் இரண்டுமே விலகியிருப்பது புரிய, சற்று நன்றியோடு அவனைப் பார்த்தாள்.

''இப்ப படுத்துக் கொஞ்சம் தூங்க முயலுங்க பத்மினி. நான் முன்னறையில் இருக்கேன்'' என்றபடி எழுந்தான். ''உங்க ஆலயப் பாதிரியிடமும் பேசணும். அவங்க உதவியிருந்தா சிரமமில்லாமல் சீக்கிரம் நீங்க பாரிசை விட்டுக் கிளம் பிடலாம்.''

''டிக்கெட்... அந்த அளவு பணம்...''

''அதெல்லாம் பிரச்சினையில்லை... நான் பார்த்துக்கறேன்'' அவன் அதை சற்று அலட்சியமாக சொன்னது பிடிக்காமல் போக.

''நான் உங்களோட இந்தியா வர்றதாய் இன்னும் முடிவு பண்ணலை'' என்றாள் சற்று கடுகடுப்பாய்.



''வருவது உங்களுக்கு நல்லது - அதிலும் என் மனைவியாய் வர்றது நல்ல பாதுகாப்பு'' என்றான் அவன் கறாராய்!

## 4

ஆட்டைக் கொழுக்க வைத்து பலிபீடத்திற்கு இழுத்துப் போவது போல இதென்ன அநாகரிகம்! பசியாற்றிவிட்டு, 'என் பத்தினியாகு' என்று கட்டளையிடுகிறாரே?

பிணமீன் தான் ஆற்றோடு போகும் - மற்றவைக்கு எதிர்த்து நீந்தும் ஆற்றலுண்டு. சற்று முன் வெறும் வயிற்றில் வெற்று எதிர்காலம் பற்றி யோசிக்க பயமிருந்தது நிஜம். ஆனால், இப்போது தெம்பேறிவிட்டது. இத்தனை கோடி மக்கள் வாழும் பூமியில் தனக்கு மட்டும்தானா பிழைக்க வழி கிடைக்காது என்ற துணிவு.

'மனைவியாய் வருவது' பற்றி சொன்னவன் அது இவளில் கிளப்பிய அதிர்ச்சியை பற்றி அலட்டிக் கொள்ளாமல் ''போய் படுங்க பத்மினி. நாளை நிறைய பேர் வருவாங்க. அத்தனை பேர்கிட்டேயும் பேச வேண்டியதிருக்கும்'' என்றபடி விலகினான்.

கதவைத் தாழிட்டுவிட்டு படுத்து ஒரு மணி நேரமாகியும் உறக்கம் இவளை நெருங்கவில்லை. புரண்டு புரண்டு தவித்தாள். பார்க்க பயங்கரமானவராய் தெரியாவிட்டாலும் இவர் ஆபத்தானவரோ? இன்றைக்கென்று தாத்தா இவரை வரச் சொல்லுவானேன்?

வானொலி முறையைக் கண்டு பிடித்த மார்க்கோனி முதன் முதலில் வானொலி வழியாக விடுத்த செய்தியை அவள்



வாசித்திருந்தாள் - 'என் இளமையில் ஆலயத்தில் பிரார்த்தித்திருக்கிறேன். 'பரமண்டலங்களில் உள்ள எங்கள் 'பிதாவே' என்ற ஜெபத்தைப் பற்றி சந்தேகப்பட்ட நான் இன்று எங்கோ இருந்துதான் நான் பேசுவதை நீங்கள் எங்கிருந்தோ கேட்கிறீர்கள் என்று உணரும்போதும், நாம் எழுப்பும் எந்த ஒலியையும் பரமபிதா கட்டாயம் கேட்பார் என்று உறுதியாய் நம்புகிறேன்.' ஆக இவளது ஜெபத்திற்கான பதில்தான் இவனது வருகையா?

தாத்தா அது பற்றி அதிகம் பேசியதில்லை என்றாலும் தன் ஒரே பேத்தியைப் பற்றிய கவலை அவர் உயிரைப் பாதித்திருக்கும். அந்த வேதனையோடு எழுப்பிய ஜெபத்திற்கு பதிலாக வந்தவரோ இவர்? அல்லது தாத்தாவின் கவலை சரியானதுதான் என்பதை மெய்ப்பிக்க வந்த கயவனா?

ஊகூம்... அப்படித் தோன்றவில்லை. தாத்தா தன் இரவு உணவை முடித்ததும் போடும் மருந்தினால் கிறக்கமாய் கிடப்பார். இளைப்பு குறைந்து எழும் நேரம்தான் இவரை வரச் சொல்லியிருக்கிறார். ஆக நேரம் சரி... ஆனால் நாள்... குறிப்பாக இன்று... இதுதான் விதியின் விளையாட்டா? அல்லது கடவுளின் கருணையா?

வீட்டில் தாத்தாவின் சடலத்தைத் தவிர இவ்வீட்டில் மற்றுமொரு உயிர் இருப்பது துணைதான். ஆனால், பார்த்த முதல் சந்திப்பிலேயே அவன் 'மனைவி' என்று விட்டதுதான் உதைக்கிறது. சாவு வீட்டில் இப்படி பேசுபவர் போகப் போக எப்படி இருப்பார் என்ற திகைப்பு...

கதவு பலக்கத் தட்டப்பட்ட பிறகே முழிப்பு வந்தது. மறுகணம் சூழ்நிலை உறைக்க,

என்ன இது சமய சந்தர்ப்பம் இல்லாத தூக்கம் என்று தன்னையே கடிந்து கொண்டவள் ஓடிப்போய் கதவைத் திறந்தாள். நின்றது டாக்டரின் மனைவி.

உடைந்த ஆங்கிலமும் சைகைகளுமாய் அவள் சொன்னபடி செய்தாள் பத்மினி. ஐரோப்பிய வழக்கத்தின்படி இழவு வீட்டார் கறுப்பு உடுத்த வேண்டும். தன்னிடமிருந்த கருநீலச் சேலையைச் சுற்றியவள், இரவலாய் தரப்பட்ட கறுப்பு கோட்டையும் மாட்டிக் கொண்டாள்.

பெட்டிக்குள் நிச்சலனமாய் படுத்திருந்த தாத்தாவை ஓடிப்போய் பார்த்தவளுக்கு அழுகை முட்டியது. அழுது முடித்தபின் மனதோரம் அந்த நினைப்பு... இரவு வந்தவரை எங்கே? வீட்டின் அறைகளை நோட்டமிட்டாள்.

அவரது பெயரைக்கூட கேட்கவில்லையே? ஒரு வேளை அத்தனையும் கனவோ? மனம் அதிர்ச்சியில், துக்கத்தில் பேதலித்து ஏதேதோ கற்பனைகளைப் பின்னுமாமே... அப்படித்தானா?

ஒரு வலிமையான, கரிசனையான ஆண் வந்து தன்னை மனைவியாக்கி, இந்தியாவிற்கு அழைத்து போய் விட மாட்டானா என்ற ஏக்கம்தான் நிஜம் போலத் தோன்றியதோ? வீட்டில் சிலர் வந்து கூடினர்.

ஆலய குருவானவர் வந்து தலைமாட்டில் இரு பெரிய மெழுகு வர்த்திகளைக் கொளுத்தி வந்து ஜெபித்தார். கால்மாட்டில் வைக்கப்பட்ட லில்லி ஆரம் தன்பாட்டிற்கு மணத்தது. யாரோ சி.டி.யில் மோட்ச வாழ்வு பற்றிய கீதங்களை சுழலவிட, வீட்டின் தன்மையே மாறியது.

பலர் வந்து, மலர் அஞ்சலி செலுத்தி இவளிடம் ஆறுதலாய் சில வார்த்தைகள் சொல்லிவிட்டு நகர்ந்தனர். இவளுக்குள்



அவனது நினைப்பே வண்டாகக் குடைந்தது. திடும்மென வந்தவர் அப்படியே மறைந்துவிட்டாரா?

வெர்ஷெயிலில் பிசினஸ் சம்பந்தமான சந்திப்பு இருப்பதாய் சொன்னது...? இல்லை அத்தனையும் தன் கற்பனைதான் போலும். சற்று இறுகி வெளுத்திருந்த தாத்தாவின் சடலத்தைப் பார்த்தாள். இது மட்டும்தான் நிஜம்.

மரணம் மட்டும்தான் மாறாதது... ஆனால், தனக்கு அது என்றோ நேரும்வரை தன் வாழ்வு கழியப்போவது எப்படி? இருந்த ஒரே உறவும் போயாயிற்று.

கடந்த இரண்டு வருடங்களில் தாத்தா, தன்னைக் கொஞ்சியதில்லை, சீராட்டியதில்லை. 'என்ன இஷ்டம்?' என்று கேட்டு வாங்கித் தந்ததில்லை. ஆனால், உள்ளான பாசமும் பாதுகாப்பும் தந்த ஒரே உறவு...

அவளையும் மீறிய கேவலில் உடல் துடித்தது. ஆதரவாய் யாரோ அவளைப் பக்கவாட்டில் அணைத்தார்கள். சாய்ந்த தோள் வலிமையாயிருந்தது.

''அழாதே பத்மினி. உள்ளே வந்து கொஞ்சம் சாப்பிடு வா...''

அந்தத் தமிழ் பேச்சில் விதிர்த்து நிமிர்ந்தாள். ''நீங்களா... எப்போ... எங்கே?''

''பக்கத்து வீட்டு அம்மாகிட்ட உன்னைப் பார்த்துக்கச் சொல்லிட்டுதான் போனேன். இன்று வெர்ஷெயில் வர முடியாதுங்கறதைத் தெரிவிக்க வேண்டியிருந்தது. என் ஓட்டல் அறைக்குப் போய் குளிச்சு கறுப்பு டிரஸ் போட்டுட்டு உனக்கு ரெண்டு சான்ட்விச் வாங்கிட்டு வந்தேன். வா...''



மென்ற ரொட்டி தொண்டையில் விக்கியது. வீடு பழகியவனாய் தேநீர் தயாரித்தவனைப் பார்த்தவள் தன்னையே கிள்ளிக் கொண்டாள்.

ஆக நேற்றிரவு நடந்ததெல்லாம் கனவல்ல... நிஜம்!

தென்றல் அதரவாய் அவளை வருடியது. கல்லறைத் தோட்டம் வரை வந்திருந்த சொற்ப கூட்டம் கலைந்திருந்தது. இனி வீட்டிற்குப் போய் குளித்துவிட்டு, தனியே அழலாம் அல்லது படுக்கலாம்.

தாத்தா இல்லாத வீடு இனி அசல் சமாதியேதான்... சக்கையாய் பிழியப்பட்டது போல நின்றாள். இதுவே இந்தியாவில் அவர்களது சிற்றூராய் இருந்தால் சுற்றிலும் நூறு பேர் நின்று அழுது அரற்றியிருப்பார்கள்.

'யப்பூ... உன்னை இப்படி அநாதையாக்கிபுட்டு போயிட்டாகளே...'

'உன்னைய ஒருத்தன் கையில பிடிச்சுக் கொடுத்திருக்க மட்டும் இருக்கக்கூடாதா?'

'பயப்படாதடா... கடவுளு இருக்காரு... பாதிரி வீட்டுக் குழந்தைய கைவிட்டுருவாரா?' இப்படி ஆறுதல் படுத்த முயலுவார்கள்.

''போலாமா பத்மினி...'' அவன் கேள்வியே ஆறுதலாயிருந்தது.

''என்ன அப்படிப் பாக்கறே...?'' வெகு இயல்பாய் ஒருமைக்குத் தாவிவிட்டிருந்தான்.

''உங்க பேர் இன்னும் எனக்குத் தெரியாது...''



முறுவலித்தான். ''அதொன்னும் பிரமாதமில்லை... பாஸ்கர்...''

வீடு போய் குளித்து, உடைமாற்றி முன்னறைக்கு வந்தவளை அறைகளின் சுத்தம் ஆச்சரியப்படுத்தியது. காய்ந்த ஒரு பூவிதழ்கூட இல்லை.

''ரெண்டு பேரை வச்சுச் சுத்தப்படுத்தினேன்... சாப்பிடலாமா?'' தானும் அவனை அந்நியனாய் கருதாதது அவளுக்குப் புரிந்தது. எதனால்? மொழியா, பிரியமா, அல்லது இரண்டுமே காரணங்களா?

''நேற்றைக்குப் போலவே டாக்டர் வீட்டிலேருந்து சாப்பாடு வந்திருக்குது... இன்னைக்கு எனக்கும் சேர்த்து...'' முறுவலித்தான்.

''ம்ம்...''

''இங்கே எல்லாம் ரொம்ப அமைதியாய் சட்டுனு முடிஞ்சது. நம்ப ஊரிலேன்னா மூணு நாளைக்கு உறவுக்காரங்க இருப்பாங்க... கூட்டம் சத்தம்னு...''

''அதுவும் நல்லதுதான். நாம இனி தனிங்கற பயம் வராது.''

''உண்மைதான்'' சாப்பிட்டபின் தேநீரோடு ஜன்னல் பக்கமாய் அமர்ந்தனர்.

''தாத்தா இருந்தா இப்படி ஜன்னலைத் திறக்க முடியாது... குளிர் காற்று. அவருக்கு ஆகாது'' காற்றை அனுபவித்தபடி சொன்னாள்.

''வெளிச்சமும் படாம வெளிறித் தெரியறே...''

''என்னால உங்க வேலை இன்னைக்குக் கெட்டுடுச்சு...''

''ஒத்திப்போட்டாச்சு... அவ்வளவுதான். என் ஊர் மதுரைக்குப் பக்கத்திலே கிராமம்தான். எங்களுக்கு நூற்றுக் கணக்கான ஏக்கரிலே தோட்டங்க உண்டு. வாழை, தென்னை, மான்னு விதவிதமாய்... மஞ்சளாறு பாசனத்துல வளமான பூமி. மலையிலே பேரித் தோப்பும் உண்டு. பழங்களை எல்லாம் உலர்த்தி ட்ரைஃப்ரூட்ஸ்ஸாய் விற்கிறோம்.''

''வற்றல் மாதிரியா?''

''ஆமா. அத்தனையும் ஏற்றுமதி ஆயிடும். நம்மூரில் பழத்தை அப்படியே சாப்பிடத்தான் விரும்புவோம். மாம்பழ வற்றலுக்கு ஜெர்மனியில் அமோக வரவேற்பு.''

''பிரான்சுக்கு...?''

''இதுவரை இல்லை. அதுபற்றிப் பேசணும். வியாபாரம் கைகூடி வருது. ஆனால் வந்த முக்கிய நோக்கம் அந்தக் கல்யாணச் சான்றிதழ்தான். எல்லா சொத்தும் எங்கப்பாவுக்கும் ஏன்ஜலின் அத்தைக்குமாய் உள்ளது. அத்தை... அதாவது அப்பாவுடைய தங்கைதான் இருபத்தியோரு ஆண்டுகளுக்கு முன்னே பிரான்ஸில் கல்யாணம் செய்துகிட்டாங்க...''

''அதற்கான சான்றிதழைத் தேடி நீங்க வந்திருக்கீங்க...?''

''ம்ம்... அவங்களுடையது காதல் கல்யாணம். குடும்பத்தில் அப்பமே ஏற்றுமதி தொடர்புகள் இருந்ததாலே, ஜெர்மனியில் வியாபாரம் பேச ஜெர்மன் மொழி தேவைப்பட்டது. மொழி பெயர்ப்பாளர் தயவும் வேண்டியிருந்தது. அப்படிப் பழக்கமானவர்கள் கருணாகரன். பாண்டிச்சேரியில் படிச்சவர். சரளமாய் பிரெஞ்ச்சும் ஜெர்மனும் பேசுவார். தொழில் முறையில் வந்தவர் எங்கக் குடும்பத்தோட நெருங்கிப் பழகி... அத்தை மனசையும் வசப்படுத்திட்டார்...''



''உங்க அத்தைகூட அவர் மனதை வசப்படுத்தி யிருக்கலாமே...''

தன்னையும் மீறி சொல்லிவிட்டவள், அவசரமாய் வாய் மூடிக்கொண்டாள்.

புருவம் உயர்த்தி ஆமோதித்தவன், ''சொன்னதில் தப்பில்லை... காதலில் எல்லாம் சாத்தியந்தான்'' என்றான் மெள்ள... ''ஆனால் லேசில் பெரியவங்க சம்மதம்தான் கிடைக்கறதில்லை. அங்கேயும் பெற்றவங்க எகிற; காதல் ஜோடி இங்கே வந்து கல்யாணம் செய்துகிட்டாங்க. இங்கே சில ஆண்டுகள் இருந்த பிறகு, அனுவோட... அதாவது அவங்க மகளோட இந்தியா திரும்பினாங்க...''

பேச்சு சுவாரஸ்யத்தில் முழுக்க, சாப்பிட்டவள், இருவருக்குமாய் தேநீரும் தயாரித்தாள். கணப்பருகே அமர்ந்து பருகியபடி கதை தொடர்ந்தது.

''அவங்க கல்யாணச் சான்றிதழை இப்போ காணோம்... ஆனால் அது தேவைப்படும் சூழல் உருவாயிடுச்சு. மாமாவுடைய டைரியிலேருந்து கல்யாணமான சர்ச், தேதி விவரங்களை அறிஞ்சதால சுலபமாய் தேடி எடுக்கவும் முடிஞ்சது.''

''இதுக்காக அயல்நாடு வர்ற அளவு கட்டாயம் என்ன?''

''அத்தை இளம்வயதிலேயே இறந்துட்டாங்க. கான்ஸர். அனு அவங்களுடைய ஒரே மகள். மாமா மறுவருடமே கல்யாணம் செய்துகிட்டார்... அப்ப அனுவுக்குப் பத்து வயது இருந்திருக்கும். எங்கப்பாவின் பாதி சொத்துக்கு நான் வாரிசுன்னா, மறு பாதிக்கு வாரிசு அனுதான். போன வருடம் ஒரு விபத்தில் மாமாவும் இறந்திட... கொஞ்சம் பிரச்சினை...''





''சொத்து சம்பந்தமாய்...?''

''ம்ம்... சின்னத்தை, அதாவது அனுவுடைய சின்னம்மா தனக்கும் கணவர் சொத்துல பங்குண்டுன்னு கேஸ் போட்டிருக்காங்க. மாமாவுக்கான உரிமை அவர் அத்தையுடைய கணவருங்கற முறையில்... ஆனா சின்னத்தை இப்போ அரைகுறை வக்கீல் சொல்றதை வைச்சு புதுசாய் கதை பின்னறாங்க. அதாவது அனுவுக்கே சொத்தில் பாத்தியதை கிடையாதாம். அனு ஏஞ்சலினுடைய மகள்தான் என்றதுக்கு என்ன சாட்சி? அவளைப் பெத்தவங்க கல்யாணத்துக்கான ஆதாரம் எங்கே? நம்மூர் மாதிரி அதற்கான சாட்சியாய் மாலையும் கழுத்துமாய் எடுத்துகிட்ட ஒரு போட்டோகூட இல்லைன்னு...''

''இப்போ பிரச்சினை தீர்ந்திடுச்சு இல்லையா?''

''இன்னொரு பிரச்சினையும் இருக்குது பத்மினி... அதுவும் நீ மனசு வச்சா தீர்ந்திடும்...'' என்றான் அவன் அவளது முகம் பார்த்து.

## 5

பத்மினிக்கு நம்ப முடியவில்லை. நான்கு நூற்றாண்டு களுக்கு முன் பிரான்ஸின் 'சூரியராஜ்' என்று வர்ணிக்கப்பட்ட 14-ம் லூயின் அரண்மனையில் தான் நின்று, நடப்பதை நம்பவே இயலவில்லை.

தாத்தாவின் இருட்டு வீட்டில் அடைந்து கிடந்தபோதும் அவளுக்குள்ளே இந்த மாளிகையைப் பற்றி பல கற்பனைகள்... அத்தனையையும் மிஞ்சுமளவு இருந்தது நிஜம்.



திரும்பிய பக்கமெல்லாம் தங்கப்பூச்சு... நுண்ணிய வேலைப்பாடு... பளிங்கு... மனிதனின், செல்வம் திறமை, ஆர்வம், கர்வம் எல்லாம் சேர்ந்து உருவாக்கிய சிறுநகரம் 'வெர்ஷெய்ல்' அதன் நடுவே பகட்டான மாளிகை.

ராஜாவின் கொலு மண்டபத்தை மட்டும் பத்து நிமிடங்கள் வாய் திறந்து பார்த்திருந்த பத்மினிக்கே அடுத்த ஒரு மணி நேரம் கால் கடுக்க அதே போன்ற ஆடம்பர அறைகளைப் பார்த்த பின் திகட்டிப் போனது.

இரு நிமிடங்களுக்கு ஒரு முறை மன்னனின் சிலையோ சித்திரமோ கண்ணில் பட, ''தான் என்ற எண்ணம் ஜாஸ்தி போலும்'' என்று முணுமுணுத்தாள்.

''அவரையும் குற்றம் சொல்ல முடியாது பத்மினி... அவர் வைக்கப்பட்ட உயரம் அப்படி. ராணி மரியாவுக்குப் பிரசவ நேரம். அவள் வலியால் துடித்த சமயம், மன்னர் லூயி வைத்தியர்களிடம் கேட்டாராம், 'எப்போ குழந்தை பிறக்கும்'னு...''

''நீங்கள் எப்படிக் கட்டளையிடுகிறீர்களோ அப்போது மன்னா'' என்றார்களாம் வைத்தியர்கள் பவ்யமாய்!''

பத்மினி சிரித்தாள். ''அட்டகாசமும் அதிகாரமுமான வாழ்க்கைதான்... இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''இங்கே தரப்பட்ட குறிப்புப் புத்தகத்தை வாசிச்சேன் அம்மணி.''

''ஓகோ?'' அதன்பிறகு அவளும் அப்புத்தகத்தை சுவாரஸ்யமாய் வாசித்தாள்.

வெளியே வந்தபோது, சுற்றிலும் சமவெளியில் நீள ஓடிய தோட்டம் அவர்களை மலைக்க வைத்தது. ஒரு அமெரிக்க டூரிஸ்ட் கும்பலுக்கு அது பற்றி விளக்கிக் கொண்டிருந்தார் 'கைட்.'''கண்ணுக்கு எட்டியவரை போகும் இத்தோட்டம், மன்னரின் எல்லையற்ற அதிகாரத்தைக் குறிக்கும் வகையில் அமைக்கப்பட்டதாக...''

''அதிகாரம் போதைதான் இல்லையா?''

''நிச்சயமாய்... பணமும் போதைதான். எத்தனை வந்தாலும் திருப்தி வராது! மேலும் கிடைக்கலைன்னா வெறியே கிளம்பிடும். அனுவுடைய சித்தியைக் கெட்டவங்கன்னு சொல்ல முடியாது. ஆனால் சொத்துக்காக அவங்க கையாள்கிற வழிமுறைகள்... ரசிக்கக் கூடியதாய் இல்லை.''

''அன்னைக்கு ஏதோ சொல்ல வந்தீங்க... என்னால உங்க பிரச்சினையைத் தீர்க்க முடியும்னு...''

''சொல்றேன்... அத்தனையையும் உடனே கொட்டிக் கவிழ்க்க மனசில்லை. நீயும் ரொம்பக் களைச்சுத் தெரிஞ்சே...'' அவளைப் புல்வெளியில் ஆங்காங்கே கிடந்த மர இருக்கையில் அமர வைத்தவன், அருகிருந்த சிற்றுண்டி சாலைக்குப் போய் சூடாய் சாஸேஜ் அடைத்த உருட்டு பன்னும், சிலீரென்ற 'கோக்கு'மாய் வந்தான். அப்போதுதான் தன் பசி அவளுக்கே உறைத்தது.

''தாங்க்ஸ்...''

''அனுவுடைய சித்தி...'' ஆரம்பிக்க

''அவங்க பேர் என்ன?'' என்று பத்மினி குறுக்கிட்டாள்.

''ஷீலா... அவங்க குணம் மாறிடுச்சு... சொத்துல பங்கு கேட்க ஆரம்பிச்சவங்க அனுவுடைய பிறப்பையே



கேள்விக்குறியாக்கினாங்க. அப்புறம் அவங்க உறவில் அவளுக்கு ஒரு மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்தாங்க... அவள் மனதில் வேறு ஒருத்தன் உண்டுங்கறது தெரிஞ்ச பிறகும்.... இதெல்லாம் தப்பில்லையா...?'' அவன் குரல் கடுமையானது. ''இதனால் உறவுல கசப்பு கண்டுருச்சு... ஆக இப்போ அனு எங்கூடத்தான் இருக்கறா... இருக்கவும் பிரியப்படறா...'' இப்போது அவன் முகத்தில் புன்னகையின் இளக்கம்.

''அனுவுக்கு என்ன வயசு?''

''இப்பதான் பட்டப் படிப்பு முடிச்சா... ஸோ... இருபது. உடனே கம்ப்யூட்டர் கோர்ஸ் ஒன்னை எடுத்துப் படிக்க ஆரம்பிச்சாச்சு. இப்ப பரீட்சை சமயங்கறதால ரெண்டு வாரமாய் மதுரையில் தங்கியிருக்கா...''

''கஷ்டந்தான்.''

''தினம் அவளுக்குப் போன் போட்டிடுவேன். தவிர அனு படிச்சது ஹாஸ்டல்ல தங்கித்தான். நாங்க இருந்தது கிராம மாச்சே... ஆக அவள் கொஞ்சம் சுதந்திரமான பேர்வழி...''

''பாவம்'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தவளை முந்திக் கொண்டு தொடர்ந்தான்.

''ஹாஸ்டல்ல இருந்தாலும் ஒவ்வொரு வீக் - என்ட்டும் அனுவைப் போய் கூட்டிட்டு வந்திடுவோம். வீட்டுக்கு வந்திட்டா அவதான் எல்லோருக்கும் மகாராணி...''

''உங்க குடும்பத்து சூரிய ராணி!'' சேர்ந்து சிரித்தனர்.

''அதிலும் அவள் மேல எனக்கு அலாதிப் பிரியம்...'' அவன் முகம் சற்று சிவந்ததை வியப்புடன் கவனித்தாள் பத்மினி, அவனது பருத்த உதடுகள் மிருதுவாயின.



''நானும் முன்பே தகப்பனை இழந்தவன். பெரும்பாலும் வெளியூரிலேயே படிச்சேன். எங்க குடும்பத்தில் நான்தான் கடைசி. மற்றவங்க ஏவின எனக்கு நான் ஏவுற மாதிரி கிடைச்ச அனு பிடிச்சுப் போனா...''

புரிகிறது என்பதாய் தலையசைத்தாள்.

''ஆனா இப்பவும்... அதாவது மற்றவங்க இல்லாமல் நான் மட்டும் தனியாய் இருக்கற வீட்டில் அனு என்னோட தங்கறது ஷீலாம்மாவுக்குப் பிடிக்கலை. அதான் சொன்னேனே. அவங்க திட்டமே வேற... அதனால இப்படித் தனிமையான பண்ணை வீட்டில் ஒரு சின்னப் பொண் தங்கணும்னா... தகுந்த பெண் கூடத் துணையிருக்கணும்னு சொல்றாங்க...''

''சொல்வதிலேயும் தப்பில்லை...''

''சரிதான். நான் முறை மாப்பிள்ளை. அதோடு கல்யாண மாகாதவன். ஆனால் எங்க வீட்லதான் அனு பிறந்து வளர்ந்ததெல்லாம். இனியும் அவள் அங்கேயேதான் இருக்கணும்னு நான் விரும்பறேன்...''

''உடனே கல்யாணம் செய்துகிட்டால்...?''

''அதுக்கும் வழியில்லை. மாமா, அதாவது அவனுடைய அப்பா அவள் 21 வயது பூர்த்தியாகவும்தான் கல்யாணம் செய்துக்கணும். சொத்துக்களும் அப்பதான் அவள் கைக்குப் போகலாங்கற மாதிரி உயில் எழுதிட்டாங்க.''

''உயிலா... அவர் இத்தனை சீக்கிரம் தான் சாகப் போறதை எதிர்பார்த்தாரா?''

''மாமா வெளிநாட்டில் புழங்கினவர். முதல் மனைவி இளம் வயதிலேயே இறந்ததைப் பார்த்தவர். அதனால செய்த ஏற்பாடு.''



''இதுபோல நீங்க அடிக்கடி பயணம் செய்றதுண்டா?''

''ம்ம்... அனு எப்பப்போ பரீட்சை, படிப்பு, சிநேகிதி வீடுன்னு கிளம்பறாளோ அந்த சமயமாய் பார்த்து என் வெளியூர் வேலைகளை முடிச்சிடுவேன்...''

''அக்கம் பக்கத்துல வீடுகள் இல்லாத பண்ணையில் அனுவுக்கு எப்படி பொழுது போகும்?''

''எதையாவது இழுத்துப் போட்டு செய்வா... நல்லாவே படிப்பா... ஆனா இப்பெல்லாம் சின்னம்மா வேற மாப்பிள்ளை பார்க்கற பிரச்சினையில் கொஞ்சம் சோர்ந்து தெரியறா... படிப்புக்காக அடிக்கடி மதுரை போவா... எல்லாம் கல்யாணம் வரைதான். அடுத்த ஆண்டு அத்தனையையும் மூட்டைக் கட்டிட்டு வீட்டோட இருந்தாலும் இருந்திடுவா...'' எதையோ நினைத்து ரசிப்பது போல பாஸ்கர் சிரிக்க, இவளுக்குக் கூச்சமாயிருந்தது.

''ஷீலாத்தை திடீர்னு கல்யாணமாக வேண்டிய பொண்ணு உங்கூட தனியே இருக்கிறது தப்பு பாஸ்கர். உனக்குக் கல்யாணமாகி உன் மனைவி அந்த வீட்ல இருந்தால் பிரச்சினையில்லை. இல்லைன்னா அனு எங்கூடத்தான் இருக்கணும். இல்லை அவள் படிக்கிற கல்லூரி விடுதியில் தங்கட்டும். அதுவும் முடியாதுன்னா மதுரையிலேயே ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து நான் அவளுக்குத் துணையாய் இருக்கறேங்கறாங்க...''

''அவங்க எங்கே இருக்கிறாங்க?''

''பக்கத்து பண்ணைதான். மஞ்சளாறுக்கு அப்பால் உள்ள தோட்டத்துல மாமா நவீனமாய் வீடு கட்டியிருந்தார். அனு ஆண்டுக்கு ரெண்டு நாள் அங்கே போய் இருந்தால் அதிகம். அவள் வீடு இங்கேதான்... எப்பவுமே.''

''ஆனா சின்னம்மா சொல்றதும் முறைதான். குடும்பத்துக்குப் பெரியவங்க என்ற முறையில்...''

''அதுதான் இப்ப என் பிரச்சினை பத்மினி. சின்னத்தை திட்டத்தை அதே போல இன்னொரு திட்டத்தால் முறியடிச்சுடலாம். அதாவது வைரத்தை வைரத்தால் அறுக்கறாற்போல... இப்ப அதுக்கு எனக்கு ஒரு மனைவி தேவை. இன்னும் சில மாதங்களுக்கு... ஏறக்குறைய ஒரு வருடம்... அதாவது அனுவுக்கு 21 வயது பூர்த்தியாகிற வரை!'' இதுவரை அவளைக் குழப்பிய அவளது பேச்சு இப்போது தெளிவாயிற்று.

காமிராவின் போகஸ் பொருந்தினாற்போல... பாஸ்கரனுக்குத் தன் அத்தை மகள் மீது பிரியம். அவனை விட்டு சில காலம் கூட பிரிய விரும்பாத அளவிற்கு அப்பெண்ணிற்கும் இவன் மீது நேசம்தான். உடனே கல்யாணத்தை நடத்த முடியாத சூழல்... இடையே வேறு வரனோடு கெஞ்சும் அல்லது மிரட்டும் சின்னம்மா... எல்லாம் புரிந்தாலும் தன் முன் ஏனிந்த கோரிக்கை வைக்கப்படுகிறது என்பது புரியவில்லை. தான் ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டோம்? ஆனால், ஒரே நிமிட யோசனையில் பதிலும் கிடைத்தது.

யாருமற்ற அநாதையிடம்தானே இப்படி ஒரு' கோரிக்கையை வைக்கலாம்! இல்லாவிட்டாலும் பெற்றோரும் மற்றவரும் கத்தி ஆர்ப்பாட்டம் செய்துவிட மாட்டார்களா?

இருந்த ஒரே சொந்தத்தை இழந்தத் தன்னைப் பார்த்ததும் - 'அடடே... இதுதான் சந்தர்ப்பம்... இவள்தான் தோதான ஆள்' எனத் தோன்றியிருகக வேண்டும். கேட்டே விட்டான்.

மனதின் ரணம் சுயபச்சாதாபமாய் கசிந்தது.



''பேருக்கு என் மனைவியாய் இருந்... நடித்தால் போதும்... ஒன்பது இல்லை பத்து மாதங்களுக்குத்தான்... பிறகு...''

உலகில் பிரிக்க முடியாதளவு அழுத்தமானது பத்து மாதப் பந்தம்தானே என்ற நினைப்பு அவளுள் ஓடியது... ''புரியுது...'' என்றாள் அவள் ஒரு சோகப் புன்னகையுடன்.

## 6

''கடந்த ரெண்டு ஆண்டுகளாய் நீ துணிமணி வாங்கிட்டதேயில்லையா?'' அவன் கேட்டபோது அவளுக்கு மீண்டும் அழுகைத் துளிர்த்தது. அடங்கி விழுங்கினாள்.

பாசத்திற்கு ஏங்கிய மனம் இவன் ஏதேனும் கேட்டதும் குளிர்ந்து பொங்கிவிடுகிறது. இரு வருடங்களாய் பிறந்த நாள், பண்டிகை சமயங்களிலும் பழசையே உடுத்த நேரும்போது ஏமாற்றமாய்தான் இருந்தது.

'இதென்ன சிறுபிள்ளைத்தனம்? விசேஷ நாள்னா புதுசாய் கட்டினாத்தானா? வயிறார சாப்பாடுகூட இல்லாமல் எத்தனைப் பேருண்டு? நல்ல நாளில் நாம தேவையிலே இருக்கிறவங்களுக்கு எப்படி உதவி செய்யணும்னு யோசிக்கணுமே தவிர இப்படியில்லை...' தனக்குத்தானே உபதேசித்து மனம் தேறிக்கொள்வாள்.

இயன்ற அளவில் ஒரு இனிப்பு செய்து அக்கம்பக்கத்தாருடன் பகிர்வதில் சற்று திருப்தி வரும். அப்படி ஏற்படுத்திக் கொண்ட பழக்கத்தால்தான் தாத்தாவின் மறைவின்போது பிறரது உதவியும் கிடைத்தது... ஆனால், அச்சமயம் பாஸ்கர் வந்தது உதவி இல்லை - கடவுளின் கருணை.



''இதையெல்லாம் சுமந்துட்டு வரவேணாம் பத்மினி'' அவன் சொன்னதில் தவறில்லை என்றாலும் மூன்று சேலைகளைத் தவிர அப்பெரிய பெட்டிக்குள் தனக்கு வேறு உடமை இல்லை என்பதில் குறுகிப் போனாள். தாத்தாவின் நினைவாக சில பொருட்களை எடுத்துக் கொண்டாள்.

''பாம்பே போய் இறங்கினதும் உனக்கு வேண்டியவற்றை வாங்கிக்கலாம். பாரிசிலே செண்ட், கொஞ்சம் காஸ்மடிக்ஸ் மட்டும் வாங்கிக்கோ.''

''நான்... அதிக... அலங்காரமெல்லாம் செய்துக்கறதில்லை.''

''ம்ம்... அதற்கான அவசியமும் இல்லையே... ஆனால், பாரிசின் செண்ட் விசேஷம். அனு ஷீலா அத்தைக்குக்கூட வாங்கிக்கோ... அவங்களைக் குளிர்விக்க உதவும்... போனதும் அவங்க மேல் ஸ்ப்ரே பண்ணிடு'' குறும்புடன் கண் சிமிட்டினான்.

அப்போது வெகு இளையவனாய் தோன்றியவனை ஆச்சரியமாய் பார்த்தாள். பல கடைகளை ஏறி இறங்கியதிலேயே பத்மினிக்கு திருப்தியாகி விட்டது. மென்மையான மணம் பரப்பிய சில 'செண்ட்'களை வாங்கியும் கொண்டாள். தவிர சுற்றுலா பேருந்தில் ஏறி இருவருமாய் நகர்வலம் செய்தனர். கால்கடுக்கக் காத்திருந்து ஈபிள் டவரின் லிப்டில் ஏறி உயரே பாய்ந்தபோது தலை கிறுகிறுப்பின் ஊடே அக்கேள்வி உச்சந்தலையில் குடைந்தது.

''இவர் யார்...? இவருடன் எப்படி சேர்ந்து சுற்றுகிறேன்...? ஏன் இத்தனை சந்தோஷமாய் உணருகிறேன்...? சமாதி போல இறுகிக் கிடந்த தன் நாட்களில் ஜன்னல் காற்றாகி குளிர்விக்க வந்தவனை ஆனந்தமாய் அனுபவித்தாள். ஆனாலும் புத்தி குறுகுறுத்தது. இவளைக் கேள்வி கேட்டு திணறடித்தது.



பயணம் குறித்த கவலைகளை அவன் தரவில்லை. சில கையெழுத்துகளை வாங்கியதோடு சரி. தன் அப்பா அல்லது சகோதரன் இருந்திருந்தால் இப்படித்தான் நிம்மதியாய் தாய் நாட்டிற்கான பயணம், எதிர்காலம் பற்றிய கனவுகளுடன் இருந்திருப்பாள்.

தன்னை அவனது திட்டத்திற்கு உதவுமாறு கேட்டது உண்மை என்றாலும் நிர்பந்திக்கவில்லை... முதல் நாள் சற்று கறாராகப் பேசியவன், பின்னர் விஷயத்தை விளக்கினான். இவள் உதவுவாள் என்ற முடிவிற்கு வந்தது போல பட்டது. இந்த எண்ணம் பத்மினிக்கு ஆசுவாசம் தந்தது.

ஒரு இருட்டுக் குகைக்குள் வலுக்கட்டாயமாய் தன்னைப் போட்டு அடைப்பதற்கும், தானாய் ஆர்வத்துடன் அதற்குள் ஒரு கைவிளக்குடன் போய் ஆராய்ந்துவிட்டு வருவதற்கும் வித்தியாசம் இருக்கும்தானே!

தாத்தா தினம் பயன்படுத்திய நைந்த கனமான கோட்டை அவள் தன்னுடன் எடுத்தபோதும் அவன் தடை சொல்லவில்லை.

''தாத்தா ஏதும் காசு விட்டுட்டுப் போயிருக்காறா?'' என்று அவள் கேட்டபோது மட்டும் தயங்கினான்.

''இல்லை... என் டிக்கெட் செலவிற்காவது பணம் இருக்குமான்னு தான் கேட்டேன்... வேறேதுமில்லை...''

''இல்லை... நானே ரெண்டு டிக்கெட் வாங்கிட்டேன். ஆலய நிர்வாகிங்க தாத்தாவுடைய இறுதி சடங்கிற்கான செலவைப் போல உன் பயணச் செலவையும் தாங்களே ஏத்துக்கறதாய் சொன்னாங்க. ஆனா நான் அதை அவசியம்னு நினைக்கலை. நீ எனக்குச் செய்ற உதவிக்கு நான் இதையேனும் செய்றதுதான் நியாயம்.''

ஆக தாத்தாவிடம் காசில்லை. பென்ஷன் போல வந்த சொற்ப தொகையில்தான் தன்னையும் அழைத்து வந்து பராமரித்திருக்கிறார்.

இருந்த சேமிப்பும் இரு ஆண்டுகளுக்கு முன் இந்தியா வந்து தன்னை அழைத்து வந்ததில் கரைந்திருக்கும்... உடல் சுருங்கி சதா ஏதோ எழுதப் படிக்க என்றிருந்த தன் உறவை எண்ணி உருகினாள்.

மூடப்பட்ட நீள லாரிகள் வந்து ஃபைல்களை எல்லாம் எடுத்துப் போன பின் வீடு இன்னும் அர்த்தமில்லாததாய் தோன்றியது.

''பழகின இடம்... இங்கேயே இருந்துடறேன்'' என்று அவள் சொல்ல, ஒரு வாரமாய் அவள் வீட்டின் முன் அறையில் பாஸ்கரும் தங்கி விட்டான். அவள் அனுமதியையும் அதற்காய் அவன் பெறவில்லை! தன்னிடம் பேசும்போது அநாவசிய அனுசரணைக் காட்டாத அந்நியக் குரல். ஆனால், கரிசனையான செயல்கள்... அவளுக்கு பாஸ்கர் புதிராகவேத் தோன்றினான்.

ஆனால், அப்புதிருடன் அவளது பயணம் நிச்சயிக்கப்பட்டு விட்டது. சில மாதங்களுக்கான வாழ்க்கைப் பயணம்!

கடைசி இரவை ஒரு 'மெக்டோனல்ட்'டின் பர்கரை மென்றபடி அவர்கள் கழித்தபோது அவன் சொன்னது அவளது மிச்ச மீதி நெருடலை முற்றிலுமாய் அழித்துப் போட்டது.

''பத்மினி, நாம சேர்ந்துதான் போறோம். ஆனால், மதுரை ஏர்போர்ட் போன பிறகும் நீ சாயர்புரம் போறதாய் முடிவெடுத்தால் அதை நான் தடுக்க மாட்டேன். டாக்சி ஏற்பாடு செய்து தர்றேன்... எங்கூட வர்றதாய் சொன்னாலும் சரி. ஆகப்



பயண முடிவு வரை உனக்கு முடிவு எடுக்க அவகாசம் இருக்குது.''

''உங்க... உங்களோட வந்தால்...''

''உனக்கு உள்ளதிலேயே அதுதான் நல்ல உத்யோக மாயிருக்கும்... அதாவது என் மனைவியாயிருக்கிறது...'' கோக் உறிஞ்சியவன் சற்று குறும்புடன் சிரித்தான். அக்கோணல் சிரிப்பு தன்னை ஈர்ப்பதை சற்று பதட்டத்துடன் உணர்ந்தவள் தன்னையே அதட்டினாள்.

''இவர் வசீகரமெல்லாம் உனக்கில்லையடி... இன்னும் நீ பார்த்தறியாத அனு என்ற இவர் முறைப்பெண்தான் அந்த அதிர்ஷ்டசாலி.'' ஆனாலும் மனம் அடங்காமல் ஏதோ ஒரு ஆற்றாமையுடன் பெருமூச்செரிந்தது.

விமானம் சீராகப் பறக்க ஆரம்பித்திருந்தது. சீட் பெல்ட்டைத் தளர்த்திய பயணிகள் விமானப் பணிப்பெண் களை, 'நியூஸ் பேப்பர், ஜூஸ், பஞ்சு' என்று விதவிதமானப் பொருட்களைக் கேட்டு ஏவ ஆரம்பித்திருந்தனர்.

மும்பையை நோக்கிய பயணம் என்பதால் பெரும்பாலான பயணிகள் இந்தியர்கள். கலவையான இந்திய மொழிகள் காதுகளை வருடின. அதில் தெற்கத்தி தமிழும் இருந்தது.

'அவம் பண்றான் இவம் பண்றான், நானும் பண்றேன்னு காலை வுட்டுறக்கூடாதுல்ல அண்ணாச்சி? எக்ஸ்போர்ட்டு தொழில்ல அதுக்குண்டான நூறு நேக்கு போக்கு இருக்குல்லா? அம்புட்டும் தெரிஞ்சுட்டுப் பிறவு யோசிங்க... என்ன நாஞ் சொல்றது?'' ஒருவர் பேச மற்றவர் தலை ஆட்டியபடி இருக்க, அவர்களை இவள் ஆசையாய் பார்த்தாள். நம்மூர் அண்ணாச்சிகள் அல்லவா?''



''அப்படிப் பார்க்காதேம்மா. அவுக வேற மாதிரி நினைச்சுடப் போறாக!'' பாஸ்கர் சீண்டினான்!

''ரெட் ஆர் வைட் சார்?''

காஷ்மீரப் பட்டுச் சேலையில் அகலப் பொட்டுடன் இருந்த பணிப்பெண் டிரே நிறைய சிறு மதுப் புட்டிகளுடன் வினவினாள்.

''ரெட் பார் மி... பத்மினி உனக்கு எது வேணும்?''

''எனக்கு... எது?''

''என்ன ஒயின் பிடிக்கும் - சிவப்பா வெள்ளையா?''

''ஐயையோ...!''

''அப்படியொரு ரகம் இருக்கிறதாய் நான் கேள்விகூட பட்டதில்லை.''

''நோ... தேங்க்ஸ்'' இவளே பணிப்பெண்ணிடம் மறுத்தாள்.

''பிரான்ஸில் தண்ணீரைவிட மது மலிவுன்னு சொல்வாங்க. பாரிஸ்ல இத்தனை நாள் இருந்த நீ ஒயின்னா அலறுறே?'' நமட்டுச் சிரிப்புடன் சீண்டினான்.

''யார்கிட்ட பேசறீங்க? ஒரு பாஸ்டரின் பேத்திகிட்ட அது வும் தென் இந்தியா கிராமத்தில் வளர்ந்த பொண்ணு நான்.''

''அதான் மனைவியாய் நடிக்க சம்மதிச்சுட்டா போல...'' அவன் சொல்ல, பத்மினியின் மனம் உடனே வாடியது. மனவாடலை முகம் காட்டிவிடாதிருக்க பெரும் முயற்சி செய்தாள். இத்தனை மன உளைச்சலுடன் வருபவளை இப்படியா கேலி பேசுவது?

இது ஆரம்பம்தான்... இதுபோல விளையாட்டாயும், வினையாகவும் நூறு பேச்சு கேட்க வேண்டியது வரும் என்று புத்தி எச்சரித்தது.



''ஆரஞ்ச் ஜூஸ் ப்ளீஸ்...'' இவள் கேட்ட பழரசத்தை பணிப் பெண்ணிடமிருந்து பெற்று இவளிடமாய் நீட்டியவன் தன் சிறு மது புட்டியை உயர்த்தினான். ''சியர்ஸ் சொல்லுவோமா?'' இவள் விழியின் வினா புரிந்தாற்போல விளக்கினான்.

''நான் குடிக்கறதில்லை... விமானங்கள்ல மட்டும்தான். தரையிறங்கினால் யார் நமக்கு இப்படி ஓசியில் வந்து நீட்டறா? இப்ப பக்கத்தில் நீயும் இருக்கிறதால் சியர்ஸ்.... நம் வாழ்விற்காக'' என்றபடி அவள் கையின் பழரச பாட்டிலுடன் தன்னுடையதை கொஞ்சலாய் தட்ட, கண்ணாடிகள் 'கிளிங்' என்று இனிமையாய் உரசின. அது தன் நிலை கண்டு சிரிப்பதுபோலப் பட்டது பத்மினிக்கு!

## 7

கன்வேயர் பெல்ட் அருகே பெட்டிகளின் வரவிற்காய் காத்திருக்கும்போது இவளருகே விமானப் பணிப்பெண்களும் சளசளத்துக் கொண்டிருந்தனர். விமானத்தின் உள்ளே கந்தர்வக் கன்னிகளாய் தோன்றியவர்கள் வெளியே சாதாரண, சராசரி பெண்களாகவே தெரிந்தனர்.

காரணம் அவர்களது சளசளத்த பேச்சு, அல்லது வேலை முடித்த அலுப்பாய் இருக்கலாம் என்று யூகித்தாள். அவர்களது பேச்சு தானாய் பத்மினியின் காதில் விழுந்தது.

''நெல்மணி தந்தால்தான் ஜோசியக்காரனுடைய கிளி சீட்டு பொறுக்கும். அதுபோல நம்மூர் மாப்பிள்ளைங்க வரதட்சணை வைச்சாதான் தாலி கட்டுவாங்க...''

''அவர் அம்மா கேட்கிறதாய் சொல்றார்...''

''சுத்தப் பொய். வீட்டுப் பொம்பளையைக் கேட்கச் சொல்லி முடுக்கிவிடறது ஆம்பளைங்க. காரியம் ஆனதும் மறுபடி அவளை அடுப்படிக்கு அனுப்பிடுவாங்க. மத்ததெல்லாம் பொம்பளைச் சொல்லித்தான் ஆகறதாக்கும்?''

''எப்படியோ இந்த வரனும் தட்டிப்போச்சு.''

''வேணாம் விடு. பேசாமல் பறந்துட்டே இருப்போம். கொஞ்சம் கவனமாய் காசை சேர்த்து வைச்சா காலம் முழுக்க ராணியாய் வாழலாம்.''

''தனிமைக்குப் பயந்துதானே கல்யாணத்தைப் பத்தி நினைக்கிறோம்?''

''நம்மளைப் போல ஒண்டிப் பொண்ணுங்க நாலு பேராய் ஒரு வீடு எடுத்துத் தங்கிடணும். துணையும் ஆச்சு. புருஷன்மார் பிடுங்கலும் இல்லை.''

''நல்ல ஐடியாதான்'' கவனமாய் பெல்ட்டில் வந்த தங்கள் பெட்டிகளை டிராலியில் எடுத்து வைத்தவள் -

சற்று தொலைவில் நின்ற பாஸ்கரைப் பார்த்தாள். மும்பையில் தங்கும் இடத்திற்கான ஏற்பாடுகளில் இருந்தான் அவன்.

நெல்மணி இன்றியே தனக்கு நல்வாக்குத் தந்த் அபூர்வக் கிளி அவன் என்ற நினைப்பில் அன்பால் நன்றிப் பெருகியது. முகத்தில் புன்னகை அரும்பியது.

''என்ன நம்ப ஊர் வந்துட்டோம் என்கிற சந்தோஷமா?''

''ம்ம்...'' சமாளிப்பதாய் தலையாட்டினாள். ஆனால், ஹோட்டலுக்குள் நுழைந்ததும் அப்படி எளிதாய் சமாளிக்க முடியாது என்பது உறைத்தது.



'மிஸ்டர் அன்ட் மிசஸ் பாஸ்கர்' என்றவன் ஒப்பமிட்டு அறைச் சாவியைப் பெற்றுக்கொள்ள, இவள் அருகே தத்தளித்தாள்.

லிஃப்டில் போகும்போது கண்களால் கெஞ்சினாள். ஆனால், அவன் அறைக்குள் நுழையும் வரை எதையும் கண்டுகொள்ளவில்லை.

''என்ன... நீங்க... இப்படி...?''

''டீலக்ஸ் ரூம்... வசதியாய் இருக்கும். நீ முதல்ல குளிச்சிடறியா?''

''தனித்தனியாய் அறை எடுத்திருக்கலாமே?''

''நம் நாடகம் இப்போதிருந்தே ஆரம்பிக்குது பத்மினி. ஏற்கனவே சொன்னேனே? சம்மதமில்லைன்னா சாயர்புரம் போயிடுன்னு...?''

சற்று எரிச்சலாய் உணர்ந்தாள்.

''தவிர நம்ம வீட்டிலேயும் ஒரே அறையிலேதான் தங்கவேணும். அதுவும் ஒரு வருடம் போல்... அதுக்கான ஒத்திகை இதுன்னு வை...'' மறுபடி அதே கோணல் சிரிப்பு... ஆனால், இப்போது அவளுக்கு அது அத்தனைக் கவர்ச்சியாய் தோன்றவில்லை.

குளித்தவள், குளியலறைக்குள்ளேயே அவசர அவசரமாய் உடை மாற்றிக் கொண்டு ஆமை போல வெளியே தலை நீட்டியபோது பாஸ்கர் அறையில் இல்லை.

இங்கிதமாய் பேசுவதில்லையேத் தவிர, செயல்கள் பரவாயில்லைதான் என்று மனதுக்குள் அவனுக்கு சான்றிதழ் தந்துவிட்டு, தன் தோற்றத்தைச் சீராக்கிக் கொண்டாள். உடுத்திய





சந்தன நிறச் சேலை அவளை சோகையாய் காட்டியது. மும்பையில் பளீர் வண்ணங்களில், பூச்சும் பூரிப்புமாய் வளைய வந்த பெண்களை ரசித்த அவள் கண்களுக்குத் தன்னை கண்களுக்குத் தன்னையேப் பிடிக்கவில்லை.

கதவு தட்டப்பட்டது. நுழைந்தது பாஸ்கர்தான்.

''குட்... நானும் ரெடியாயிடறேன். ஆனால், அந்நேரம் நீ வெளியே போகணும்னு நான் எதிர்பார்க்க மாட்டேன். படிச்சிட்டிரு'' செய்தித்தாளோடு சில பெண்கள் பத்திரிகைகளை நீட்டினான்.

ஆவலாய் வாங்கிப் புரட்டினாள். வழவழத்த காகிதத்தில் சிரித்த வனிதையரை பார்த்தாள். தங்களை அழகாய் காட்டும் வித்தையை நன்குப் பயின்றிருக்கின்றார்களே என்ற பாராட்டுடன் ரசித்தாள். பதினைந்தாம் நிமிடம் அவள் முன் வந்து நின்று, ''போகலாமா?'' என்றான்.

''எங்கே?''

''ஷாப்பிங்கை மும்பையிலே முடிக்கணுமே... உனக்கான உடைகள், நகைகள்...''

''மதுரை போய் வாங்கிக்கலாமே?''

''நீ இப்படி துவைச்சுக் காயப் போட்ட வண்ணத்துப் பூச்சி போல மதுரையில் போயிறங்க முடியாதே பத்மினி... பார்க்கிறவங்க நம்ப வேண்டாமா?''

இவள் பார்வையில் கேள்வியிருந்தது.

''நான் உன்னைக் கண்டதும் காதலில் விழுந்து கல்யாணம் வரை போனதை மற்றவங்க நம்பணுமே...''



''ஒரு வாரத்தில் காதல், கல்யாணம் வரைன்னா எனக்கே இந்தக் கதை நம்பக்கூடியதாய் இல்லை...''

''நான் தடாலடி முடிவுகளை அப்பப்போ செய்யறதுன்... தவிர உன் அழகைப் பார்க்கிறவங்க அதை நம்பிடுவாங்க. உன் குணத்தைப் புரிஞ்சதும் வேற சந்தேகம் எழாது. நாம ஷாப்பிங் முடிச்சதும் அதுலே ஒரு சேலையைக் கட்டிட்டு நாம ஜோடியாக ''போட்டோ எடுத்துக்கலாம். அதுவும் ஒரு சாட்சியாய் இருக்கட்டும்.''

''அது... அது அவசியமா? யாரும் நம்மை கல்யாணத்துக்கான சாட்சி எங்கேன்னு கேட்பாங்களா என்ன?''

''நாம முந்திக்கிட்டு இந்தப் படத்தை ஹால்ல தொங்கவிட்டுட்டா கேள்விகளே எழும்பாதே...!''

துணிந்தால் துக்கமில்லை என்று கேள்வி. ஆனால் துணிந்த பிறகும் இவளுக்குள் கேள்விகள் குமைந்தன.

''இதெல்லாம் முறையில்லையே...''

''முட்டாள்... முதல்லியே யோசிச்சிருக்கணும்'' என்று தன்னையே திட்டித் தீர்த்தாள்.

ஆனால் கடைக்குள் நுழைந்ததும் கலக்கங்கள் பின் வாங்கிவிட ஆர்வமாய் சுற்றி வந்தாள்.

''முதல்ல உள்ளாடைகளை வாங்கிடு. சேலைகளைத் தேர்ந்தெடுக்கும் சமயம் நானும் வரேன்'' என்று சற்று நேரம் விலகிய பாஸ்கர் இவள் சேலைகள் பக்கம் போனதும் கணக்காய் வந்து சேர்ந்து கொண்டான்.

''அந்தக் கிரே நல்லாயிருக்குது. பின்னி மில்ஸ் ...
எடுங்க...'' என்று ஆங்கிலத்தில் சிப்பந்திகளை பணி...

''எனக்கு அன்றாடம் கட்டுறாப்போல சேலைங்கதான் தேவை.''

''அதான் பார்க்கறோம்...''

''இதெல்லாம் ஆயிரம் ரூபாய், நூற்றைம்பதுக்கு நல்ல பூனம் கிடைக்கும். அதுவே ரவிக்கையோட சேர்த்து இருநூறு ஆயிடுமே...'' கவலைப்பட்டாள்.

''பாரிஸ் பியூட்டி இருநூறு ரூபாய் சேலையில் வந்து நின்னா பொருத்தமா இருக்காது. ராஜப்பாவே மோப்பம் பிடிச்சிடுவார்.''

''அது யார்?''

''எங்க சமையல்காரர். ஷகீலாத்தையே கன்வின்ஸ் செய்யணும்னா அதிஜாக்கிரதையாய் இருக்கணும்.''

ரவிக்கைக்கான அளவை அங்கேயே எடுத்துக் கொண்டார்கள். ''நாளை காலை ஓட்டலுக்கு தைத்த ரவிக்கைகளை அனுப்பிடறோம் சார்...''

''நல்லது... பத்து மணிக்குள்ளே...''

''எஸ் சார்... வேறென்ன பார்க்கறீங்க...?''

''விலை கூடியதாய்... வைபவங்களுக்கானதாய் சில உடைகள்.''

''ஷ்யூர்... இந்தப் பக்கம்...''

முத்து நகைகளில் சோக்கர், ஆரம், சரம் என்றிருந்தவற்றை இரசித்துக் கொண்டிருந்தவளிடம் ரோஜா நிற பிரோகேட் சேலையை பாஸ்கர் நீட்ட, மலைத்தாள்.



''அபூர்வமான நிறம்... எத்தனை வேலைப்பாடு.''

''அப்ப இதையும் சேர்த்திடுங்க.''

''நோ... இது அதிக விலை இருக்கும்.''

''இது நீ போட்டோவுக்குக் கட்டிக்கறதுக்காக... இதற்கான பிளவுஸை மட்டும் சாயங்காலமே...?''

''அனுப்பிடறோம் சார்'' எண்ணெயாய் நின்றான் சிப்பந்தி.

இவள் ரசித்து முத்து செட்டும் வாங்கப்பட, செருப்புகள், கைப்பை, தலைக்கான கிளிப்புகள் என பட்டியல் நீண்டது அடுத்ததாய் நகைக் கடைக்குப் போன போது இவளுக்கு தொண்டை உலர்ந்து விட்டது.

''இத்தனைக்கும் உங்ககிட்ட பணம்...?'' மென்று விழுங்கினாள்.

''ரொம்ப முக்கியமான சமாச்சாரம் வாங்க வேண்டிய திருக்குது.''

''ஒரு வேளை தாலியோ?'' என்றிவள் பதைக்க, இருவருக்குமாய் மொழுக்கென உருண்ட மோதிரங்களைத் தேர்ந்தெடுத்தான்.

''தாலி பற்றி யாரேனும் கேட்டால் நாம மோதிரம் மாத்தி கிட்டதாய் சொல்லிடு பத்மினி'' என்றதும் -

'தப்பித்தேன் சுவாமி' என்ற முழியுடன் தலையாட்டினாள்.

வாங்கியவற்றை எல்லாம் பெட்டிக்குள் பிரித்து அடுக்கியவளுக்கே, அறைக்கே சாப்பாட்டை வரவழைத்தான். உண்ட மயக்கம் கண்ணைச் செருகியது.



உறக்கம் கலைந்து கண் விழித்தபோது தெரிந்தது பாஸ்கர் காபி பருகியபடி டி.வி. பார்த்தக் காட்சிதான். அந்த அன்னியோன்யமான காட்சி கருத்தை நிறைக்க, பார்த்தபடியே படுத்திருந்தாள்.

போன வாரம் தன் வாழ்வில் இப்படியான மாற்றம் வரும் என்று எந்தக் கில்லாடி ஜோசியக்காரர் ஆருடம் சொல்லி யிருந்தாலும்கூட சிரித்திருப்பாள்.

''நல்ல தூக்கமா?''

''இவனுக்கு முதுகிலும் கண் இருக்கிறதா என்ன?'' மனதுள் மெச்சியபடி எழுந்தாள்.

''ம்ம்...''

''காபியா... டீயா...?''

இவனது அனு கொடுத்து வைத்தவள் என்று எண்ணியபடி முகம் கழுவினாள். இவள் காபியை முடிக்கும் வரைக் காத்திருந்தவன் -

''கீழேயுள்ள பார்லரிலே உனக்கு அப்பாய்ண்மென்ட் குறிச்சிட்டேன் பத்மினி. உன் புது ரவிக்கை வந்திடுச்சு. சேலையையும் எடுத்துட்டுப் போனால், கொண்டை, மேக்-அப்போடு உடுத்தியும் விடுவாங்க... பிறகு நான் கீழே வர, நாம அப்படியே ஸ்டூடியோ போயிடலாம்...''

ஆசையைவிட வெட்கம் அதிகமிருந்தாலும் வேறு வழியில்லாமல் நகை, சேலையை ஒரு பையில் போட்டுக்கொண்டு கிளம்பினாள்.

''அர்ரே... எனக்குத் தெரியும்ப்பா... இப்படி யாரையோ தேடித்தான் நீ நாட்களைக் கடத்திட்டே இருக்கேன்னு...!'' அந்த வெண்கலக் குரல் அவளை உலுக்கியது.



''ஹலோ மோகன்... எங்கே மும்பையில்...?''

பாஸ்கரின் பதில் குரலில் பொருத்தமான உற்சாகமில்லை.

''நாளை ஜெர்மனி போறேன்... நானும் இப்ப பாதி உலகத்தைச் சுத்தி வந்துட்டேன்... ஆனால் இப்படியொரு பேரழகைக் கண்டதில்லை!'' கைகளை விரித்து ஆர்ப்பாட்டமாய் பாராட்டிய புதியவனை ஓரக்கண்ணால் சற்று அச்சத்துடனேயே பார்த்தாள் பத்மினி. பார்வையை பாஸ்கர் பக்கம் திரும்பியவளுக்கே சிரிப்புக்கூட வந்தது.

இவர் முகம் ஏன் இஞ்சி தின்ற ஏதோ போல மாறிப் போனது? யாரிந்த மோகன்?

''ரொம்பத் தேடாதே... கிடைக்காது. மீட் மை வைஃப் பத்மினி...''

ஒரு நிமிடம் சிலைபோல நின்ற புதியவன் மயங்கி விழுவது போல நடித்தான். ''கடவுளே...! கல்யாணமே செய்தாச்சா? வீட்டிலே இது தெரிஞ்சா பெரும் களேபரம் கிளம்பும்னு வெளிநாடு போய் காரியத்தை முடிச்சிட்டே? கில்லாடிப்பா...''

''இவன் மோகன்... நம்ம ஊர்தான்...'' அமைதியாய் அறிமுகம் செய்தான் பாஸ்கர்.

''அதேத் தொழிலும்தான்... அந்தப் போட்டியில்தான் ஐயா கொஞ்சம் விறைப்பாய் நிக்கறார்!'' கண் சிமிட்டலுடன் மோகன் விளக்கினான்.

''வணக்கம்...'' கை குவித்தாள்.

''ஓ! வணக்கம் அன்ட் வெல்கம் டு மஞ்சளார் கிராமம்! அம்மணிக்கு எந்த ஊர்?''

''பாரிஸ்!'' அலட்டாய் சொன்னது பாஸ்கர்!

''அடடே! பாரிஸியன் பியூட்டி அட மஞ்சளார் பண்ணை! பாவந்தான்... எப்படீங்க நம்மூரிலே பொழுதைக் கழிக்கப் போறீங்க?''

இரு ஆண்களிடையே இனம் தெரியாத ஒரு எதிர்ப்பு அலை உருள்வதை உணர்ந்து பதில் சொல்லாமல் நின்றாள்.

''உங்க முதல் வேலை என்னன்னு சொல்லிடறேன் மிஸஸ் பாஸ்கர்... உங்கக் கணவர் அட்டகாசமான ஆளு... அவரை அடக்கி மடக்கி உக்கார வைக்கணும்...''

பரிதாபமாய் புன்னகைத்தாள்.

''யாருப்பா அட்டகாசம். பண்றவர். கார் ரேஸ், பொண்ணுங்களை சேஸ்னு இருக்கற நீயா... இல்லை வியாபாரத்தை மட்டுமே பார்க்கற நானா?''

''நீயும் பண்ணுப்பா... யார் வேணாம்னா? ஆங்... அப்படி ஐயா சேஸ் பண்ணாமத்தான் இப்படி ஒரு அப்ஸரஸை இறக்குமதி செய்திருக்கீங்களா?''

அழகு நிலையத்தில் தன்னைக் கொலு பொம்மை போல சிங்காரித்து அனுப்பியதிலிருந்து முள் மேலிருக்கும் சங்கடத்திலிருந்த பத்மினிக்கு சற்று தெம்பு மீண்டது. ஆக தான் நினைத்ததுபோல தான் நாடகக்காரி போல் அல்லாமல் அழகாய்த்தான் தோன்றுகிறோம் போலும் என்ற நிம்மதி.

பார்லரின் வாசலில் காத்திருந்த பாஸ்கரின் கண்கள் தன்னைக் கண்டதும் பிதுங்கி விரிந்தது தன் கோமாளித்தனமான ஒப்பனையால் அல்ல பிரமிப்பால்தானோ... என்ற வெட்க சந்தோஷம்!



''நான் முழுக்க வேலை விஷயமாய் அலையறேன்... வீட்டிலே பொறுப்பாய் ஒரு பெண் அவசியம்னு பட்டதால் கல்யாணத்தை முடிச்சுட்டேன்...''

''இப்படி ஒரு பொண்ணு வீட்டில இருந்தா பெருமையும் கூடத்தான்'' பத்மினியின் முகம் இத்தனைப் புகழ்ச்சியில் சிவந்தது.

ஆனால் பாஸ்கரின் முகம் கடுப்பதைக் கண்டு திகைத்தாள். ஏன் இவருக்கு மோகனைப் பிடிக்கவில்லை? அவரது புகழ் ஆரங்கள்கூட பொறுக்கவில்லை?

ஆனாலும் அத்தனைப் பாராட்டில் பத்மினியின் முகம் நிஜமான புதுப்பெண்ணுடையது போலவே மெருகேறி யிருந்தது.

ஸ்டூடியோவில் புகைப்படத்திற்காக புன்னகைத்த அவள் முகத்தில் தாமரையின் முழு மலர்ச்சி.

காமிராவை இயக்கியவர், ''பஹுத், அச்சா ஹை!'' என்றார் பெரிய திருப்தியுடன்.

## 8

வீட்டின் ஒவ்வொரு அறையாய் ஒரு குழந்தையின் மிரட்சியுடன் நடந்தாள். பழங்கால வீட்டை சிறிது உருமாற்றி இருந்தார்கள்.

இரும்பு ரேழிகளும் கமான் வளைவுகளும் அப்படியே இருந்தாலும் தரை முழுக்க பால் பளிங்கில் பளபளத்தது. கூடம் தாண்டி அகண்ட ஊஞ்சல் மினுமினுப்பாய் தொங்கியது. சதா



யாரேனும் அமர்ந்து ஆடியதால் ஏறிய மெருகு அது. பிரம்பு, மரநாற்காலிகள் இடம் குறித்து இடப்பட்டிருந்தன.

அவற்றின் இடையே தரையில் ஆழ்ந்த வர்ணங்களில் வட்ட இரத்தின விரிப்புகள். பெண்ணில்லாத வீடு என எண்ண முடியாத ரசனையான பராமரிப்பு.

''சூப் கொண்டு வந்திருக்கேன் மேடம்'' பணிவாய் மரத்தட்டுடன் நின்றார் சமையல்காரர் ராஜப்பா.

''தாங்க்ஸ்... வீட்டை ரொம்ப நேர்த்தியாய் பராமரிக்கறீங்க.''

''எல்லாம் அனும்மா வேலைங்க...'' என்றவர் முகம் பிரகாசமானது.

''ஓ...?''

''இப்ப கொஞ்ச நாளாய் வீட்டில்தான் இருந்தாங்க... அது சமயந்தாங்க வீடு அம்சமாச்சு... இல்லைன்னா நாற்காலிங்கள ஏதோ மீட்டிங்ல போடறாப்பல நீள அடுக்கியிருந்தேன்.'' சூப்புடன் சாப்பாட்டு மேஜைக்கு நடந்தவளைத் தொடர்ந்தாள்.

''டின்னருக்கு உங்களுக்கு என்ன சமைக்கட்டும்மா?''

''மத்தியானம் செய்ததே போதும்... நல்லாயிருந்தது...''

ராஜப்பா முகத்தில் நிம்மதி வந்தது.

''கான்டினென்டல் சமையல் எல்லாம் எனக்கு அதிகம் பழக்கமில்லாத மேடம்... மேல்நாட்டு வகைகள்ல சூப், பிஸ்கெட், ஜாம் போடுவேன். அவ்வளவுதான்... உங்களுக்குச் சரி வருமோன்னு... பயந்திட்டிருந்தேன்...''

பத்மினிக்கும் நிம்மதிதான். வந்ததுமே ராஜப்பா முகத்தில் தெரிந்த சுணக்கம் இவளுக்குள் சஞ்சலத்தை ஏற்படுத்தி



யிருந்தது. தவிர வேலைக்காரர்கள் அனைவருக்கும் அனுவைப் பிடித்திருந்தது என்பதை யூகிக்க அதிக மூளையெல்லாம் தேவையில்லை... அது கண்கூடு.

அனுவின் பெயர் உச்சரிக்கப்படும் போதெல்லாம் பாஸ்கர் முதற் கொண்டு அனைவர் முகங்களிலும் தனி வெளிச்சம் படருகிறதுதான். தன்னைப் பார்த்த பார்வைகளில் சந்தேகமும் சஞ்சலமும், தொனிப்பதைக் கவனித்தவளின் வயிறு கலங்கியது.

இப்போது சமையல்காரருக்கு பாரிஸிலிருந்து வந்த புது எஜமானிக்குத் தன் சமையல் பிடிக்குமா என்பதே கவலை என்பதை அவரே சொல்லிக் கேட்டதில் கலக்கம் குறைந்தது.

''மதிய சாப்பாட்டில் குறையில்லீங்களே?''

''சுவையாயிருந்தது. அந்த சேனை வறுவல் அப்படியே மீன் வறுவல் போலவே இருந்துச்சு... எப்படி செய்றதுன்னு ஒரு நாளைக்குச் சொல்லித் தர்றீங்களா?''

ராஜப்பா முகத்தில் பெரிய சிரிப்பு விரிந்தது. ''நல்லதுங்கம்மா... உங்களுக்குக் காரம் பிடிக்குமோ இல்லையோன்னு பயந்துட்டே சமைச்சேன்.''

''நான் அயல்நாட்டில் வளர்ந்தவளில்லையே... வளர்ந்தது, படிச்சது எல்லாம் சாயர்புரத்திலேதான். இப்ப ரெண்டு வருடமாய் தான் பாரீஸ்...''

சிரிப்பு அகண்டளவு ராஜப்பாவின் கண்களும் விரிந்தன. ''சாயர்புரம்னா... திருநெல்வேலியா அம்மாவுக்கு...?''

''ஆமாம்...''

''எனக்குப் பத்தமடைங்கம்மா... முன்னோருங்க பாய் பின்னினாங்க. இப்போ தொழில் முன்னைப் போல

இல்லைங்கவும் எனக்குக் குடும்பத் தொழிலைக் கத்துத் தராம கையில கரண்டியத் தந்துட்டாங்க...''

''சமையலும் கலைதான்...''

''வாஸ்தவங்கம்மா...'' உற்சாகமாய் ஆமோதித்தவர், காலடியோசை சத்தம் கேட்டதும் நகர்ந்து விட்டார்.

வந்தது பாஸ்கர்தான். ராஜப்பாவுடன் இலகுவாய் பேசியதில் சற்று மலர்ந்திருந்தவளின் முகத்தை ஒரு கணம் பார்த்தவன் பார்வை யோசனையுடன் அவள் உடலில் இறங்கியது. கூச்சத்துடன் விலக முற்பட்டவளை அவன் குரல் நிறுத்தியது. ''உன் பெட்டியைப் பிரிச்சு அடுக்கியாச்சா பத்மினி?''

''ம்ம்... இனிதான்... முதல்ல வீட்டைப் பார்க்கலாமேன்னு...''

''மேல ரூமுக்கு வா...'' இந்த உத்தரவுடன் பெரிய எட்டு வைத்து நடந்தவனை பூனையாய் பம்மிப் பின் தொடர்ந்தாள்.

மாடி அறையைப் பார்த்தவள் மனம் குழம்பியதால் வீட்டைச் சுற்றிப் பார்க்கும் சாக்கில் இறங்கி விட்டிருந்தாள்.

பாஸ்கரது அறை விஸ்தாரம்தான். அறையை ஒட்டிய பால்கனியின் பாதியை ஆதிசேஷன் போல வளைந்து விரிந்து குடை பிடித்திருந்தன வேப்பமரக் கிளைகள். அங்கு பசுங்காற்று அவளை 'வா வா' என்பதாய் வரவேற்றதுதான். ஆனாலும் இந்த அறையில் நூற்றுக்கணக்கான நாட்கள் தான் ஒரு அந்நிய ஆணுடன் தங்கியிருக்க வேண்டும் எனும் உண்மை அத்தனை சுகமாயில்லை. ஆக உடனே வெளியேறி விட்டாள். படியிறங்கும்போதே பால்கனியில் ஒரு பாயை விரித்து தான்



படுத்து விட்டால் என்ன என்ற திட்டமிடல் வேறு. இரண்டாம் முறையாய் தயங்கித் தயங்கி அறைக்குள் நுழைந்தவள் உள்ளே பாஸ்கரைக் காணாமல் திகைத்தாள்.

பால்கனிக்குப் போகும் கதவும் தாழிடப்பட்டிருந்தது. ''இங்கேயிருக்கேன்...''

பக்கவாட்டிலிருந்து வந்த குரலில் திரும்பினாள். இடதுபுறம் சற்றேத் திறந்திருந்த கதவு தெரிந்தது.

புது வீடு பழகும் நாய்க்குட்டியாய் சற்றே தலை சாய்த்து எட்டிப் பார்த்தவளைக் கண்டவன் சிரித்தான். ''இங்கே பூச்சாண்டியெல்லாம் இல்லை பத்மினி பயப்படாமல் வா...''

''இது... இது பாத்ரூம்னு நினைச்சேன்.''

''இல்லை... உடை மாற்றும் அறை... அடுத்ததுதான் குளியலறை. அப்படீன்னா இந்தக் கதவை நீ திறக்கவேயில்லையா...?''

''ஊகூம்... பால்கனியைப் பார்த்தேன்...''

''அடடே... அங்கே வேப்ப மர நிழலில் படுத்துக்கத் திட்டமாக்கும்?'' அவளையும் மீறி முகம் சிவந்தது.

''அதெல்லாம் வேண்டாம். என் அறையில் இருக்கும் சோபா கம்பெட்டை இங்கே கொண்டு வந்து போடறேன். இராத்திரிகள்ல அதைப் பிரிச்சுப் படுக்கையாக்கிக்கலாம். தவிர இந்தக் கதவுக்கு உள்ளே தாழ்ப்பாளும் உண்டு.''

மூச்சை நிம்மதியாய் விட்டாள். பத்துக்குப் பனிரெண்டில் வசதியான அறைதான் அது.

''ஆனா பாத்ரூம்... இங்கே இருக்கே... அப்ப நீங்க...?''



''வெளியேவும் ஒன்று உண்டு. தேவைன்னா உன்னைப் போல பூனைப்போல பம்மிப் பதுங்கி இராத்திரி அங்கே போய்க்குவேன். யாராவது பார்த்தால் தம்பதிகளுக்குள்ளே ஊடல்னு நினைக்கலாம்.''

சூடான முகத்தை அவசரமாய் குனிந்து மறைத்தாள். பேச்சோடு சுவரில் பதிக்கப்பட்ட இரும்புக் கதவைத் திறந்தவன், ''இப்போ உன்னை வரச் சொன்னது வேற விஷயமாய்'' என்றான்.

''என்ன?''

''நீ இத்தனை எளிமையாய் தெரியறது நல்லதில்லை... அதாவது நம்ப நாடகத்துக்குப் பொருந்தலை...''

''அறுநூறு ரூபாய் சேலை கட்டியிருக்கேன்...''

''போட்டிருக்கிற நகை அதற்குப் பொருந்தலையே... அம்மாவுடைய சில நகைகளை இங்க விட்டுட்டுப் போயிருக்காங்க... அதில் பிடிச்சதைப் போட்டுக்கோ... கையிலே குறைஞ்சது அரை டஜன் வளையலாவது குலுங்கணும்...'' பெட்டகத்திலிருந்து உருவிய சிறு மரப்பெட்டியை இவள் கையில் வைத்தான்.

''ஏனிப்படி முழிக்கறே?''

''உங்க... உங்கம்மா இப்போ எங்கே?''

''என் அக்காமாரோடு இருப்பாங்க. ஒருத்தர் மாத்தி ஒருத்தருக்கு குழந்தை பிறக்கும், மசக்கை படுத்தும்... இல்லை அவங்க வெளியூர் போக வேண்டியிருப்பதால் அம்மா அவங்க வீட்டில தங்கி நிர்வகிக்க நேரும்... அத்தனை பேருக்கும் சதா அம்மா வேணும். இப்ப கௌஹாத்தியிலே மூத்த அக்காவோட இருக்காங்க...''



''இதுவரை அவங்களைப் பற்றி... உங்க குடும்பத்தாரைப் பற்றி ஏதும் நீங்க சொல்லலை. அப்பா இளமையிலேயே இறந்ததாய் மட்டும் சொன்னீங்க...''

''அம்மாவுக்கு வீட்ல பத்து பேராவது புழங்கணும்... தவிர தன்னால பிறருக்கு உதவிடணுங்கற எண்ணம் வேற அவசியம்...''

''அப்போ அவங்களே அனுவுக்குத் துணையாய்...?''

''நானோ அனுவோ சதா இங்கே இருக்கிறதில்லை. தவிர ஷகீலா அத்தைக்கு என் அம்மாவை விட எனக்குன்னு மனைவி வந்தாத்தான் அனு பாதுகாப்பாய் இருப்பாங்கற கருத்து... இப்ப உனக்கான நகைகளை எடுத்துக்கறியா?''

''உங்கம்மா என்ன நினைப்பாங்க? நான் அவங்க உத்தரவில்லாமல் அந்த நகைகளைப் போட்டுக்கறது... எல்லாத்தையும்விட இந்தக் கல்யாணத்தைப் பற்றி...'' சஞ்சலத்துடன் அவள் விழிகள் உருளுவது ரசனையுடன் பார்த்து நகைத்தான்.

''எல்லாம் நாடகம்தான். சிறந்த நடிப்புதான்னு சீக்கிரம் அவங்களிடம் சொல்லிடறேன். பத்மினி. எல்லாம் அனுவுக்காகன்னு தெரியும்போது அவங்களுக்குச் சங்கடமாயிருக்காது. சுலபமாய் சம்மதிச்சிடுவாங்க...''

''இப்பவாவது என்னை... நம்மைப் பற்றி சொல்லிட்டீங்களா?''

''அது என் பிரச்சினை அம்மணி... இப்ப உங்க பிரச்சினை நகைகள்ல வேண்டியதைத் தேர்ந்தெடுக்கறது மட்டும்தான்...'' இலகுவாகப் பேசினாலும் இதற்கு மேல் கேள்விக்

கணைகளைத் தொடுக்க உனக்கு அனுமதியில்லை என்ற கருத்தும் தொனிக்க இவள் மவுனமானாள். அதிகப் பகட்டில்லாத சில நகைகளை எடுத்துக்கொள்ள,

''ஊகூம்... அது உன் வயசுக்குத் தோதில்லை... இதை எடுத்துக்கோ'' என்று அவனே முடிவு செய்தான்.

குளித்து நகைகளைப் போட்டபோது அம்மாவின் நினைப்பு வந்தது. 'பொன்னிடப் பொன்னிட பெண்ணுக்கு அழகுங்கறது உண்மைதான்டி பத்துகுட்டி. ஒரு பவுன் செயின்தான். ஆனா இதுவே உன் அழகைத் தூக்கிக் காட்டுதே' என்று மகிழ்ந்த தாய், தங்கமும் கருகமணியும் கலந்து கட்டிய இந்நீள மாலையிலும், வைரக் கம்மல்களிலும், கரங்களைக் கவ்விய கல்வளைகளிலும் தன்னைப் பார்த்திருந்தால் பூரித்திருப்பார்கள்.

ஆனால் யாரோ ஒருவனுக்கு மனைவியாய் நடிக்கும் இந்நிலை புரிந்தால்... நல்லவேளை தன்னைப் பெற்றவள் இதைக் காண உயிரோடு இல்லை என்று நினைத்த மறுகணம், தாய் இருந்திருந்தால் இப்படி ஒரு இக்கட்டு தனக்கு நேர வாய்ப்பும் இருந்திருக்காது என்று பெருமூச்சோடு நினைத்தாள் பத்மினி.

## 9

ஜோடி ஜோடியாய் அணில்கள் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தன. வெயிலின் உக்கிரமெல்லாம் இங்கு நுழைய முடியாது என்று கர்வமாய் கிளை பரப்பி காவல் காத்தன பெரும் மரங்கள்.

சூரியனும் அடங்கி தன் ஒளியை சிறு வெளிச்ச காசுக்களாய் மட்டும் தரையில் உருளவிட்டு ஒதுங்கி வேடிக்கைப் பார்த்தான்.



அவற்றின் ஊடாய் நடந்து வந்த பத்மினிக்குக் கால்கள் சற்று களைத்திருந்தன. ஒரு சிமெண்ட் மேடையில் அமர்ந்தாள்.

''என்ன கால் வலிச்சிருச்சா?''

''எத்தனை பெரிய இடம் தவிர கடந்த இரண்டு வருடங்களாய் நான் அதிகம் வெளியே நடந்ததில்லையே... அதான்.''

''எப்படியிருக்குது ஃபாக்டரி?''

தன் கோலிகுண்டுகளைக் கைவிரித்துக் காட்டி ஆர்வமாய் அபிப்பிராயம் கேட்கும் சிறுவனாய் நின்றவனை புன்னகையுடன் ஏறிட்டாள். கடந்த சில நாள் பழக்கத்தில் அவனைப் புரிந்து கொண்ட பெருமையும், பழக்கத்தால் முகிழ்த்த பிரியமும் உணர்ந்தாள்.

''நீங்க ஃபாக்டரின்னதும், ஏதோ ஒரு கட்டடம், நாலு மெஷின்ஸ் இருக்கும்னு நினைச்சேன். பல பெண்களுக்கு வேலை வாய்ப்பு தந்திருக்கீங்க... தவிர சோலை போல இருக்குது... எத்தனைத் தினுசான பழ மரங்கள்!''

''கிடைச்ச நிலத்தை எல்லாம் பயன்படுத்திக்குவோம்...''

''ஆனால் ரெண்டு இடங்கள்ல மரம் இல்லாமல் மனையாட்டம் இருந்தது...''

''கவனிச்சிட்டியே... குட்! தொழிலாளர்களுக்கு அங்க வீடு கட்டலாங்கறது அப்பாவுடைய திட்டம்... ஆனால்..''

''சாலையின் எதிர்ப்புறம் இருக்கற காலி நிலமும் உங்களதுன்னு சொன்னீங்களே...? வீட்டை அங்கே கட்டிடலாம். இதை வேற எதுக்காவது உபயோகிக்கலாம்னு...'' பேசியவளை ஆச்சரியமும் மதிப்புமாய் பார்த்தான்.





''ரைட் பத்மினி... நான் நினைச்சதையே நீயும் சொல்லிட்டே. அப்ப அங்கேயும் மரம் நடலாமா?'' தன் கருத்தை ஆவலாய் ஏற்றுக் கொள்ளும் அவனது உற்சாகத்தை ரசித்தவள்,

''அவசரப்படாதீங்க யோசிப்போம்'' தலையாட்டினாள் அமர்த்தலாய்!

முதலாளியம்மாவின் சொல்படி, சித்தப்படி...''

இவர்கள் சிரித்ததை தள்ளியிருந்து ரசித்த தொழிலாளர் களைக் கவனித்தவளின் நெஞ்சு நெருடியது. புது எஜமானியம்மாள் என்று தன்னைப் பெருமிதத்துடன் பார்த்திருக்கும் எளிய மக்களை ஏமாற்றுகிறோமோ என்ற குற்ற முள்...!

''இங்கே அத்தனை மெஷினும்... சூரிய ஒளியினால்தான் இயங்குதுங்கறது ஆச்சரியந்தான்...''

''ஸோலர் எனர்ஜிதான் சீப் அன்ட் பெஸ்ட்...''

''மழை, மோடமான நாட்கள்ல.''

''வருடத்தின் அத்தனை நாட்களிலேயும் உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாயத்தில் நாம இல்லை. ஆனா இனி பிரான்சுக்கு ஏற்றுமதி செய்தால் உற்பத்தி அதிகமாகணும். பழங்களை உலர வைக்க மின்சாரமும் தேவைப்படும்...''

''எப்படிப் பெரும்பாலும் பெண்களையே வேலைக்கு வைச்சிருகீங்க?''

''வேலை சுத்தமாயிருக்கும்... கையுந்தான்.''

''அதாவது திருட்டு இல்லைங்கறீங்க?''



''ம்ம்... மழை காலங்கள்னு வர்ற பழங்களை ஜூஸ், ஜாம்னு போட்டு விற்போம். அதிலே கணிசமாய் திருடு போகும். பெண்கள் வேலைக்கு வந்த பிறகு அந்தத் தலைவலி குறைஞ்சிடுச்சு...''

''இளவயசு பெண்களாய்த் தெரியறாங்க?''

கேள்வியுடன் அவன் புருவம் உயர்ந்தது.

''பலருக்குக் கைக்குழந்தை இல்லை. கைக்குள்ளே நிக்கிற பிள்ளைங்க இருக்கறாற்போலிருக்குது...''

அவர்கள் தொழிற்சாலையில் வந்து இறங்கையில் கூட காரின் குறுக்கே, இடுப்பில் வெள்ளி அரைஞாணைத் தவிர வேறு எதுவுமில்லாத இரண்டு வயதுத் தளிர் ஒன்று ஓடியது. பாஸ்கர் உடனே பிரேக்கை அழுத்தியதால் அசம்பாவிதம் நேரமில்லை. காரிலிருந்து இறங்கியவன் கோபப் பார்வையுடன் தாயைத் தேட பத்மினி ஓடிப்போய் அத்தளிரைத் தூக்கினாள்.

''யாரு செல்லம் நீ? சமத்தா ஓரமாய் விளையாடாம குடுகுடுன்னு ஓடறதா ம்ம்...?'' இவள் கொஞ்சலில் கோபம் மறந்து பாஸ்கர் அலுவலகத்தினுள் நுழைய, இவள் முதுகை யாரோ சுரண்டினார்கள். இவள் திரும்ப, குழந்தைக்காக கையை நீட்டியபடி நின்றாள் ஒரு பெண்.

''நீதான் அம்மாவா?''

''ஆமாங்கம்மா.''

''இப்படிக் கவனக்குறைவா இருக்கக்கூடாதேம்மா...''

''பழத்த அரிஞ்சிட்டிருந்தேனுங்க. காலும் கையும் அதுக்குக் குறுகுறுங்கும் போல அதாம் இப்படி ஓடித் திரியுது...''

"அதுக்காக இப்படி அம்மணமாய்த்தான் திரியணுமா?"

"நாழிக்கொருதரம் ஜட்டி நனைஞ்சிருதுங்களே..." தலையைச் சொரிந்தாள் அந்த இளம் தாய்.

"மாத்தணும்... மூணு ஜட்டி கொண்டாந்தா அலசிக் காய வைச்சு சுத்தமாய் மாத்திவிடலாம். குழந்தை பேசுவானில்ல... 'மூச்சு வருது'ன்னு சொல்லக் கத்துக்கொடு... நனையாமல் பார்த்துக்கலாம்."

ஆனால் சொல்லும்போதே வேலை பார்க்கும் இப்பெண் களுக்கு குழந்தையையும் சேர்த்து கவனிப்பது சிரமம்தான் என்பது பத்மினிக்குப் புரியாமலில்லை.

"உள்ளேயும் குழந்தைங்க குரல் கேட்குதே?"

"இருவது, இருவத்தஞ்சு பேருக்கும் கைக்குழந்தைங்க உண்டுங்கம்மா... கூட்டிட்டுதான் வரவேண்டியிருக்குதும்மா... வீட்டுல விட்டுட்டு வர வழியில்லீங்களே..." இத்தனை நேரம் நின்று பேசியதே குற்றம் என்றாற் போல அவள் குழந்தையுடன் ஓடிவிட்டாள்.

"குழந்தைகளுக்கு ஒரு கிரஷ் ஆரம்பித்தால் என்ன?" பாதி தனக்குள்ளாகவும் மீதி அவனுக்காகவும் அவள் சொல்ல அவன் புருவங்கள் உயர்ந்தன.

அவனது அந்த முகபாவனை அவளுக்குப் பழகிவிட்டது ரசிக்கவும் செய்தாள்.

"சின்னதாய் கிடந்த காலி மனையில் ஒரு கீற்றுக் கொட்டகை போட்டு, ரெண்டு ஆயாக்களையும் நியமிச்சா கைக்குழந்தை கள் பத்திரமாய் இருக்கும். அவங்க அம்மாமாருக்கும் கவலையில்லை. கவனம் சிதறாமல் வேலை பார்ப்பாங்க.



அதன் ஒரு புறம் வேலியடைச்சு சறுக்கு, ஊஞ்சல்னு வைச்சா பெரிய குழந்தைங்க விளையாடும்..."

"நல்ல திட்டம்தான்" பாஸ்கர் இவளது கையைப் பற்றி பாராட்ட இவளைவிட எட்ட நின்று இவர்களையேப் பார்த்திருந்த கூலிப் பெண்கள் அதிகம் கூச்சப்பட்டார்கள்!

கண்ணாடியில் தன்னை பன்னிரெண்டாவது தடவையாய் பார்த்துக் கொண்டாள் பத்மினி.

வந்த ஒரு வாரத்திலேயே உடலில் வனப்பேறியிருந்தது. அதற்கு நல்ல ஆடையும் பொன்னும் மெருகிட்டிருந்தன. ஆனால் அவள் கண்ணாடியைப் பார்த்தது பூரிப்பாய் இல்லை - பதட்டத்துடன்!

"அழகாய்த்தான் இருக்கிறே பத்மினி..." செய்தித்தாளை மேய்ந்தபடி சமாதானம் சொன்னான் பாஸ்கர்.

"இல்லை... இன்னைக்கு அனு வர்றாங்களே..."

"நான் உங்களுக்கிடையே அழகிப் போட்டி ஏதும் ஏற்பாடு பண்ணலியே...?"

"ம்ப்ச்... தூங்கறாப்பல நடிக்கறவரை எப்படி எழுப்பறது?"

"அனுவை சந்திக்கப் போற... அவள் உன்னைப் பற்றி என்ன நினைப்பாளோ... அதான?"

பத்மினியின் தலை மட்டும் அசைந்தது.

"அனுவைப் பற்றி நீ என்ன நினைக்கப் போறே?"

"நானென்ன... அதுவும் அவங்களைப் பற்றி... அவங்க இந்த வீட்டு எஜமானி."



"இப்ப அந்நிலையில் இருக்கிறது நீதான்... இல்லியா?" கேட்ட அவன் முகம் இளகியது.

"அதெல்லாம் சும்மாதானே?" அவசரமாய் மறுத்தாள்.

"ஆனா நீ சுமாராகவாவது நடிக்கணும்."

"என்ன...?"

"என் மனைவியாய்..." எழுந்தவன் செய்தித் தாளை மடித்து குறுமேசையில் போட்டுவிட்டு இவளை நெருங்கினான்.

"வந்த அன்னைக்கே நான் அனுவைச் சந்தித்திருந்தால் எதுவும் தோணியிருக்காது."

"அப்போ ரொம்பப் பாவமாயிருந்தே பத்மினி... இப்ப தேறியிருக்கே..."

"அனுவுக்கு... அவங்களுக்கு..."

"அனு உன்னைவிட இளையவள்... தவிர முறைக்கு நீ அக்கா நீன்னே சொல்லலாம்..."

"அனுவுக்கு நம்ப விஷயம்... தெரியுமா?" மென்று முழுங்கியவளை முறைத்தான்.

"நீ அளவுக்கு மீறி தலையை உருட்டிக்கறே. அதெல்லாம் என் பிரச்சினை. கொடுத்த பாகத்தை பழுதில்லாமல் செய்றது மட்டுந்தான் உன் வேலை..." மேலும் இவளை நெருங்கியவன் மெள்ள கேட்டான் -

"ரொம்பக் கஷ்டமாயிருக்கா?" ஒரு குழந்தையை விசாரிப்பது போன்ற குரலில் குழைவும் அவனுடைய ஆஃப்டர் ஷேவ்வின் வாசனையும் இவளைக் கிறக்கின.



"எ... எது...?"

"என்னோட வந்தது... மனைவியாய் தங்கறது..."

"எதிர்பார்த்தளவு மோசமில்லை." அவள் உதட்டை மடிக்க, வலது மோவாய் ஓரம் சின்னதாய் சுழித்தது. அதை மும்முரமாய் ஆராய்ந்தன. அவன் விழிகள். ஒரு எட்டு வைத்தால் முட்டி விடுமளவு நெருங்கி நின்றவனை, என்றுமே தன் உரிமையாய் தொட, ஏன் பார்க்கவும் முடியாது என்ற நினைப்பு வர உள்ளே வலித்தது.

ஏதோ சிந்தனையில் கட்டுண்டு இருவரும் அப்படியே நிற்க, "ஹா... ஸாரி..." என்று வாசல் அருகே ஒரு பெண் குரல் வருந்தியது.

"அடடே... வா அனு..." விரித்து இரண்டு எட்டு பின் வாங்கினாள் பத்மினி.

இத்தனை கவனமாய் இருந்தும் இப்படி ஒரு சூழ்நிலையிலா அனுவைச் சந்திக்க வேண்டும். தன்னையே நொந்தபடி நின்றவள் நுழைந்த அனுவை முழுதாய்ப் பார்க்கவும் தவறவில்லை.

இந்த அதிர்ஷ்டசாலிப் பெண்தானே பாஸ்கரின் கைபிடித்து அவரைக் கட்டி ஆளப் போகிறவள்... உயரமும், மெல்லிய உடல் வாகுமாயிருந்த அனுவிற்கு குழந்தைத்தனமான உருண்டை முகம், கூர்மூக்கும், அடர்ந்த புருவங்களும் பாஸ்கரை ஒருத்திருந்தன. அவள் பாஸ்கரையும் தன்னையும் ஆர்வமாய் மாறி மாறிப் பார்த்து புன்னகைத்தபோது அம்முகத்தில் மலர்ச்சியோடு விவரிக்க முடியாத ஒரு உணர்ச்சியையும் காட்டியது.

''எல்லாரும் சொன்னதுபோல அழகாய்தான் இருக்கீங்க... அக்கா... நான் உங்களை அப்படித்தானே அழைக்கணும்? ஸாரி... ரெண்டு பேரும் தனியாய் இருக்கும்போது நான் எப்பவுமே இஷ்டத்துக்கு வருவேன்... போவேன்.... அதான்...'' அவசரமாய் விளக்கினாள்.

''ம்ம்... அதனால் என்ன?''

''பரீட்சையை எப்படிச் செய்தே...?''

''பாஸாயிடுவேன். போதுமே. இனி ஒரு மாசமேனும் நம்ம வீட்டிலத்தான் பாஸ் அத்தான். அப்புறம்தான் அடுத்த கோர்ஸ் சேரணும்...''

''ரொம்ப நல்லது. நேரத்துக்குச் சாப்பிட்டுத் தூங்கு... களைச்சுத் தெரியறே...'' என்ற பாஸ்கர் அனுவின் தலையை வருட, பத்மினி அவசரமாய் வெளியேற முயன்றாள்.

''அக்கா, எங்கே ஓடறீங்க...?''

''உனக்குச் சாப்பிட ஏதும்...? குடிக்க குளிர்ச்சியாய்...?''

''அத்தனை உபசாரமெல்லாம் எனக்கு வேணாம்... பேசிப் பழக இளமையாய் இன்னொரு பொண்ணு வீட்ல இருப்பீங்கன்றதே குளிர்ச்சியான விஷயம்'' என்றவள் பாஸ்கரிடம் ஏதோ பேச, இவள் அவஸ்தையாய் நின்றாள். பல நாட்கள் கழித்து சந்திக்கும் இருவர் அதிலும் காதலர்கள் பேச பல விஷயங்கள் இருக்க, தான் தடையாய் நிற்கக் கூடாதென்று நழுவினால் விடமாட்டேன் என்கிறாளே...?''

இந்தக் கல்யாணம் வெறும் நாடகம் என்பதை நிச்சயம் பாஸ்கர் அனுவிடம் சொல்லியிருக்க வேணும். இல்லையென்றால் இத்தனை சகஜமாய் சிரித்துப் பழக முடியுமா அவளால்?



சிறு வயதிலிருந்தே எனக்கு நீ... உனக்கு நான் என்ற நிச்சயத்தில் நேசித்து வளர்ந்தவர்கள் இடையே வேறு ஒருவர் முளைத்தால் நொறுங்கி அல்லவா போயிருக்க வேண்டும்?

பழகியவரை பாஸ்கர் நல்லவர் என்பது புரிந்திருந்தது. மனைவியாய் நடிக்கும் தன்னையே நோகாமல் பார்த்துக் கொள்பவர் முறைப்பெண்ணை, வருங்கால மனைவியைக் கலங்க விடுவாரா?

ஆக இது மூவருக்குமான நாடகந்தான்!

ஆனால் முந்திரிக்கொட்டையாய் வாய் விடாமல் தன்னுடைய பாகத்தை மட்டுமே செய்திருப்பது நல்லது. பாஸ்கரும் அதைத்தான் எதிர்பார்ப்பார்.

இன்னும் தாண்ட மேலும் ஒரு கண்டம் உண்டு என்பதும் நினைவு வந்தது. அனுவின் சித்தியும் விரைவில் வரக்கூடும்... அதுவும் இப்படி சகஜ சுமூகமாய் நடக்குமா இல்லை...?

''யம்மா... பாயசம் நீங்க வைக்கிறதாய் சொன்னீங்களாம்... சமையல்காரரு கூப்பிடறார்...'' என்ற பணிப்பெண்ணைத் தொடர்ந்தாள்.

மதியம் மூவருமாய் சாப்பிட்டு முடித்ததும் பாஸ்கர் அழைத்தான்.

''வா பத்து... ஃபாக்டரி போவோம்...''

''அக்கா ஏன் ஃபாக்டரிக்கு... என்கூட இருக்கட்டுமே?''

''நீ வர்ற சாக்கில் அம்மணி இன்னைக்குக் காலையில வேலைக்கு டிமிக்கி... வீட்டில் இருந்து வெட்டிக்கதை பேசற ஆளில்லை அவள். வந்த கொஞ்ச நாளில் தொழில்ல எத்தனை ஐடியாஸ் தந்திருக்கா, தெரியுமா?''



''பிரான்ஸ்ல உங்க வியாபார சம்பந்தமாய் அக்காவை சந்திச்சீங்களா அத்தான்?''

''வேலை விஷயமாய் சந்திச்சோம்... பிறகு...'' புருவத்தை உயர்த்தி முகம் விரிய புன்னகைத்தான்.

''புரியுது... வழியாதீங்க...'' அனு கிண்டலடித்தபோதும் அவளது முகம் இருண்டு போனதை பத்மினி கவனித்தாள்.

என்னதான் நாடகம் என்றாலும் அனுவிற்கு இது ரொம்ப சிரமமான பாத்திரம் என்று வருந்தியது இவள் மனம். தன்னவரை மற்றொருத்தியின் புருஷனாய் வெறும் பாவனையாய் பார்ப்பதே கூட விஷம்தானே... கொடும் விஷம்.

மறுநாள் காலையும் பாஸ்கர் தன்னை உடன் அழைத்ததில் பத்மினிக்கு எரிச்சல்தான்.

இவரென்ன புரியாதவராய் இருக்கிறார்? ஏதோ மனதிற்குப் பட்ட சில திட்டங்களைச் சொன்னால் தினமும் தன்னை வேலையிடத்திற்குக் கூட்டிப் போகணுமா என்ன?

அனுவுடைய முகம் வாடுவதை அலட்சியப்படுத்திவிட்டு இதென்ன விளையாட்டு? ஆனாலும் மவுனமாய் உடன்பட்டாள். இந்தத் திட்டம் அவருடையது கதை, வசனம், இயக்கம் எல்லாமும் பாஸ்கர்தான்.

அந்த இயக்குநர் சுதந்திரத்தில் தான் குறுக்கிடுவது தப்பு என்ற எண்ணத்தில் எல்லா உத்தரவுகளுக்கும் தழைந்து கொடுத்தாள்.

குழந்தைகளுக்கான 'கிரஷ்' 'விளையாட்டு அரங்கம்' குறித்த வேலைகள் இவளிடம் ஒப்படைக்கப்பட்டன.



''இந்தா பத்மினி... விளையாட்டு பொருட்களுக்கான அட்டவணை. நீயே வேண்டியதைத் தேர்ந்தெடுத்து வாங்கிடு. திருச்சியிலேதான் இவங்க மெயின் ஆபீஸ்... நீ நேரிலே போய்கூட பார்த்து வாங்கலாம். ரெண்டு ஆயாக்கள் வேணும்னியே... யார்னு முடிவு செய்தாச்சா?''

''நானா?''

''பின்னே ஐடியா சொன்னால் போதுமா? செயல் முக்கியம்மா. பாலரமணி சார்கிட்ட பேசு... உனக்கு உதவுவார்...''

''ஆகட்டும்...''

ஆக தொழிற்சாலையின் வேலைகள் அவள் நேரத்தை விழுங்கின. பல மாதங்கள் துருப்பிடித்தாற் போலிருந்த உடம்பிற்கு உள்ளத்திற்கு இந்த வேலைகள் எண்ணை இட்டனதான்.

ஆனாலும் அனுவைப் பார்க்கும் போதெல்லாம் உள்ளே ஒரு குற்றக் குறுகுறுப்பு. நாள் முழுக்க உடனிருந்த பாஸ்கரிடம் தன் மனது ஈர்க்கப்படுவதை உணர்ந்ததால் ஏற்பட்ட பயம்... எல்லாமுமாய் அவளைக் குழப்பின.

## 10

'குளிர் காயச் சுள்ளி பொறுக்கத் தொடங்கினாய்

சுள்ளி பொறுக்குவதிலேயே

உன் ஆயுள் செலவாகிக் கொண்டிருக்கிறது.

நீ குளிர் காய்வதே இல்லை...'

அப்துல்ரகுமானின் கவிதையை வாசித்த பத்மினிக்கு அதைக் கவிஞர் தனக்காகவே எழுதிவிட்டாரோ என்ற சந்தேகம்.

மறு அறையிலிருந்து கேட்ட பாஸ்கரின் அசைவுகளுக்காய் காதைத் தீட்டி கவனிப்பதை அவளால் அடக்க முடியவில்லை.

இரவு பத்துக்கெல்லாம் அவளது அறைக்கதவு தாழிடப்பட்ட பின்னும் உறக்கம் வருவதில்லை. பாஸ்கருடன் போய் பேச வேண்டும் போல... அல்லது 'உங்கள் மேல் எனக்கு முழு நம்பிக்கை உண்டு' என்று ரீதியில் தன் கதவைத் தாழிடாமலாவது வைக்க வேண்டுமென்று ஆசைதான். ஆனால் புத்தி தடுத்தது.

'ரொம்ப இழைய ஆசைப்படாதே பத்மினி! கதவைத் திறந்து வைப்பது உன் நம்பிக்கையைக் காட்டும்தான், அந்த நம்பிக்கையிலிருந்து அன்பு முளைக்கும்... பிறகு ஆசையாகும்...''

''இப்போதே எனக்கு அவர் மீது அன்பிருப்பதாய் தோன்றுகிறதே?''

''அது உனக்கென்று வேறு யாரும் இல்லாததால்... கிடைத்த ஒரே கொழு கொம்பில் கொடி படராமலிருக்குமா? அழுந்திப் படர்ந்து விட்டால் பிய்த்து எறியும்போது அதிகம் வலிக்கும். ஜாக்கிரதை!'' எச்சரித்தது மூளை.

மூளைக்கும் மனதுக்கும் பாலமிட்டன கவிஞரின் வரிகள்.

பாஸ்கர் அனுவிற்குதான். ஆனால், கிடைத்த சில மாதங்களையேனும் அவர் அண்மையை, பாவனையாய் காட்டும் அன்பை அனுபவித்தால் என்ன?



வெறுமனே சுள்ளி பொறுக்கி முதுகு ஒடியாமல் குளிர் காய்வதில் தப்பென்ன? மற்ற நாட்களைவிட, அன்று சுலபமாய் தூங்கினாள்!

''காஸ் - சிலிண்டர் ரெண்டு கேட்டியாமே! பாலரமணி சொன்னார். எதுக்கு?'' கேட்டவனை சற்று பரபரப்புடன் ஏறிட்டாள்.

ஐடியாக்களை சிந்திச்சாப் போதாது... செயல்படுத்தணும் நீங்க சொன்ன துணிச்சல்ல உங்க அபிப்பிராயத்தைக்கூட கேட்காமல் செயல்பட ஆரம்பிச்சுட்டேன்.''

புருவம் உயர்த்தினான் கேள்வியுடன்.

''சொல்லு அம்மணி. இப்ப என்ன திட்டம் தோணிச்சு உங்க அழகான தலையிலே?''

''தொழிற்சாலையில் டீ - பிரேக் 15 நிமிடம். பத்தரையிலேருந்து பத்தேமுக்கால் வரை. ஆனா பதினொரு மணி வரை யாரும் மிஷினில் வந்து உட்காருவதில்லை'' முகவாயைக் கைகளில் ஊன்றி கவனித்தான்.

''இந்தத் தாமதத்திற்குக் காரணம் நம்ப ஆட்கள் ஃபாக்டரியை விட்டு தேநீருக்காக வெளியே போறதுதான் - டீக்கடை பஸ் ஸ்டாப் பக்கத்தில் இருக்குது. அங்கே டீ ஒன்னரை ரூபாய். அதையே நாம இங்கே ஒரு ரூபாய்க்குத் தந்தால் ஆட்கள் வெளியே போக வேணாம். கால் மணி நேரத்துல வேலை தொடரும். அவங்களுக்கு 50 காசு மிச்சம், நம்ப வேலையும் கெடாது.''

''சபாஷ்!'' அவன் கண்களில் வழிந்த பாராட்டில் குளிர்ந்து போனாள்.



''கொஞ்சம் கடலை மாவு இருக்குமா?'' சமையலறை போய் கேட்டவளுக்கு உடனே வெள்ளிக் கிண்ணத்தில் மாவு கிடைத்தது.

''எதுக்கும்மா... தேச்சுக் குளிக்கவா?''

''ம்ம்... ஃபாக்டரியிலே கட்டட வேலையில் நின்னு மேலெல்லாம் தூசு.''

''பாலாடையும் தரட்டாம்மா?''

''ம்ம்... நறநறன்னு அழுக்குதான்.''

''ஆனாலும் அழகு கூடித் தெரியறிங்கம்மா. அங்கே குளிர் தேசம் போல - வெளிறித் தெரிஞ்சீங்க'' என்றாள் மேல் வேலை பார்க்கும் சங்கு.

''முதல்ல நீ பாத்திரங்களைக் கழுவம்மா. இங்கக் கிளறக்கூட ஒரு கரண்டியில்லை'' அவளை வெளியே துரத்திய ராஜப்பா, அம்மா கிட்ட ஒரு விசயம் சொல்லணும்'' என்றார் மேல் துண்டைத் திருகியபடி.

''சொல்லுங்க.''

''அனும்மா சரியாச் சாப்பிடறதில்லை. நீங்கதான் எடுத்துச் சொல்லணும்.''

யாரோ தன்னை இழுத்து வைத்து அடித்தது போலிருந்தது.

''ஓ... எப்போதிருந்து?''

''வந்த ரெண்டு வாரமும் பேருக்குக் கொறிக்கறாங்கம்மா. காலை உங்களோட சாப்பிட்டாலும் மதியம்...''

''நாங்க வர்றப்போ அனு தூங்கறதாய் சொல்வா சங்கு.''



''டீயோ காபியோ குடிச்சுட்டுப் போயிடறது - மெலிஞ்சுட்டாங்களேம்மா...''

''ம்ம்... நான் பேசறேன்.''

''ஃபாக்டரி பொண்ணுங்க சதா உங்களைப் பத்தி பெருமையாய் பேசுதுங்கம்மா. அதான் உங்ககிட்ட இந்தப் பிரச்சினையையும் தந்துட்டேன்.''

''நல்லது ராஜப்பா. பஜ்ஜியும் ரெண்டு கிளாஸ் ஜூசும் பிழிஞ்சு மேல அனும்மா அறைக்கு எடுத்துட்டு வர்றீங்களா?''

''ஆகட்டுங்கம்மா...'' உற்சாகமாய் தலையாட்டினார்.

குணமுள்ள வேலையாட்கள் அமைவது ஒரு பாக்கியம். ஆக்கினோமா, ஒழித்தோமா என்றில்லாமல், தனக்கு சம்பளம் தருபவர் சாப்பிட்டாரா இல்லையா என்பதைக் கவனிக்கும் பரிவான சமையல்காரர்கள் அமைவது அரிது. தானும் இங்கு வரவழைக்கப்பட்ட வேலையைச் செவ்வனே செய்ய வேண்டுமே...

''அனு...'' கதவை மென்மையாகத் தட்டிவிட்டு காத்திருந்தாள்.

''யார்... பத்மினி அக்காவா?''

''நான்தான்.''

''வாங்க'' ஓடிவந்து கதவு திறந்த இளம் முகத்தில் ஆச்சரியம்... உண்மைதான். அவளது திரண்ட கன்னங்கள் வற்றியிருந்தன.

''என்னக்கா ஃபாக்டரி போகலியா?''

''லேசாய் தலைவலி.''

''மாத்திரை போட்டாச்சா... இல்லை டாக்டரை...''

''வியர்த்து கசகசன்னு இருந்தது. தேச்சு குளிச்சுத் தூங்கினால் சரியாயிடும். உன்னோட உட்கார்ந்து பேசவும் இதுவரை சமயம் வாய்க்கலை...''

''அத்தானுக்கு சதா உங்களை ஒட்டிட்டிருக்க ஆசை... உங்களை என்னோட பகிரக்கூட மனசில்லை... இந்த உணர்வெல்லாம் அவருக்கு இப்பத்தான் புரியுது.''

''ஆங்... இந்தப் பாலேடைத் தடவிக்கறியா? 2 சொட்டு எலுமிச்சம்சாறு விட்டேன். அழுக்கெல்லாம் உருண்டு வந்திரும். அப்புறம் கடலைமாவு தேய்ச்சுக் குளிச்சா பளீர்னு தோணும்...''

''அடடே... இதான் உங்க அழகின் காரணமா?''

''அழகு கடவுள் தர்ற வரம். அதைக் கொஞ்சம் கருத்தாய் காப்பாத்தறது நம்ப பொறுப்பு.''

''ம்ம்... தடவினால் ஜில்லுனு இருக்குது...''

''இதோ இப்படி மேல் நோக்கி நீவி விடு'' கண் மூடி ரசித்தாள் அனு.

ராஜப்பா அனுப்பிய பஜ்ஜி, பழரசத்தை ருசித்தனர். ''அனு, நீயும் ஃபாக்டரிக்கு வரலாமே? சீக்கிரமே அங்கே ஒரு டீ ஸ்டால் துறக்கறோம். நீதான் வந்து விற்பனையை ஆரம்பிச்சு வைக்கணும்.''

''அதெல்லாம் நீங்க வர்றதுக்கு முன்னே. இப்போ எங்களையெல்லாம் அத்தான் கண்டுக்கறதேயில்லையே...'' கேலியாய் சொன்னாலும் அனுவின் கண்கள் சோர்ந்திருந்தன.



''எல்லாம் வேலை மும்முரத்தினால் அனு. உன் பரிட்சை முடிவு எப்ப வரும்? இனி என்ன பண்றதாய் இருக்கே?''

''சட்டுன்னு ஒரு வயசுக் கூடிட்டா நல்லதுன்னு கடவுளை வேண்டிட்டு இருக்கேன்.''

பத்மினி சிரித்தாள்.

''வாய்விட்டு அதிகம் சிரிக்கணும் நீங்க... அழகு அள்ளுது...''

''சரி... நாளைக்கே 21 வயசாயிடுச்சுன்னா என்ன பண்ணுவே?''

''எனக்காக இல்லை. அப்ப நான் மேஜர். அதுவரை என்னைச் சின்னவள்னு ஒரு பொருட்டாய் மதிக்கலை... என் விருப்பங்களுக்கு மதிப்பில்லை...''

''உன் படிப்பு, அதுக்கான கல்லூரி, பொழுது போக்கு, உடை... எல்லாம் உன் ரசனைப்படிதானே அனு அமைஞ்சிருக்குது?''

''இதையெல்லாம் நமக்கு அமையற வாழ்க்கை முக்கியமில்லையா?'' கெஞ்சலாய் அனு கேட்டது பத்மினியைக் குடைந்தது.

பாஸ்கர் எனக்கு இல்லாத வரை மற்றேதும் பொருட்டல்ல என்கிறாள் இப்பெண்.

''உன் மனசு போலத்தான் வாழ்க்கை அமையும் அனு... நிச்சயமாய்...''

அனுவின் கண்கள் தழும்பின.

''தாங்க்ஸ் அக்கா, உங்களுக்குப் புரிஞ்சளவு அவருக்குப் புரியலையே. இன்னும் சம்பாதிக்கணுமாம். யாரும் எதிர்க்க





முடியாதளவு நிறைவாய் என் கைப்பிடிக்கணுமாம்... நான் அவருக்குத்தான்னு நானே சொன்ன பிறகு வேற யாரு சொல்லணும்... இல்ல யார் அனுமதி கேட்கணும் இவர்?''

''நம்ப சமுதாயத்தில் பெரியவங்க சம்மதம் முக்கியமாச்சே அனு...''

''என் வீட்டுல பெரியவங்க சித்திதான் - ஷீலா சித்திக்கு வயசு நாற்பதுதான்.''

''அந்த வயசுக்குரிய அனுபவமும் முதிர்ச்சியும் இருக்குமில்லையா?''

''வயசு, அனுபவம் இதுக்கெல்லாம் நான் முக்கியத்துவம் தர்றதாய் இல்லை. நான் பாஸ் அத்தானை மதிக்கிறேன். எனக்கு அவர் மட்டுந்தான் முக்கியம்... வேற யாருமில்லை.''

''பதறாதே அனு... எனக்குப் புரியுது... இன்னும் கொஞ்சம் நாள்தான்... பொறுத்துக்கோ'' இளையவளின் கைகளை ஆதரவாய் தடவினாள். ''ஆனால் அதுவரை நீ ஒழுங்காய் சாப்பிடணும் ஆரோக்கியமும் ஆனந்தமுமாய் இருக்கணும் என்ன?''

பதில் சொல்லாமல் அனு இவள் தோளில் சாய்ந்து அழ ஆரம்பித்தாள். அன்றிலிருந்து பத்மினி சாப்பாட்டு வேளைகளில் அனுவை இழுத்துச் சாப்பிட வைத்தாள்.

''ஒரு வருடங்கறது அதிகமில்லை அனும்மா. நான் என் நோயாளி தாத்தாவோடத்தான் பிரான்ஸ்ல ரெண்டு வருடம் இருந்தேன். வெளியவே போக நேராததில் ஒவ்வொரு வாரமும் ஒரு யுகமாய் நகர்ந்தது. இப்போ நாட்கள் நிமிடமாய் பறக்குது. படிப்பு, வேலைன்னு இழுத்துப் போட்டு செய்தால் ஒரு வருடம் கண் சிமிட்டறது போலத்தான்...''



''உங்க தாத்தா இறந்த அன்னைக்குத்தான் தற்செயலாய் அத்தான் உங்களைச் சந்திச்சாராமே?''

''அது தற்செயல் இல்லை. தெய்வச் செயல்னு நம்பறேன் அனு. தாத்தாவுடைய வேண்டுதலை கடவுள் நிறைவேற்றிவிட்டார்.''

''உங்களுக்கு... அத்தானை... பார்த்ததும் பிடிச்சிருந்ததா?''

பத்மினி சங்கடத்துடன் நெளிந்தாள்.

''என்னுடைய அவசியத்தினால்தான் நான் இவரோட கிளம்பினேன்... அதுவும் நான் இங்கே வந்தால்தான் உனக்கும் வசதின்னார்...''

''இது வேறயா?'' சீறினாள் அனு. ''காதலைத் தவிர கல்யாணத்துக்கு வேறு காரணம் இருக்கவே கூடாது. அது பாவம்... ஆண்களுக்கு இது புரியறதில்லை. அவங்களுக்கு எல்லாம் விளையாட்டுதான்...''

மிருதுவாய் புன்னகைத்தாள் பத்மினி... ''எது எப்படியோ... நான் செய்த புண்ணியந்தான் என்னை இங்கே கொண்டாந் திருக்குதுன்னு நம்பறேன்.''

''நான்தான் புண்ணியமே செய்யாத பாவாத்துமா போல...'' கசப்பாய் உதடு சுழித்தாள் அனு.

## 11

காலை வழக்கம் போல குளித்து, உடுத்தி ஏழு மணிக்குத் தன் அறையைத் திறந்தாள் பத்மினி. ஓரக்கண்ணால் இன்னும் உறக்கத்திலிருந்த பாஸ்கரை ரசித்தவள் செய்தித்தாள், காபி

எடுக்கக் கீழே இறங்கினாள். அவற்றுடன் மறுபடி மாடி வருபவள் பால்கனியில் அமர்ந்து செய்திகளை அலசி முடிப்பதற்குள் பாஸ்கர் குளித்துத் தயாராகிவிட, அதற்குள் படுக்கைகளை சீர்படுத்திவிடுவாள். பின் காலை உணவிற்காய் ஜோடியாய் இறங்குவார்கள். சாப்பிட்டதும் இவள் மதியச் சமையலுக்கான விபரங்களை சொல்வதற்குள் அவசரப் படுத்துவான்.

''ஆச்சா... பத்து கிளம்பலாமா?'' பிறர் முன்னிலையில் இவளை அழைப்பது செல்லமாய் 'பத்து' என்றுதான்.

''இதோ வர்றேங்க'' என்று இவள் கிளம்பினாள் தொழிற்சாலையின் வேலைகள் நாள் முழுக்க இவளை உறிஞ்சி சக்கையாக்கிப் போடும். பின் மாலைகளில் யாராவது சிநேகிதர்கள் இவர்களைப் பார்க்க வர, அல்லது புதுமண ஜோடியை விருந்துக்கு அழைக்க என்று சொச்ச நாளும் நழுவும்...

பலபேரின் அழைப்பை பாஸ்கர் தவிர்த்தாலும் மீதி விருந்துகள் சிரமமான பொழுதுகள்தான்.

''இனியும் நாம ஊரையெல்லாம் ஏமாற்ற வேண்டாமே'' என்ற இவள் கெஞ்சலுக்கு செவிமடுத்தவன், வேலைகளை மேலும் மும்முரமாக்கினான்.

அன்று சமையல்கட்டில் ராஜப்பாவிடம் பேசியவளை, பின் கட்டில் கேட்ட பேச்சும் சிரிப்பும் ஈர்த்தன. துணி துவைக்கும் பெரிய கல்லைச் சுற்றி சங்குவும் தோட்ட வேலை பார்க்கும் நாலைந்து பெண்களும் ஈயாய் மொய்த்தனர்.

''என்ன ராஜப்பா அங்கே?''



''செட்டியாரு வந்துருக்காரம்மா.''

''யாரது... எதுக்கு வந்திருக்கார்?''

''சேலைகளை விப்பாரும்மா... தவணையிலேயும் தருவாரு'' ஆர்வத்துடன் எட்டிப் பார்த்தார்.

இவள் தலையைக் கண்ட பெண்களின் உற்சாகம் கரை புரண்டது. ''வாங்கம்மா... செட்டியாரு அடுத்த மூட்டையைப் பிரிக்க மாட்டேங்கறாரு... அதில் விலை சாஸ்தியான சேலைங்க இருக்காம். உங்களுக்கு நூறு ரூவா சேலையே சாஸ்திங்காரு...''

ஆவலை அடக்கிக் கொண்டு மறுத்தாள்.

''அம்மா உடுத்தற வெளிநாட்டு தினுசுங்க மாதிரி வராதுதான். ஆனாலும் ஒரு எட்டு வந்து பார்த்தீங்கன்னா இந்த ஏழைக்குக் கவுரவம்'' செட்டியார் முன்னே வந்து கை குவித்தார்.

''அம்மாவுக்கு உசத்தி துணியாய் காட்டுமய்யா...'' பெண்கள் உத்தரவிட்டு இவளுக்கு இடம் விட்டு நின்றனர். சங்கு ஒரு நாற்காலியைக் கொண்டு வந்து போட்டாள்.

செட்டியாரும் அடுத்த மூட்டையிலிருந்த நயமான சேலைகளைப் பரப்பினார்.

''அடடே... இந்த ரோசா கலரைப் பாரு... அம்மா நிறத் துக்கு ஈடு ஜோடா...'' சங்கு அந்த ஜார்ஜெட்டை எடுத்து இவள் தோளில் இட்ட நேரம் பாஸ்கரது குரல் பலக்க எழுந்தது.

''பத்மினி... என்ன இத்தனை நேரம்?''



சூடுபட்ட கன்றாய் துடித்து ஓடினாள். ''இதோ வந்துட்டேன்...''

பரபரப்பான அவள் பதைப்பை ரசித்தான்.

''நிஜமான பெண்டாட்டிகூட இப்படி ஓடிவரமாட்டாள். சும்மா வள்ளுவருடைய வாசுகி ரேஞ்சில் இருக்கே...'' குரலைத் தழைத்துக் கிண்டலடித்தான்.

''சும்மா சேலைகளை எட்டிப் பார்த்தேன். உட்கார வைச்சுட்டாங்க...''

''பரவாயில்லை. பார்த்துட்டே வா. அந்த பிங்க் கலர் உனக்கு பொருத்தமாயிருந்துச்சு...''

''வேணாங்க... போன மாசந்தானே மும்பையில் பத்து சேலை வாங்கினோம்?''

''அதிலே இரண்டு பட்டை மாத்தி மாத்தி ஸண்டே கோயிலுக்குக் கட்டிக்கறே... ரோஸ் டிஷ்யூ விழாக்களுக்குத்தான் பொருத்தம். மீதி ஏழிலே வானவில் மாதிரி வளைய வர்றே... ஆனா எனக்கே நாலு வாரமாய் உன்னை அதிலேயே பார்த்து சலிச்சிடுச்சு. இன்னும் பத்து சேலை எடுத்துக்கோ'' அவளது பரிதாப முழியைக் கண்டு சிரித்தான்.

''என்னடா... வைட்டமின் 'ப'வைத் தாராமல் வாங்கிக்க வாங்கிக்கன்னு உபசரிச்சா எப்படின்னுதானே?''

''அதென்ன வைட்டமின்?''

''உலகில் உயிர் வாழ மிக அத்தியாவசியமானது பணம்!''

''பணம் பல சமயம் ஆபத்துமாயிடுதே?''

''அழகும்தான். ஆபத்து அதுக்காக எல்லாரும் அலங் கோலமாய் திரிய முடியுமா? மின்சாரம் மாதிரி இதுங்களை



கவனமாய் கையாள வேண்டியதுதான்'' பேச்சோடு பர்சிலிருந்து சில ஐநூறு பல நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து நீட்டினான்.

''இவ்வளவு போதுமா?''

''கடவுளே... இதென்ன?''

''இதுதான் இண்டியன் கரன்சி. அதற்குள் மறந்திட்டியா?'' அவன் புருவம் உயர்த்தி விழி உருட்ட, இவளுக்கு சிரிப்பு பொங்கியது.

''இவ்வளவு வேணாங்க. எனக்கு ரெண்டு, அனுவுக்கு ரெண்டுன்னு வேணும்னா எடுத்துக்கறேன்.''

''சாரி பத்மினி. இத்தனை நாள் உனக்குக் கைச்செலவுக்கு பணம் தேவைங்கறதைக்கூட உணராமல் இருந்துட்டேன். அனுவுக்கு பேங்க்ல கணக்குண்டு. வேண்டியபோது ஆயிரம் ரெண்டாயிரம் எடுத்துக்குவா.''

''அனு இத்தனை சொத்துக்கும் பாத்யதை உள்ளவள்.''

''உன் உழைப்பையும் நான் இலவசமாய் உறிஞ்சிக்க முடியாதே. இது உன் பணம்.''

''இங்கே கூட்டிட்டு வந்து வசதியாய் - பிரியமாய் கவனிச்சுக்கறீங்க...''

''மனைவியை இப்படித்தான் நல்ல புருஷன்மார் பார்த்துக்கறாங்க'' என்றான் கண் சிமிட்டலுடன்!

''ஆனா... நான்... உங்க...'' மோதிர விரலில் கிடந்த பொன் வளையத்தைத் தடவியபடி தினறினாள்.

''மனைவியாங்கற சந்தேகம் உனக்கு வராம செய்திடவா!'' அவன் ஒரு எட்டு முன்னேற இவள் இரண்டு அடி பின்னே நகர்ந்தாள்.

''எ... என்ன சொல்றீங்க?''

''போன வாரம் பிரதாப் வீட்டுக்குப் போயிருந்தோமே...?''

''.....''

''என் வக்கீல் பிரண்ட்... அவன்கூட சொன்னான். என்னதான் வெளிநாட்டில் நடந்த கல்யாணம்னாலும் நம்ப சம்பிரதாயப்படி தாலியும் கட்டிருடான்னு...''

''ஐயையோ!''

''எத்தனை பேருக்கு இது மாதிரி சந்தேகமா? இப்ப நீ வேற எங்கிட்ட பணம் வாங்கிக்க அரை மணி நேரம் யோசனையும் தர்க்கமுமாய் நிக்கறே... செட்டியாரே ஊர் முழுக்கச் சொல்லிடுவார்...''

''என்ன... என்னன்னு?''

''இந்தம்மா ஆசையாய் சேலையைப் பார்த்தது. ஆனா அந்த முசுட்டுப் புருஷன் காசு தராமல் அழிம்பு செய்தான்னு...'' அவசரமாய் பணத்தைப் பெற்றுக் கொண்டாள்.

''மேலே என் மேசையில் சின்ன பர்ஸ் இருக்குது. அதில் பணத்தை வைச்சுக்கோ. சேலை பார்க்க அனுவையும் வரச் சொல்லவா?''

''சரி'' தலையாட்டிய பத்மினிக்கு அவனை அப்படியே கட்டிக் கொள்ள வேணும் போல் தோன்ற, ஒரு கணம் திகைத்துப் பின் மாடிப்படிகளில் மானாய் துள்ளி ஓடினாள்.



மறுநாள் புதுச் சேலையில் தொழிற்சாலைக்குப் போனவளிடம், மற்ற பெண்கள் பேச்சுக் கொடுத்தனர். ரோஜா நிறத்தின் கருநீலப் புள்ளிகளுக்கு ஏற்ப கருநீல ரவிக்கை அவளை தூக்கிக் காட்டியது.

''புதுசாம்மா? உங்களுக்குன்னே நெய்தது போல் இருக்குது...''

''உங்க ஊர் செட்டியார்கிட்டதான் எடுத்தேன்.''

''அதை நீங்கக் கட்டினா தனி அந்தஸ்துதான்... எம்புட்டுங்கம்மா?''

''இருநூற்று ஐம்பது. நூறுக்கும் நல்ல சேலை வைச்சிருந்தாரே.''

''காசைத் தந்தா தருவாருதான். ஆனா எங்க கையில காசிருந்தா புருஷமாருக்குப் பொறுக்காதே. ஒருத்தன் குடிக்கதுக்கு அடுத்தவனுக்கு சீட்டுல தோக்கதுக்கு எங்க உழைப்புக் காசு வேணுமே... பீடியை வலிச்சுப் புகையாக்கி மீதியை மருந்து மாயம்னு கரைக்கணும்... அதுக்குத்தானே எங்க சம்பாத்தியம்?'' அதுவரை சிரிப்பும் களையுமாயிருந்த முகங்கள் கலங்கின.

''ஏன் உங்க வீட்டுக்காரங்க வேலை பார்க்கிறதில்லையா?''

''ஏன் பார்க்காம? அது ராஜாக்கமாரு இஷ்டம்... நாம கேள்வி கேட்டுற முடியாது. சம்பளத்தைத் தாயான்னு கை நீட்டிறப்படாது...''

''உடுத்து ம த்துக்கு நாலு சேலை இருந்தா வசதிதானம்மா. ஆனா முடியாது...''



ஒரு கணம் யோசித்தவள் - ''மாசா மாசம் பத்து, இருபதுன்னு சீட்டு சேர்ந்தா? செட்டியார் தவணையை இங்கேயே வந்து வாங்கிக்கச் சொல்றேன்...''

''புண்ணியமாப் போகுங்கம்மா... நான் முதல்ல நாலு ரவுக்கத் துணிதான் எடுத்துத் தைக்கணும். எப்ப, எங்க தையலு பிரிஞ்சிடுமோன்னு குன்னித் திரியறேன்.''

அன்று மாலை காரில் வீடு திரும்பும்போது பாஸ்கர் கேட்டான்.

''என்ன, நம்ப பெண் ஸ்டாஃப் எல்லாருக்கும் ரெண்டு ரவிக்கைத் துணி இலவசமாய்த் தந்தீங்க போல...?''

''ஸாரி... உங்ககிட்ட சொல்லாமல் செய்தது தப்புதான். ஆனால் பத்து சேலை இருக்கிற எனக்கே மேலும் நாலு இருந்தால் வசதின்னு தோண, நைஞ்ச ரவிக்கையோட கஷ்டப்படறவங்களுக்கு ரெண்டு ரவிக்கையாவது தேவை. அவங்களுக்குப் பணப் பிரச்சினை. இன்னைக்கு அது... அதாவது பணம் எங்கிட்ட இருந்தது... அதான்...''

''பரவாயில்லை பாஸ்டர் உன்னை நல்லபடியாய் வளர்த்திருக்கார்...''

''வளர்த்தது எங்கம்மாவும் தான்...''

''அவங்களும் ரொம்ப நல்லவங்கதான் போல...'' இந்தப் பாராட்டுகளை மலர்ச்சியுடன் ஏற்றுக் கொண்டாள்.

இறங்கும்போது இவளுக்காய் கார் கதவைத் திறந்தவன், உரிமையாய் தோளில் கை போட, ஒரு கணம் திகைத்தவள் மறுகணம் சுதாரித்து அவன் பார்வை போன இடத்தைக் கவனித்தாள். அவனுக்கு மட்டுமே கேட்கும் தொனியில் வினவினாள்.



''யாரது?'' அழகிய தோற்றமும், தோரணையுமாய் நின்றிருந்த அப்பெண்மணி யாரென்று ஓரளவு இவள் யூகிக்கவும் முடிந்தது.

''ஷகீலா அத்தை... அனுவுடைய சின்னம்மா...'' அவன் பாராட்டில் அல்லியாய் மலர்ந்திருந்த அவள் முகம் உச்சி வெயில் சுட்டது போல கூம்பியது.

''கடவுளே... இவங்க வர்றதாய் ஏன் சொல்லலை...?''

''வேண்டாம்னுதான்... அனு வந்த அன்னைக்கே 12 தடவை கண்ணாடிக்கும் ஆறு தடவை டாய்லெட்டுக்குமாய் அல்லாடினே... மறுபடி எதுக்கந்த டென்ஷன்னுதான் சொல்லலை...'' அவனுடைய வலிய கரங்கள் தன்னைச் சுற்றிக் கிடந்தது அவளுக்கு அந்நேரம் தேவையாயிருந்தது.

## 12

''இந்த உருண்டைக் கறி குழம்பை இன்னும் ஒரு கரண்டி விடட்டா அத்தை... ஏன்னா வேற எங்கேயும் இது கிடைக்காது. ஏ கிளாஸ் ருசி...''

''ராஜப்பாவை அதிகம் பாராட்டாதே பாஸ்கர். பஸ் ஸ்டாண்ட் எதிர்ப்புறம் பரோட்டா சால்னா கடை போட்டிருவான்...'' சாப்பிட்டபடி ஆலோசனை தந்தாள் ஷகீலா.

''அடடே... இந்த ஐடியா உனக்குத் தோணலியே பத்மினி... கடை ஆரம்பிச்சுடலாமா?''

''ஓகோ... பத்மினி சமையல் கெட்டியாக்கும்?''

''இதைவிட பிஸினஸ்ல தூள் கிளப்பறா! ஃபாக்டரியில் எம்.டி. போஸ்டுக்கு தேர்தல் வைச்சா மொத்த ஓட்டும் அம்மணிக்குத்தான். அத்தனை பாப்புலர்...''

''ஷ்... என்ன இப்படி அநாவசியமாய்...''

''ஆங்... எல்லாத்துக்கும் மகுடம் வைச்ச மாதிரி... இது வேற...'' இடது கை சுட்டு விரலை பலக்க ஆட்டினான் பாஸ்கர்.

''எது?''

''அதான்... அடக்கம்!''

ஷகீலா பலக்க சிரித்தாள்.

பத்மினி சங்கடமாய் நெளிய, அனுவின் முகமும் சரியில்லை.

''சரியான மனைவி கோண்டு ஆயிட்டியே பாஸ்கர்... நான்... யாருமே இதை எதிர்பார்த்திருக்க மாட்டாங்க... பத்மினி இஸ் லக்கி...'' ஓரக் கண்ணால் ஷகீலா தன் மகளைப் பார்த்தாள்.

தங்கள் நாடக நடிப்பிற்கான கைத்தட்டலாய்தான் இதைக் கொள்ள முடியும். விவரமறிந்த வயதில் விளையாடும் அம்மா - அப்பா விளையாட்டு இது! கூச்சமும் கவனமுமாய் போடும் தம்பதிகள் வேடம்! இத்தனையும் நிழலாய் இல்லாமல் நிஜமாய் இருந்தால்...

ஆனாலும் அனுவின் வாடிய குழந்தை முகத்தைப் பார்க்கும்போது,

'பேராசைப்படாதே பத்மினி. மற்றொருத்தியின் வாழ்வில் நீ குறுக்கிடுவது... ஏன் ஆசைப்படுவதே பாவம்' என்ற எச்சரிக்கை மணி பலக்க ஒலிக்கிறது.



அதுவும் அனுவை மணக்கும்வரை உன் உதவி தேவை என்று பாஸ்கர் விவரம் சொல்லியே தன்னை அழைத்து வந்த பின் மனதை இப்படிப் புரள விடுவது ஆபத்து.

மாம்பழத்தை அரிந்து தட்டிலிட்டு சிறு முள் கரண்டிகளுடன் பரிமாறிய பத்மினியை வினோதமாய் நோட்டமிட்டாள் ஷகீலா. இருவரும் தனியே இருக்க நேரிட்ட சில நிமிடங்களில் தன் எண்ணங்களைச் சொல்லியும் விட்டாள் -

''நீ அழகாயிருப்பேங்கறது நான் எதிர்பார்த்ததுதான். ஆனால் இத்தனை எளிமையாய் பழகறது ஆச்சரியம்... இனிய ஆச்சரியம்...'' நேர்த்தியான ஆங்கிலத்தில் பாராட்டினாள்.

''நன்றி... கொஞ்ச நேரம் படுக்கறீங்களா?''

''வேறென்ன செய்றது... வேண்டாத விருந்தாளி சாப்பிட்டு, தூங்கிதான் நேரத்தை ஓட்டணும்.''

''அப்படியெல்லாம் இல்லைங்க...''

சற்று ஏளனமாய் சிரித்தாள் ஷகீலா. வயது நாற்பதைத் தொட இருந்தாலும் அதைவிட பத்து வயது குறைவாக மதிப்பிடும்படி இருந்தாள். குழந்தை பிறக்காத தேகம் கட்டுவிடவில்லை. ஆனால் முகம் முதிர்ந்திருந்தது.

''பாவம்... வாழ்வின் கசப்புகள் பதித்த முத்திரை அது...'' என்று அனுதாபப்பட்டாள் பத்மினி.

''நீ இந்த வீட்டின் எஜமானியாய் வந்ததை பிறர் சொல்லி தெரிஞ்சுகிட்டேன். சரி பாஸ்கராய் வந்து சொல்லட்டும்னு காத்திருந்தேன். ஆற அமர போன வாரம் சொன்னான். நானும் ஆத்திரப்படாமல் இப்ப வந்தேன்.''



''ம்...''

''வாழ்க்கைக்கு உறவு வேணுங்கறது போல பணமும் தேவையாய் இருக்குது பத்மினி. அதை நான் கேட்டது தப்பா?'' இயலாமையும் ஆத்திரமுமாய் கேட்டவளை அச்சத்துடன் பார்த்திருந்தாள்.

''தப்பில்லை... ஆனால் இவங்க நியாயமான மனுஷங்க... அவங்களுக்குத் தெரியாதா... நிச்சயம் உங்களுக்கான பங்கு பணம் வரும்...''

''பரவாயில்லை. நாசூக்காய் நீ யார் பக்கங்கறதைச் சொல்லிட்டே... எனக்கந்த நாசுக்கு போதாது. என் வக்கீலுக்கு அப்படி ஒரு வார்த்தை இருக்கிறதே கூட தெரியாது போல... கச்சடாத்தனமாய் அனுவுடைய பிறப்பு பற்றியெல்லாம் கேள்வி எழுப்பி முரட்டுத்தனமாயும் இழுக்கலாங்கறது அவர் சித்தாந்தம்... ஆனா நான் கவனமாய் இருந்திருக்கணும்...''

''கசப்பு எல்லாக் குடும்பங்களிலேயும் வரதுதான்... வந்ததுபோல போயிடும்...''

''தாங்க்ஸ்... அனு எங்கே...?''

''போன் வந்ததுன்னு போனா... அவள் அறையில்தான் இருப்பா...''

''அவகிட்ட பேசியும் நாளாச்சு...'' என்றபடி எழுந்தாள் ஷகீலா.

பாஸ்கர் சித்தரித்ததைப் போல இவள் இல்லையே என்ற எண்ணத்துடன் தன் வேலைகளில் மூழ்கினாள் பத்மினி. தான் பயந்த இரண்டாம் கண்டத்தையும் இலகுவாய் தாண்டிவிட்ட பெருமிதம் அவளுக்குள்!



இதென்ன, எலியைப் பிடிச்சுப் பூனை வாயில் தர்றாப்பல சின்ன அத்தையை அனுவுடைய அறைக்கு ஏன் அனுப்பினே?'' எகிறினான், பாஸ்கர்.

''பூனைக்குட்டியை பூனைகிட்ட விடறதில் தப்பில்லைன்னு நினைச்சேன்...''

''இது தாய்ப் பூனையில்லை... கடுவன்...''

''அதெல்லாம் நீங்களாய் செய்துக்கற கற்பனை... சின்னம்மா தப்பு செய்திருக்கலாம். ஆனா அதை அவங்க தப்புன்னு உணர்ந்த பிறகு மன்னிக்காமல் இருக்கறது பெரிய தப்பு! அவங்க அனுவுக்கு தாய் உறவில்லையா?''

''உறவு ·முறை அப்படின்னாலும் அவங்க செய்த கலாட்டாவினாலத்தான் நான் பாரீஸ் வந்தேன். இவங்க வக்கீல் வாயை மூடத்தானே நான் அத்தை மாமாவுடைய கல்யாண சான்றிதழைத் தேடி வந்தேன்?''

''நீங்க அதுக்காக வரலை...'' மெள்ள தலையசைத்தாள்.

''பின்னே...?''

''என்னைக் காப்பாற்ற, உதவ கடவுள் உங்களை அனுப்பினார்!'' சிடுசிடுத்த பாஸ்கரின் முகம் கனிந்து.

''தாங்க்ஸ் அம்மணி. ஆனா இப்படியெல்லாம் என்னை மஸ்கா பண்ணி ரூட்டை மாத்த முயலாதே! சொத்துல தன் பங்கு வரணுங்கறதுக்காக அவனுடைய பிறப்பையே...''

''அதையே எத்தனை முறை சொல்வீங்க? வக்கீல்களுடைய திறமையான வாதாடல் அது. தன் எதிர்காலம் எப்படியோங்கற பயத்துல இருந்த சின்னம்மாவுக்கு வக்கீலின் வாதம் அப்ப

முழுசாய் புரியலை... நீங்களுமே சொல்லலை வாழ்வுக்கு அத்தியாவசியமானது வைட்டமின் 'ப'ன்னு?''

''ஆக சின்னம்மா செய்ததை மன்னிச்சுடலாம்ங்கற?''

''மறந்திடுங்கன்றேன்... நாம அடிச்சிடுவோங்கற கிலியிலே பூனை நம்மைப் பிராண்டும். அதுவே பழகின பிறகு நம்மேல நகம் படாம பஞ்சாய் உரசும்... அவங்களும் அனுவும் மனம் விட்டுப் பேசிக்கறது நல்லது... அவங்க அனுபவத்தில் அனுவுக்கு நாலு புத்தி சொல்வாங்க...''

''அனுவிற்கு புத்திமதியெல்லாம் அவசியமில்லை. அவள் மனசுக்கு ஏற்ற மணாளன்தான் தேவை...'' என்றான் பாஸ்கர் எங்கோ வெறித்தபடி.

''இன்னும் சில மாசங்கள்ல எல்லாம் உங்க மனசு போலவே நடக்கும்'' என்பதற்குள் பத்மினியின் தொண்டை கமறியது.

தனக்குத்தான் துக்கம் மென்னியை நெறித்தது என்றால் தன் சிற்றன்னையோடு பேசிய அனுவின் முகமும் சரியில்லை.

ஒரு நாள் தன் அறையில் யாருமில்லை என்ற சுவாதீனத்தில் நுழைந்த பத்மினி கொதி நீரில் கால் வைத்தது போல இழுத்து நின்றாள். அறைக்குள் மிக மெல்லிய குரலில் ஏதோ பேசியபடி குனிந்து அனுவின் முகத்தை வருடியவாறு நின்ற பாஸ்கரைப் பார்த்தவள் விழிகளும் கங்கு தெறித்தது போல மூடின. இருவரும் இருந்த நெருக்கத்தில் இவளைக் கவனிக்காததால் பல்லியாய் ஊர்ந்து வெளியேறினாள்.

தன்னைப் பற்றிய சஞ்சலம் போதாதது போல பாவம் அனுவிற்கு இப்போது சின்னம்மாவின் வருகை வேறு...

ஷகீலா வந்தது தெரிந்தோ என்னவோ சில எட்டிய உறவுப் பெண்கள் வீடு வந்தனர்.



''நாளைக்குக் கோயில்ல அறுப்பின் பண்டிகையில்லை? அதான் தோட்டத்துப் பழம், அரிசி எல்லாம் எடுத்துட்டு வந்தோம். இப்பவே கோயிலுக்குப் போய் வைச்சுட்டா காலையில் பதற வேணாம். வழியில் உங்களையும் பார்த்துடலாம்னு... பரிமாறப்பட்ட முறுக்கை கொறித்தபடி பேசினர்.

பத்மினிக்கு தானும் தன் தாயும் விதவிதமான பலகாரங்களைச் செய்து அப்பண்டிகை சமயம் ஆலயத்தில் ஏலம் விடத் தருவது நினைவிற்கு வந்தது.

தோட்டத்து வாசமலர்களைக் கெட்டிச் சரமாய் தொடுத்து ஈரத்துணியில் பொதிந்து தருவாள். மாலை போல தொடுக்கப்பட்ட ஒரு முழ மல்லிகைச் சரம் முப்பது ரூபாய்க்குக் கூட ஏலம் போகும்.

நூற்றுக் கணக்கான ஏக்கர்கள் விளைநிலம் கொண்ட பாஸ்கர் நிறைய தரலாம். ஆனால் தந்தது போலவும் தெரிய வில்லையே?

தங்கள் நிலங்களில் விளையும் முதற்பலனை ஆண்ட வருக்கு நன்றியின் காணிக்கையாய் படைப்பதே அப் பண்டிகையின் தாத்பரியம்.

''தொழிற்சாலைக்குப் போன் செய்தாள். எடுத்தது பாஸ்கர்தான்.

''ஏங்க... நாளைக்கு அறுப்பின் பண்டிகை...''

''ஓகோ...?''

''நாமோ... நம்ப சார்பில் ஏதாவது அனுப்பணுமே.''





''கண்டிப்பாய்... அம்மா இருந்தால் இதையெல்லாம் கவனிப்பாங்க...''

''மாம்பழ வற்றல் நூறு பாக்கெட், இன்னைக்கு சீல் செய்தேன். ரெண்டு டசன் பழரசம் எடுத்தோம்... ஜாமும் தான்...''

''பட்டியலை என்னிடம் சொல்ல அவசியமில்லை பத்து... நான் கோபால் பண்ணைக்கு டிரிப் இரிகேஷன் விஷயமாய் போறேன்... நீயே வந்து வேண்டியதை எடுத்துப் போயிடேன்..''

''தாங்க்ஸ்...'' உற்சாகமாய் போனை வைத்த பிறகுதான் உறைத்தது. வீட்டில் ஒரு 'ஜீப்' நின்றாலும் ஓட்டுனர் லீவில் போயாயிற்று.

''என்ன பத்மினி யோசனை?''

''பாக்டரி போகணும் சித்தி. ஆனா டிரைவர் இல்லை.''

''என் கார் இருக்குது...''

''ஆனா உங்களை ஓட்டச் செய்து தொந்தரவு செய்ய...''

''என்ன விஷயம் சொல்லு...''

''நம்ப உற்பத்தி பொருட்களையும் நாளைக்குக் கோயில்ல வைக்கலாம்னு.''

''நல்ல விஷயம்... கிளம்பு போலாம்.''

''அனு நீயும் வர்றியா?'' தனியா கிடப்பதைவிட நாலு பேரின் நடுவே இருப்பது பரவாயில்லை என்ற நினைப்பில் வரவேற்பறை வந்து அனுவை விருந்தாளிகளின் பேச்சும் சிரிப்பும் தளர்த்தியிருந்தன.



''வர்றேனே!''

''நாங்களும் கிளம்ப வேண்டியதுதான்.''

''வாங்க... சேர்ந்தே போவோம்... கோயிலைத் தாண்டித்தானே ஃபாக்டரி போகணும். பேசிட்டே போகலாம். பிறகு உங்க காரிலே மாறி ஏறிப் போயிடலாம்.''

''ம்ம்... வினிதா கல்யாணத்தப்ப ஏதோ பிரச்சினைன்னியே... என்ன?'' பேச்சைத் தொடர்ந்த பெண்கள் ஷகீலாவின் காரினுள் ஏறினர்.

வினிதா வீட்டுப் பிரச்சினை அலசப்பட்டதும் அடுத்ததிற்குத் தாவினர்.

''இதே போலத்தான் மாலு வீட்டிலேயும்.''

''எந்த மாலு?''

''நம்ப மோகனுடைய அக்காவைச் சொல்றேன்.'' இடநெருக்கடியால் தன்னை மிக ஒட்டி உட்கார்ந்திருந்த அனுவின் உடல் விறைப்பதை பத்மினியால் உணர முடிந்தது.

''ரொம்பச் சாதாரண குடும்பம். ஆனா மோகன் ஜெர்மனிக்குப் பறக்க ஆரம்பிச்சாச்சு. இனி மாலு தன் மகளுக்கு நிறைய செய்வான்ற எதிர்பார்ப்பில் நல்ல வரனெல்லாம் வருது...''

''இது நாமும் தெரிஞ்சே செய்ற தப்பு...''

''எது டௌரிதான? இது ஜாதி மதத்துக்கு அப்பாற்பட்ட பிரச்சினை.''

''சமூகப் பிரச்சினை...''

''சிம்பிளாய் சொன்னால் ஆண்களுக்கு முதுகெலும்பு இல்லாததுதான் பிரச்சினையே!'' பெண்கள் குத்தலாய் சிரித்தனர்.

''மாலு மகள் கல்யாணத்துக்குப் பிறகாவது மோகனும், கல்யாணம் செய்யணும். வயசு முப்பத்தைத் தாண்டியாச்சு.''

''பணம் பெருகினதும் அவன் கம்பீரமும் கூடிடுச்சு... ஆள் அசத்தறான்.''

அனுவின் உடல் மேலும் இறுகியது.

ஒருவேளை... இவர்கள் குறிப்பிடும் மோகனைத்தான் தான் பம்பாயில் சந்தித்தோமோ?

''நாங்க மும்பையிலே வந்து இறங்கியதும் மோகன்னு ஒருத்தரை சந்திச்சோம். தென்னங்கீற்றினால் செய்த கைவினைப் பொருட்கள்... சிரட்டையால அகப்பையெல்லாம் தயாரிச்சு ஏற்றுமதி செய்றதாய் சொன்னார்.''

''நம்ப ஊர் பையனா?''

''ம்ம்...''

''ஆள் ஹீரோ மாதிரி இருந்தானா... பேச்சும் சிரிப்புமாய்?''

''அதுவுந்தான்.''

''அப்ப அவனேதான்... இன்னும் ஜெர்மனியிலேருந்து திரும்பலைபோல...'' அதற்குள் கோயிலை அடைந்தவர்கள் இறங்கிக் கொள்ள, இவர்கள் பயணம் தொடர்ந்து வேலையையும் முடித்தனர்.

போகும்போது கலகலவென்றிருந்த வாகனம் இப்போது மூன்றே பேரைச் சுமந்திருந்தாலும் அதில் கனத்த அமைதி.



''என்ன அனு யோசனை?''

''கல்யாணம் பற்றி பேசினால் பிரச்சினைகளைப் பற்றி பேசறீங்க... கல்யாணமும் பிரச்சினையும் ஒன்றில்லாமல் மற்றதில்லை போல...?''

''கல்யாணம்னா உன் வயசில் சேலை, நகை, காதல்னு கற்பனை செய்யணும். நீயான்னா கிழவியாட்டம் பிரச்சினைன்னு கதையடிக்கறே...'' கடிந்தாள் ஷீலா.

''நான் பார்த்ததெல்லாம் பிரச்சினைகள்தானே...?'' என்றாள் அனு கசப்பாய். பிறகு மூவருமே பேசவில்லை.

## 13

அத்தனை பொருட்களுக்கும் மாடி பால்கனியில் வைத்து பெயர் சீட்டு ஒட்டிய பத்மினி மெள்ள பேச்சை ஆரம்பித்தாள்.

வேப்பமரக் காற்றும் அம்புலியின் அரை வெளிச்சமும் பேசத் தோதாயிருந்தன.

''சித்தியோட பேசறப்போ கொஞ்சம் கவனமாய் இரும்மா அனு.''

''அவங்க கவனமாய் இல்லையே...?''

''பெரியவங்க... ஆலோசனையாய் நானும் சொல் வாங்கதான்.''

''இப்ப அவங்க பேசியதை சொல்லலை... சித்திக்கும் அப்பாவுக்கும் சதா சண்டை வரும். அவங்களுக்கிடையே 12



வருட இடைவெளி இருந்ததால ஒத்துப்போகலைன்னு சித்தி நேற்றுக்கூட சொன்னாங்க... அதான் அவங்க எனக்குச் சொன்ன புத்திமதி. அதாவது நானும் அதே தவறைச் செய்யக் கூடாதாம். அப்பாவும் இதையேத்தான் தன் உயில்ல எழுதினார். எனக்கும் இவருக்கும் பதினொரு வயது வித்தியாசம், ஆனா மனம் ஒத்துப்போயிட்டா வயசு பொருட்டா என்ன... சொல்லுங்கக்கா?''

''எனக்குத் தெரியலியே அனு... அனுபவப்பட்டவங்க சொல்றாங்க...'' நழுவினாள்.

''சண்டை பிடிக்கறதில்தான் சித்திக்கு நல்ல அனுபவம்.'' திடும்மென அனுவின் கண்கள் குளம் கட்டின. தனக்குள் ளாகவே பேசுவது போல பேசலானாள்.

''அன்னைக்கும் பயங்கர சண்டைதான். அதாவது அப்பாவுக்கு விபத்தான அன்றும், காரணம் என்னன்னு தெரியாட்டியும் அப்பாவுக்கும் சித்திக்குமிடையே ஏதோ கோபம், வாக்குவாதம்... அந்த ஆத்திரத்துல வீட்டை விட்டு காரோட்டிட்டுப் போன அப்பா திரும்பினது சடலமாய்தான்.''

''பழசையெல்லாம் கிளறினால் புளிப்பு வாடைதான் வரும் அனு...''

''சில சமயம் மனசுக்கு அது வேண்டியதாயும், ஆறுதலாயும் இருக்குதே. எங்கப்பா சித்தியை சந்திச்சபோது அவங்க ஒரு ஓட்டல் வரவேற்பாளராய் இருந்தாங்களாம். அழகாய் சிரிச்சுப் பேசறவங்களைக் கண்ட அப்பாவுக்குச் சபலம்...''

''மனிதன் தனியாய் இருக்கறது நல்லதில்லைன்னுதானே கடவுளே நம்மை ஆண் பெண்ணுன்னு உருவாக்கினார்? சபலம்தானே இவர்களை இணைக்குது...?''



''தனிமையே தேவலைங்கற அளவு சதா சண்டை போட்டாங்களே? வயசு வித்தியாசமும் காரணமாய் இருந் திருக்கலாம். சித்தி ஒரு வாரம் ஊட்டி போய் குஷியாய் இருந்துட்டு வரலாம்னு கேட்டா, அப்பா உயர் ரக விதை பற்றிய கருத்தரங்குக்குக் கிளம்பிடுவாங்க. அப்பா சிநேகிதர்களை சித்திக்குப் பிடிக்கலை. இவங்க உடை, அலங்காரம் அப்பாவுக்கு எரிச்சல்! அப்பாவுடைய நரையும் தொந்தியும் இளம் மனைவிக்கு ஏமாற்றம்...''

''அதான் உனக்கு உபதேசம் பண்றாங்க...''

''எங்க மனசு ஒத்துப் போயிருக்கே... எதிர்காலத்துக்கு இவர் பாதுகாப்பு. இவள் தேவைங்கற எண்ணத்துல அவங்க திருமணம் நடந்துச்சு... காதல் ஒரு காரணமாய் இல்லை...''

''முப்பதுகளில் காதலைவிட செக்யூரிட்டி பற்றிய தேவை, பயம் அதிகமிருக்கும். சித்தி எதிர்பார்த்த அந்த பாதுகாப்பை நீங்க இப்போது அவங்களுக்குத் தந்துடறதுதானே முறை இல்லையா?''

''நானும் அதை மறக்கலையே. ஆனா அடுத்த வருடம்தானே சொத்து என் கைக்கு வரும்? சொத்து எப்பவுமே அப்பா பேரில் தனியாய் இல்லாததால் சித்தி அதிலே பாத்யதை கொண்டாட முடியலை... அதனாலதான் அத்தனை ஆத்திரம்...''

''ஆதங்கமாய்கூட இருக்கலாம்.''

''ம்ம்... வக்கீலை வைச்சுக் கண்டபடி மிரட்டிட்டாங்க.''

''நீ பாஸ்கர்கிட்ட பேசி சின்னம்மாவுக்குப் போதுமான பணம் கிடைக்க ஏற்பாடு செய்யலாமே?''

''செய்றேன்க்கா'' என்றாள் அனு ஒரு நெடுமூச்சுடன்.

வழக்கமாய் பத்மினி இரவு உடையில் வீட்டின் பிற பகுதியில் நடமாடுவதில்லை. சவுகர்யமான அவ்வுடை படுக்கைக்கு மட்டுமே என்பதில் அவள் தாய் கண்டிப்புக் காட்டியதால், குளித்து உடை மாற்றிய பின்தான் அன்றாட வேலைகளில் இறங்குவது வழக்கம்.

ஆனால், அன்று கோயிலுக்கான பொருட்களை கைகொள்ளாமல் அள்ளி முன் அறைக்குக் கொண்டு வைத்த சமயம் வாசல் மணி அழைத்தது.

''யாரது?'' கதவைப் பாதி திறந்து முகம் நீட்டிக் கேட்டாள்.

''சுத்தமாய்க் கழுவிய முகம், கலைந்த கேசம், இரவு உடை என்றிருந்தவளைப் பார்த்தவர் கனிவுடன், ''பாப்பா, ஐயா இருக்காரா?'' கேட்டார்.

''யார்... யாரு?''

''அதான் பாஸ்கரய்யா... உங்கப்பாதான், வரச் சொல்றியா?''

''நீங்க?'' சங்கடமும் மனதோரம் குமிழிட்ட சிரிப்புமாய் விசாரித்தாள்.

''நாகர்கோயில்லேர்ந்து சங்கரலிங்கம் வந்திருக்கிறதாய் சொல்லு. ஐயாவுக்குத் தெரியும். ஒரு லோடு அன்னாசிப் பழம் கொணாந்திருக்கேன்.''

''சொல்றேன். உட்காருங்க'' படிகளை நாலும் மூணுமாய் தாவி ஏறியவள், மூச்சிரைக்க உறங்கும் பாஸ்கரை உற்றுப் பார்த்தாள். ஆழ்ந்த உறக்கம்.



சற்று அகன்ற உடல்வாகுதான். அலைச்சலும் வியாபார அழுத்தங்களுமாய் சேர்ந்து முகத்தை முதிர்ச்சியாக்கியிருந்தன. நேற்று எந்நேரம் வந்து படுத்தார் என்பதே தெரியவில்லையே...

''இதோ பாருங்க...'' படுக்கை விரிப்பைப் பற்றி லேசாக உலுக்கினாள்.

''ம்ம்....'' புரண்டான். இவள் விவரம் சொல்ல,

''சரி போறேன்'' என்றபடி எழுந்தவன் முகம் இன்னும் உறக்கத்திற்காய் கெஞ்சியது. அவன் முகம் கழுவி வரும்போது காபியோடு நின்றாள்.

வந்தவர் தன்னை மிக இளையவளாய்... அதாவது பாஸ்கரின் மகளாயிருக்குமளவு இளையவளாய் கருதினால், அனுவை பாஸ்கரின், மனைவியாய் நினைப்பது சிரமம்தான். சித்தி சொல்வதிலும் நியாயம் இல்லாமல் இல்லை.

இதே சிந்தனையில் அமிழ்ந்திருந்தவளுக்கு ஆலய ஆராதனையில் கவனம் போகவில்லை.

''பத்மினி அக்கா... முதல் பரிசை நீங்க தட்டிடணும்.''

''பாரிஸ் பொண்ணு சமைக்க வந்தால் எங்களுக்கெல்லாம் போட்டி போட தைரியம் வராது திறமையும் போதாது' என்றனர் கோயிலில் பரிச்சயமான பிற பெண்கள் சிநேகமாய்.

''பத்மினியுடைய உருண்டைக் கறிக்குழம்பு ஜோராய் இருக்கும். ஆனா ஸ்வீட்தான் செய்யணும்னு சொல்லிட்டாரே பாஸ்டர்...''

''வர்ற ஞாயிறு கோவிலுடைய ஆண்டு விழா. வழக்கம்போல விருந்துக்கு ஏற்பாடு செய்தாச்சு. இனிப்பை



மட்டும் நம்ப பெண்கள் செய்யட்டுமேன்னு தோண, அதையே ஒரு போட்டியாய் அறிவிச்சுட்டோம்'' விளக்கினார் போதகர்.

''அப்ப ஒவ்வொரு பத்து இலைக்கும் வேறு விதமான இனிப்பில்ல விழும்?'' சந்தேகப்பட்டார் முதியவர் ஒருவர்.

''விழுறதை சந்தோசமாய் சாப்பிட்டுக்க வேண்டியதுதான். முதல் பரிசு வென்ற பெண்ணுக்கு 'இனிப்பு இளவரசி'ங்கற பட்டம்!''

''நம்ப வீட்டுப் பானை பிடிச்ச பாக்கிய சாலிகளெல்லாம் அடுத்த வாரம் கலக்கப் போறாங்க...''

''சும்மாருப்பா... நினைச்சா இப்பவே கலங்குது!''

இத்தனையையும் கேட்டு ஒரு வழியாய் கிரகித்த பத்மினிக்கு வெட்கமாக இருந்தது. ஆலய அறிவிப்புகளைக் கூட கவனியாமல் இப்படியா தன் பிரச்சினைகளில் மூழ்கிப் போவது?

வீட்டிற்குப் போனதும் பாஸ்கர் ஒரு சிறுவனின் உற்சாகத்தோடு ஆர்ப்பாட்டம் செய்தான். ''பத்மினி... இனி நீ தினம் ஒரு இனிப்பு செய்யணும்... எதை நாங்க எல்லாரும் 'பெஸ்ட்'னு ஏகமனதாய் தேர்ந்தெடுக்கிறோமோ அதைத்தான் மறுவாரம் தயாரிக்கணும் என்ன?''

ஒரு ஆசைக் கணவனின் பெருமிதத்தை வெளிப்படுத்தியது எது... அவர் நடிப்பாற்றலா? அல்லது உண்மையில் தன் மீது பாசம் வைத்திருக்கிறாரா?'' குழம்பினாள்.

''பத்து... இங்கே உனக்குத் தேவையான சமையல் சாமானெல்லாம் கிடைக்காது. ஒரு டிரிப் மதுரை போயிட்டு வந்துரலாம்...''



''சைனா கிராஸ் இனிப்பை இளநீர் வழுக்கை கலந்து செய்தால் பிரமாதமாய் இருக்கும். புதுமையாய் இருக்கும்னு நினைச்சேன்.''

''அப்ப கிளம்பு. நிச்சயம் மதுரை ஸ்பென்சர்ல கிடைக்கும்.''

''அனுவையும் அழைச்சுக்கலாம்.''

''அவள் முக்கியமான போன் காலுக்காய் காத்திருக்கிறா?'' அனுவும் தலையாட்டவே பத்மினி தயாராகினாள்.

அந்திவான இளம் நிறத்தில் சேலை சுற்றி, பின்னலில் ஒரு கட்டு கனகாம்பரத்துடன் வந்தவளை விழி விரியப் பார்த்தான். அப்பார்வையில் இவள் முகமும் அந்தி நிறமானது.

''போலாமா?''

''அதுக்குத்தான் காத்திருக்கேன். இத்தனை வாரங்களில் நாம எங்கேயும் தனியே கிளம்பினதில்லையே...'' காரை செலுத்தியபடி பேசினான்.

''வேலை சரியாய் இருந்துச்சு...''

''நாளை நீ ஆர்டர் செய்த சறுக்கு, ஊஞ்சலெல்லாம் வருது இல்லையா?''

''ம்ம்... கொத்தனார், மேஸ்திரிக்கும் சொல்லியாச்சு... உங்கம்மாவை வரச் சொன்னால் அவங்களையே விளையாட்டு அரங்கைத் திறந்து வைக்கச் சொல்லலாம்.''

''ம்ம்... இனியும் விஷயங்களைத் தள்ளிப்போட முடியாதுன்னு தோணுது. அம்மாவை வரவழைக்கணும்தான்.''

''என்ன சொல்றீங்க?''

''அனு ரெஸ்ட்லெஸ்சாய் தெரியறா. பேச்சு, சிரிப்பு எல்லாம் போய் குட்டியைத் தொலைச்ச புலி மாதிரியான ஒரு தவிப்போட... 'பாஸ்' அத்தான் வயசு, சொத்து எல்லாம் அப்புறம். முதல்ல கல்யாணத்தை முடிக்கலாம்கிறா... அவளே இப்படி வாய்விட்டுக் கேட்ட பிறகு...'' அமிலம் குடித்தது போல துடித்தாள் பத்மினி.

''தவிர சித்திக்குத் தேவையான பணம், சொத்துக்களைத் தந்து செட்டில் பண்ணிடலாங்கறா... இது பற்றி நீங்க பேசினீங்க போல?'' தலையை அதிகம் திருப்பாமலேயே இவளைப் பார்த்தான்.

''சின்னம்மாவுக்கு நிம்மதியான எதிர்காலம் தேவைன்னு சொன்னேன்.''

''சீக்கிரம் செய்திடலாம்.''

ஆக பாஸ்கரின் அன்பில், அண்மையில் குளிர் காயும் சுகம் கூட, அவள் எதிர்பார்த்தபடி சில மாதங்களுக்குத் தொடராது...

அப்பெரிய அங்காடியைச் சுற்றி வந்தவள் கண்கள் தனக்கு வேண்டியவற்றை வாங்கிய பின்னும் வேறு எதையோ தேடிச் சுற்றின.

''கிரிஸ்டல் குவளைகள் இருக்குமா?'' 'சீருடையும் புன்னகையுமாய் நின்ற சிப்பந்தியைக் கேட்டாள்.

''ஸ்யூர் மேம். ஆஸ்ட்ரியன் கிரிஸ்டவல்ஸ் மாடியில் உண்டு. இங்கே மற்ற பொருட்களோட வைச்சா விழுந்து உடைஞ்சிடக் கூடும். நிறையக் குழந்தைகள் வரும் இடமில்லையா?''

மாடியில் ஒரு கண்ணாடி அறை முழுக்க கண் சிமிட்டிய கண்ணாடி கலைப் பொருட்களை ஆர்வத்துடன் பார்த்தாள்.



பிரகாசமான விளக்குகள் பட்டு கண்ணாடி செதுக்கல்கள் சூரியத் துணுக்குகளாய் மின்னின. வர்ணங்களைத் தூவின. விலை அதிகம் என்றாலும் அவள் கை நிறைய காசிருந்தது. தேவையானதை வாங்கிக் கொண்டாள்.

மதுரைக்கே உரிய ரோட்டுக் கடை ஒன்றில் வாயில் கரையும் மாவு தோசையும் கறிக் குழம்புமாய் சாப்பிட்ட பின் ஊர் நோக்கி பயணப்பட்டபோது கேட்டான்.

''மொத்தமாய் பில் போடச் சொன்னேன். அதென்ன நீ எதையோ வேற பில் போடச் சொல்லி, காசு தந்தே?''

''.....''

''பார்சல் பெரிசாய் இருந்தது. அதை என் கையில்கூடத் தராமல் குழந்தை போல நீயே ஏந்திட்டு வந்தே?''

''ம்ம்...''

''இப்பவும் அது உன் மடியில் வைச்சிருக்கே...?''

''ஆமா'' என்றவளுக்கு தன்னையும் மீறி சிரிப்பு வழிந்தது.

கார் சாலை ஓரமாய் ஒதுங்கிப் பின் நின்றது.

''என்ன விஷயம்? காரை நிறுத்திட்டீங்க?''

''அதையேத்தான் அம்மணி நானும் கேட்கிறேன். அதென்ன அத்தனை இரகசியமான விஷயம்?''

''இப்ப அதுக்கென்ன அவசரம்?'' என்றாள் சற்று அலட்சியமாய்.

''அப்போ காரும் கிளம்ப எந்த அவசரமுமில்லை'' கைகளை உயர்த்தி சோம்பல் முறித்தவன் வாகனங்கள் விரையும்



சாலையை வேடிக்கைப் பார்க்கலானான். இவளது சிரிப்பு பெருகியது.

ஒரு சிறுவனைப் போன்ற ஆர்வத்துடன் செல்லப் பிடிவாதம் வேறு? பூந்தாள் சுற்றிய அப்பெட்டியை எடுத்தவள் அவனிடமாய் நீட்டினாள்.

''பிரிச்சுப் பார்த்துடுங்க...''

''ஆங்... தேவையில்லை. என்னன்னு சொன்னால்கூட போதும்.''

''உங்களுக்கு ஒரு பரிசு...''

அவன் முகம் மாறியது. எதிரே வந்த லாரி இறைத்த ஒளியில் அம்மாற்றம் தெளிவாய் தெரிந்தது. ஒரு குழந்தையின் குதூகலம் அது!

''எனக்கா... என்ன?''

''பிரிச்சுப் பார்த்தால் தெரியும்.''

மடியில் பெட்டியை வைத்து கவனமாய்ப் பிரித்தவன் விரல்கள் சற்று நடுங்கினவோ...?

''எனக்கு இப்படி பரிசெல்லாம் வர்றதில்லை... அம்மாகூட என் பிறந்த நாளுக்குப் பிரியாணியும் இனிப்பும் செய்து தர்றதோட சரி...''

''மெள்ள எடுங்க.''

''உள்ளே என்ன நாய்க்குட்டி... இல்ல முயலா?'' மெள்ள எடுத்தவன் அதை உயர்த்தி பிடிக்க, வாகனங்கள் விசிறிய வெளிச்சத்தில் அவ்வுயர கிரிஸ்டல் கோப்பையின் நூற்றுக் கணக்கான செதுக்கல்கள் வைரங்களாய் உயிர் பெற்று கண் சிமிட்டின.



''வாவ்... இதென்ன?''

''தினம் காலையில் பிரியமாய் ஜூஸ் குடிப்பீங்க. ஒரு செம்பில் பிழிஞ்சு வைச்சிருப்பதை தம்ளரில் ஊற்றிக் குடிப்பீங்க. அரை லிட்டர் பழரசம் பிடிக்கும் இது. தினம் நீங்க இதிலேருந்து குடிக்கலாம்னு...''

''தாங்க்ஸ் பத்து'' இவள் கையைப் பற்றினான்.

''உனக்குத் தேவையான சிலவற்றை வாங்கித் தந்தது எனக்குப் பிடிச்சிருந்தது. இப்படி எதிர்பாராம பரிசு கிடைக்கிறது தனி குஷி!''

அவன் தொடுதல் அவள் உடம்பு முழுக்க ஒரு பரவசத்தை ஏற்றியது. ஆனால், அதை முகத்தில் காட்டாதிருக்க முயன்றவள், ''அனுவுக்கும் கிரிஸ்டல் கம்மல் வாங்கினேன்'' என்றாள்.

''ஓ... பரிசு எனக்கு மட்டுந்தான்னு நினைச்சேன்'' என்றான் விளையாட்டான ஏமாற்றத்துடன்.

உண்மையில் பாஸ்கருக்கு மட்டுமாய் வாங்க வெட்கப்பட்டு தான் அனுவிற்கும் கம்மலை வாங்கினது.

''மீண்டும் நன்றி'' பெரிய முறுவலுடன் காரைக் கிளப்பினான். அது அவளை மயக்கியது. இந்த மயக்கம் முறையில்லை என்பது தெரிந்தும் மனம் அவன்பால் சொக்கி சரிந்தது.

வீடு வந்ததும் பரிசைத் தரும் ஆவலுடன் அனுவின் அறைக்குச் சென்றாள். மணி பத்தரை என்றாலும் அனுவின் அறையில் விளக்கு எரிந்ததோடு பேச்சுக் குரலும் கேட்டது. சித்தியின் குரல் -

''காதல்ங்கறது என்ன... கண்ணை இல்லைக் கருத்தை எதிர்பாலின் ஏதோ ஒரு அம்சம் நம்மை ஈர்க்கிறதுதானே... எங்களது காதல் கல்யாணம்னு நீ சொல்லமாட்டே... ஆனா உங்கப்பாவுடைய கண்ணியம் என்னை ஈர்த்தது. அவர் பணமும் ஒரு காரணம். நான் சிறு வயதிலே பணக் கஷ்டத்தை காசின் அருமையை அனுபவிச்சவள். எங்கப்பா சம்பாதிச்சதை விட அதிகம் செலவழிச்சார். அவரை அடக்கி வழிக்குக் கொண்டு வர ஏலாமல் புலம்பின அம்மா... இவங்க இயலாமையால் எனக்குக் கல்யாணம் நடத்தவும் முடியலை... உங்கப்பாவைத் திருமணம் செய்தால் என் வாழ்வு நிமிர்ந்திடும்னு எதிர்பார்த்தேன்...''

''ப்ளீஸ் அழாதீங்க சித்தி.''

''உங்கப்பாவோட என் மனசு அதிகம் ஒன்றலை. இப்ப பணப் பிரச்சினையால் உன்னையும் இழந்துட்டேன்னு தோணுது...''

''நானும் பாசு அத்தானும் உங்களுக்கு வேண்டிய பணம் அனுப்பிடறோமே?''

''இனியும் கையேந்தறது சரியில்லை... வேலைக்குப் போகலாம்னு இருக்கேன்...''

''உங்களைப் பார்க்கறதுக்கு எங்க கடமை' சித்தி.''

''அதெல்லாம் உங்களுக்குக் கல்யாணமான நாலு மாசம் நினைப்பிருக்கும்... பிறகு உங்களுக்கான குடும்ப பாரத்தில் மறந்திடும்...''

''நீங்க சொன்னவரை நான் மணக்கச் சம்மதிக்கலைங்கற கோபம் உங்களுக்கு.''



''விவேக் நல்ல பையன். எனக்கு உறவு என்பதால் மட்டும் சொல்லலை. உனக்குப் பொருத்தமாக இருப்பான்னு நினைச்சதால் சொன்னேன். உனக்கு சம்மதமில்லைன்னால் வேண்டாம்.''

''ஆனா என் மனதிலே ஏற்கனவே யார் இருக்கான்னு தெரிஞ்சும்...''

தன் மனதிலும் தான் அவரையே சுமப்பது முறையில்லை என்பதை உணர்ந்த பத்மினி அவசரமாய் அங்கிருந்து விலகினாள்.

## 14

''இந்த காஸ் - பானை எடுத்துக்கலாமா... பரிமாற உதவும்?'' கேட்டவனை பார்த்தவளுக்குள் சிரிப்பு குமிழிட்டது.

''இரும்பு அடிக்கும் இடத்தில் ஈக்கு என்ன வேலை?'' என்ற கிண்டல் மொழிக்கு ஏற்ப பாஸ்கரன் சமையற்கட்டில் வளைய வரவேண்டியதென்ன?

''அதெல்லாம் வேணாங்க. நேற்றே வேண்டியவற்றை எடுத்து வைச்சாச்சு. கரண்டி மட்டும்தான்...''

''நான் எதை எடுத்துக்க...'' தொடர்ந்து பாஸ்கர் கேட்க, ராஜப்பாவுக்கும் சிரிப்பு தாளவில்லை.

''பிறகு நாங்க எதுக்குய்யா இருக்கோம்? பார்த்துக்கறோம்.''

''அப்ப நீ சேலையை மாத்து பத்மினி... பிங்க் சாரிதானே?''

''செட்டியார்கிட்ட வாங்கின பிங்க்... ஸாரியா?''



''நோ நோ... முறையில் வாங்கின டிஷ்யூ - முத்து செட்டும் போட்டுக்க.''

''அத்தனை அலங்காரமாய் வந்தால் என்னவோ போலிருக்கும்.''

''அழகாய்தானிருப்பே. சீக்கிரம்...''

அவன் சொற்படி உடுத்தி வந்தவளுக்கு சங்கோஜமாய்தான் இருந்தது.

''அப்சரஸ் மாதிரி இருக்கீங்கக்கா. இது உங்க கல்யாண சமயம் உடுத்தின சேலை இல்லியா?'' அனு பாராட்டினாள். அவளும் இன்று அதி கவனமாய் உடுத்திக் கொண்டிருந்தாள். தளிர் பச்சை மட்டும் பொன் நகைகளுமாய் ஜொலித்தவளின் முகத்தில் அசாத்திய களை.

ஆலயத்தின் வாசல்புறம் இருந்த மேசைகளில் பல வீட்டுப் பாத்திரங்கள் அணிவகுத்திருந்தன. அவற்றிலிருந்து இனிப்பின் மணம்.

கடைசியாய் இறங்கியவளிடம் குனிந்து கிசுகிசுத்தான் பாஸ்கர். ''அதிர்ஷ்டம் நம் பக்கந்தான் பத்து...''

''என்ன இத்தனை ஆர்வமாய் இருக்கீங்க?''

''நீ பரிசை வென்றால் பெருமை எனக்குத்தானே?'' பத்மினி சுற்றும் முற்றும் பார்த்தாள்.

''என்ன?''

''சுற்றிலும் யாருமில்லையே... யார் காதில் விழ இப்படியெல்லாம் நாடக வசனம்? மெள்ளச் சொன்ன வார்த்தைகள் அவனை ஊசியால் தைத்திருக்க வேண்டும்.



''நீ ஜெயிக்கணும் - பாராட்டப்படணும் பத்மினி. அதுதான் பெருமை'' பாகாய் குழைந்தது அவன் பேச்சு.

''இப்படியெல்லாம் பேசி எல்லாப் பொண்ணுங்களை மயக்காதீங்க; அது தப்பு'' தன் குழைவை மறைக்க சீறியவளை வியப்புடன் பார்த்தான்.

கோயிலில் ஜெபிக்கக்கூட முடியாதளவு குற்ற உணர்வில் தவித்தாள். மனதை அடக்கி மன்னிப்பு கோரி ஜெபித்த போது யாரோ தோளைத் தட்டினார்கள்.

''வாழ்த்துக்கள் மிஸஸ் பத்மினி பாஸ்கர்.''

''எதிர்பார்த்தது போலவே முதல் பரிசைத் தட்டிட்டியேம்மா'' யாரோ வாஞ்சையுடன் பாராட்டியபோதுதான் அவளுக்கு வென்றது உறைத்தது. பாஸ்கர் தன்னை மிக நெருங்கினால் பிரிவின் வேதனை அதிகம்தானே என்ற கடுப்பில் அவனைத்தான் கரித்தது மனதை உறுத்தியது.

''நன்றி'' அத்தனை பேரையும் மீறி பார்வை பாஸ்கரைத் தேடியது. பலர் இவளைப் பாராட்ட, சிலர் மதிய உணவைப் பரிமாறும் வேலையில் இறங்கியிருந்தனர்.

பந்திப் பாய்களை விரித்து, வாழையிலை போட்டு, கமகம வாசனையோடு உணவை சில்வர் வாளிகளில் கரண்டி சகிதம் நிரப்பினர்.

பத்மினியின் விழி வலையில் பாஸ்கர் சிக்கவேயில்லை. ஷகீலாம்மா இவளை அணைத்து முத்தமிட்டார்கள். ஆனால், அனுவையும் காணவில்லை... எங்கே போயிருப்பார்கள்... தன் அப்படி 'சுருக்கென பேசியது தப்புதான்... ஆனால், அதற்காக...

''நாலு நீதிபதிகளும் ஒரு முகமாய் தேர்ந்தெடுத்தது திருமதி பாஸ்கரின் 'இளநீர் இனிப்பை'த்தான். இந்த புதுமையான

இனிப்பு ஒரு கப் பத்து ரூபாய் என்று இப்போது விற்கப்பட்டு அத்தொகை தொழுநோய் மறுவாழ்வு மையத்திற்கு தரப்படும். என்னம்மா சரிதானே?''

''சந்தோஷம் பாஸ்டர்'' கரம் குவித்தாள்.

''வந்து முதல்ல 'இனிப்பு இளவரசி' பட்டத்தை வாங்கிக்கோங்க.''

திருவிழாவில் தொலைந்த குழந்தையாய் சுற்றிலும் பரிதாபமாய் கண்ணோட்டினாள். ஊகூம்... ஆசை முகம் கண்ணில் படவேயில்லை.

கோபப்பட்டுக் கிளம்பிவிட்டாரோ...? பரிசு வென்ற மகிழ்வே இல்லாமல் இயந்திரமாய் முன் நகர்ந்தாள்.

சாக்லேட்டுகளால் ஆன வட்ட கிரீடம் இவள் தலையில் சூட்டப்பட, பலத்த கைத்தட்டல் கிளம்பியது. மின்னலாய் தன் மேல் ஒளி தெறிப்பது கண்டு விழித்தாள். மூலையில் காமிராவும் கையுமாய் நின்றது பாஸ்கரேதான்.

அப்படியும் இப்படியுமாய் நகர்ந்து தன்னைப் பல கோணங்களில் படமெடுத்தவனை பெருமிதமாய் பார்த்தாள். நெருங்கியவன்'' வாழ்த்துக்கள் பத்மினி'' என மற்றவர்கள் அவனையும் வாழ்த்தினர்.

''உங்களைத்தான் சார் வாழ்த்தணும். இத்தனை திறமையான பெண்ணை மனைவியாய் அடைஞ்ச நீங்கதான் உண்மையில் அதிர்ஷ்டசாலி.''

''நாங்ககூட யோசிச்சோம். என்னடா திடீர் கல்யாணம் செய்துகிட்டார் சின்னவர்னு. இப்படி சமைச்சுப் போட்டால் யாருமே சரணாகதிதான். பெரியம்மாவும் இங்கே சதா இருக்க முடியலை...''



''ஒரு ஆணின் இதயத்திற்கு வழி அவன் வயிறு வழியேதான்னு தெரியாமலா சொன்னாங்க?'' என்றாள் குறுநகையுடன் ஷகீலா.

''இங்கே கதை கொஞ்சம் வித்தியாசம் சின்ன அத்தை. பத்மினி முதல்ல என் இதயத்தைத்தான் தொட்டா... பிறகு வயிறையும் நிரப்பிட்டா!'' பாஸ்கர் கண் சிமிட்ட அனைவரும் சிரித்தனர்.

தனக்கு மட்டும் ஏன் எல்லாம் வெற்று நாடகமாய் - கனவாய் போக வேண்டும் என்ற ஏக்கத்தை புதைத்துக் கொண்டு புன்னகைக்க முயன்றாள் பத்மினி. தன் சாக்லேட் கிரீடத்தைக் கழற்றி அங்கிருந்த சிறுவர்களுக்கு கொடுத்துவிட்டு சேலையை இழுத்துச் செருகியவள் பரிமாறுவதில் உதவலானாள்.

எப்போதுமே முழுமையாய் மகிழ தனக்குக் கொடுப்பினை இல்லை போலும்... தகப்பனற்றவளாய் வளர்ந்து, தாயை, தன் ஒரே உறவான தாத்தாவை இழந்து, தற்போது ஒரு பாசாங்கான பாத்திரத்தில் நாட்களைக் கடத்தும் நிர்பந்தம்.

இத்தனை அன்பும், சீராட்டலும் உண்மையாயிருந்தால்...?

''ஏம்மா புதுப்பெண்ணை வேலை பார்க்க விடறீங்க? லிடியா நீ வாங்கிப் பரிமாறு.''

''உட்காரும்மா. பாஸ்கர் எங்கே?''

''அவர் வெளியே அனும்மாவோட பேசிட்டிருந்தார்...''

இப்போது பத்மினியின் பச்சாதாபம் இடம் மாறியது. பாவம் அனுவிற்கும் இந்நாடகத்தை ஜீரணிப்பது வெகு சிரமம். இத்தனைப் பிரமாதமாய் நடைபெறுவது நாடகந்தான், நடிப்புதான் என்பது உலகிற்குத் தெரிய வரும்வரை



அனுவிற்குக் கஷ்டம் தெரிய வந்த பிறகு இக்கிராம மக்களுக்கு அதிர்ச்சிதான். மென்று மெழுங்கி ஜீரணிக்கக் கூடிய விஷயமல்லவே இது!

அந்நேரம் ஆலய வளாகத்துள் நுழைந்த பாஸ்கரைப் பார்த்த பத்மினியின் மனம் படபடத்தது. ஏன்... என்ன வாயிற்று? ஏனிவர் முகத்தில் இத்தனை இறுக்கம்?

''நிஜமான பெண்டாட்டி புருஷனே தோற்கும்படி பத்மினியுடன் இப்படி இழையணுமா?'' என்று அனு வெடித்திருக்கக்கூடும். அதனால் வந்த சிடுசிடுப்பா?

அனுவிடம்தானே இவர் பேசிக்கொண்டிருந்ததாய் சொன்னார்கள்? பாஸ்கர் அடிக்கடியோ அதிரடியாகவோ சிரிப்பவனில்லை. எனினும் உம்மணா மூஞ்சியில்லை. மறைந்தும் மறையாததுமாய் ஒரு குறுஞ்சிரிப்பு முகத்தில் பெரும்பாலும் இருக்கும்.

''பாஸ்கரைக் கூப்பிடுங்களேன். பத்மினி உங்களுக்காய் காத்திருக்காங்க... சேர்ந்து உட்காருங்க.''

''இருக்கட்டும். அப்புறம் சாப்பிடலாம்'' சற்று அலட்சியமாய் அவன் நடக்க, பலர் வாழ்த்தியதால் பெருகிய மகிழ்ச்சி எல்லாம் இவளுக்கு வற்றி வறண்டது.

''அனு...'' தோட்ட வரப்பில் நடந்தவளுக்கு தன் அழைப்புகளுக்கு பதில் வராததில் அச்சம் கிளர்ந்தது.

கார் ஓட்டுநர் ''அனும்மா தோட்டத்து கிணறு பக்கமாய் போனாங்க'' என்றதும் பத்மினி பதைப்புடன் இளையவளைத் தேடி அலைந்தாள்.

கிணற்றிலிருந்த சிமெண்ட் தொட்டிக்குள் நீரை பாலாய் பீய்ச்சிக் கொண்டிருந்தது மோட்டார்.



''அனு...''

தொட்டியின் விளிம்பில் அமர்ந்திருந்த உருவம் திரும்பிப் பார்த்தது. அது அனுதான்.

''என்னம்மா... கோயில்ல உன்னைக் காணோம்னு கேட்டால், டிரைவர் இங்கிருக்கிறதாய் சொன்னார், ஏன் தனியாய்...?''

''பொறுமையில்லை... இத்தனை நாள் பொறுத்துகிட்ட எனக்கு இந்த கடைசி சில மணி நேரத்தைக் காத்திருக்கப் பொறுக்கலைக்கா. அதான்...''

''பொறுத்தார் பதி ஆள்வார். அதாவது புருஷனை ஆளுவார்கள். பெண்களுக்கு பூமி அவங்க புருஷன்மார் தானே...'' சீண்டி சூழலை இளக்க முயன்றாள் பத்மினி.

ஆனால், தண்ணீரின் சலசலப்பு, தென்னங்கீற்றின் அசைவு, பறவைகளின் கூவல், தென்றல் அத்தனையையும் மீறி அனுவின் முகம் இறுகியே கிடந்தது. தேங்கி நின்ற கண்ணீர் அறுந்த முத்துச் சரமாய் கொட்டியது.

''ஷ்... மனசைத் தளரவிடாதே அனு.''

''எத்தனை ஆசையாய் காத்திருந்தேன்... இன்னும் வந்து என்னை எட்டியும் பார்க்கலியே...''

''நீ வா. எல்லாருமாய் சேர்ந்து சாப்பிடலாம்.''

''ம்ப்ச்... வயிற்றில் பசி இல்லையக்கா... கண்ணுதான் அவரைப் பார்க்கத் தவிக்குது. நீங்க சமையல் போட்டியில் மும்முரமா இருந்தீங்க... ஆக என் சந்தோஷத்தை உங்ககிட்ட பகிர்ந்துக்கக்கூட வழியில்லை... இந்த எதிர்பார்ப்பு தாங்காம வெடிச்சிடுவேன் போலிருக்குது'' கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

''இங்கேயிருந்து ஏங்கறதை விட்டுட்டுக் கிளம்பு. அவர் கோயில்ல சாப்பாடு பரிமாறுவதை மேற்பார்வை இட்டபடி நிக்கறார்'' நனைந்த கருவிழிகள் ஒளி பெற்றன.

''நிஜமாவா...?''

''பின்னே... பாஸ்கர் சாப்பிடுங்கன்ன பிறகும் வேலை பார்க்கிற சாக்குல உனக்காகக் காத்திருக்கிறார்.''

''ம்ப்ச்... பாஸ் அத்தான் இல்ல... மோகன்.''

''யார்... யாரைச் சொல்றே?''

''நீங்க மும்பையில் சந்திச்சவரை. அன்னைக்குக்கூட காரில் போறப்ப அவரைப் பற்றிப் பேசலை...?'' அனு அவர் என்று ஏன் அந்த மோகனைக் குறிப்பிடுகிறாள்?

''கண்டிப்பாய் காலை கோயிலுக்கு வந்துடுறேன்னார். நேத்து இராத்திரி போன் செய்தார். அப்போதிலிருந்து எனக்கு ஒரு சொட்டு தூக்கமில்லை... சாப்பாடு இறங்கலை...''

''யாரோ வரலைங்கறதுக்காய் நீ ஏம்மா அழணும்?''

''தெரியாத மாதிரி கேட்காதீங்க...'' அனு சிரிக்க முயன்றாள்.

''நிஜமாத்தான்டீ தெரியலை... தவிர யாரோ ஒரு மோகனுக்காய் நீ அழறதைப் பார்த்தால் பாஸ்கர் பொறுக்க மாட்டார்.''

''அவருக்கு எல்லாம் தெரியும் அக்கா'' அலட்சியமாய் பதில் வந்தது.

''எது தெரியுங்கறே?''

''மோகனுக்கும் எனக்குமுள்ள கா... காதல்...'' வெட்கமாய் அனு சொல்ல, விழிகள் தெறித்து விடுமளவு முழித்தாள் பத்மினி.



''எப்போதிருந்து இந்தப் புது காதல்?'' நாசி விடைக்கக் கேட்டாள்.

''நினைவு தெரிஞ்ச நாளாய் எம் மனதில் அவர்... அதாவது மோகன்தாங்க்கா. பாஸ் அத்தானைவிட அவருக்கு ஒரு வயசு கூடுதல். கொஞ்சம் விளையாட்டுத்தனமாய் தெரிவார். கார் ரேஸ்ல சாம்பியன். அதனால் எங்கப்பாவுக்கும்கூட இதில் சம்மதமில்லை...''

''அப்ப பாஸ்கருக்கு?''

''அவருக்கென்ன? இப்பகூட வந்து ஏன் கோயிலுக்குள்ள வராமல் வாசல்லியே தவம் கிடக்கிறேன்னு திட்டினார். அதான் தோட்டத்துப் பக்கம் வந்தேன்...''

அப்ப ஷகீலாம்மா அதிக வயசு வித்தியாசம் என்று குறிப்பிட்டதும் இவர்களைத்தானா...? ராஜேஷ்குமார் விவரிக்கும் 'ஙே' முழியுடன் நின்றாள் பத்மினி.

''எங்கக் காதலை யாரும் சீரியசாய் எடுத்துக்கலை. அதான் அப்பாகூட உயில்ல 21 வயசான பிறகுதான் சொத்தும் திருமணமும்னு ஒரு நிபந்தனை போட்டுட்டார்.''

''சொத்து இல்லாமல் உன்னை மணமுடிக்க விரும்ப மாட்டார் என்பது அவங்க யூகம்'' குரலில் இருந்த ஏளனத் தொனியை பத்மினியால் மறைக்க முடியவில்லை.

''இப்படி யாரும் பேசிறக்கூடாதுன்னுதான் அவர் பேயாய் சம்பாதிக்க ஆரம்பிச்சார். இப்ப அவருக்கு என் சொத்தைவிட மூன்று மடங்கு அதிகப் பணமிருக்கு. என் சொத்து முழுக்க சித்திக்குத் தரக்கூட இப்ப எங்களுக்குத் தடையில்லை. அதையும் பேசிட்டோம்... எனக்கு என் மோகன் மட்டும் போதும்!''



## 15

''பாசு அத்தான் உங்ககிட்ட என்னதான் சொன்னார்.''

''அவர் எங்கிட்டச் சொன்னது ஒண்ணு... நான் அதைப் புரிஞ்சுகிட்ட விதம் வேற போல...'' சிறு கால்வாயின் வரப்பில் அமர்ந்த இரு பெண்களின் கால்களும் ஓடை நீரை அளைந்தன. பாதங்கள் வெளுத்து வாளை மீன்களாய் மின்னின.

''ஆனா... உங்களைச் சந்திச்ச பிறகுதான் அக்கா அத்தானுக்கு மொதல்ல நம்பிக்கை பிறந்துச்சு! உங்களைக் கையோட அழைச்சுட்டு வரணுங்கற ஆத்திரத்தில் நூறு கற்பனை... நூறு பொய்னு கலந்து பின்னிக் காரியத்தை சாதிச்சுட்டார். அதுவரை வியாபார மும்முரத்தில் கொஞ்சமும் முசுடாவே பார்த்த பாசு அத்தானை இளகி, இனிமையாய் பார்த்தது நீங்க வந்த பிறகுதான்...

எனக்குக் கொஞ்சம் கோபந்தான். தனக்கு வரவிட்டுத்தானே காய்ச்சலைப் போல காதலுடைய தீவிரமும் மற்றவங்களுக்குப் புரியதுங்கற எரிச்சல்! அத்தானைத் திட்டினேன். முதல்ல மோகனைப் பற்றி தப்பு அபிப்பிராயம் வைச்சிருந்த பாசு அத்தான் மனசு சமீபமாய் மாறிடுச்சு...' அதுக்கு உங்களுக்குத்தான் நன்றி சொல்லணும். நானும் சும்மாயில்லை. திட்டினேன். அழுதேன். 'உங்களுக்கு ஒரு நீதி எனக்கு அநீதியான்னு' வாதாடினேன்! என் கண்ணீரைத் துடைச்சு பச்சைக்கொடி ஆட்டிட்டார்!''

அப்படியானால் அன்று தான் பார்த்தது கன்னத்தை வருடும் காதல் காட்சியல்ல - இதைத்தான் தவறாய் புரிந்து கொண்டோமோ?



பேச்சின் சுவாரஸ்யத்தில் அனுவின் முகவாட்டம் மறைந்து குறுஞ்சிரிப்பு அரும்பியிருந்தது.

''ஆக அத்தான் உங்ககிட்ட என்னதான் சொல்லி அழைச்சிட்டு வந்தார்?''

''உனக்குத் துணையா இருக்க... அப்பதான் சின்னம்மா சம்மதிப்பாங்கன்னு...''

''அதாவது பிரான்ஸ்ல இருந்து...?'' வாய்விட்டுச் சிரித்தாள் அனு.

''கல்யாணமாகாத இவரோட நீ தனிமையான பண்ணை வீட்டில் தங்க முடியாதுன்னு...''

''ஓகோ... இப்படி கதை விட்டாரா ஐயா? இது பற்றி மூச்சே விடக்கூடாதுன்னு என் வாயையும் அடைச்சுட்டார். ஆனால், பாவம் எத்தனை நாள்தான் உங்களை இருட்டிலேயே வைச்சிருக்கிறது...?'

''.....''

''வெளிச்சம் இல்லாமல் கூட சமாளிச்சுடலாம். சுவாசிக்க காத்து அவசியம். அதான் கொஞ்சமாய் ஜன்னலைத் திறக்கிறேன்...''

''அப்ப என் மேல் பரிதாபப்பட்டுதான் கூட்டிட்டு வந்தாரா?''

''ஐயா உங்களைக் கண்டதும் காதலில் முகம் குப்புற விழுந்துட்டார். ஆனால், மீசை முழுக்க மண்ணாய் இருந்ததை உங்ககிட்ட காட்ட வெட்கம். அதுக்காக எடுத்து மாட்டிக்கிட்ட முகமூடிதான் இந்த நாடகம்.''

வார்த்தைகளை எல்லாம் மறந்த நிலையில் பத்மினி!

இதுவரை இருளிலேயே இருந்தவளுக்கு இணுக்கு வெளிச்சம் பட்டாலும் கண் கூசுவது போல, இப்போது கூசிய புத்திக்கு எதுவும் புரியவில்லை... தடவி தடவித் தவித்தது!

''எல்லா ஆண்களுக்கும் உள்ளே வெட்கம் உண்டு. ஆனா அதை வெளிக்காட்டிடவே கூடாதுங்கற வீம்பும் உண்டு!'' நூற்றுக் கிழவியாய் விளக்கினாள் அனு.

''மோகனைப் பார்த்தால் வெட்கப்படுகிறவர் மாதிரி தோணலையே?''

''பேச்சும் சிரிப்பும் அவருடைய முகமூடி! அதனாலேயே அவரைப் பிளே - பாய் மாதிரி நினைச்சுட்டாங்க. என்னை சொத்துக்காக கட்டிகிட்டார்னு சொல்லிடுவாங்களோ என்கிற பயத்துலதான் அவர் இப்படி ஓடி ஓடி சம்பாதிச்சது. அவருடைய சிரட்டையில் செஞ்ச அகப்பை, பொம்மை, பென் - ஸ்டாண்டுக்கு வெளிநாட்டில் நல்ல வரவேற்பு. இப்பப் பணமும் பெருமையுமாய்தான் என் கைபிடிக்க வர்றார்'' அனுவின் இள முகமெல்லாம் ஏக பெருமை.

''அப்ப ஏன் இப்ப பாஸ்கருக்கு கோபம்... இப்பக்கூட திட்டினாய்?''

''தனியாய் உட்கார்ந்து அழறேங்கற கோபம். வேறென்ன? மற்றபடி அத்தானுக்கு தடையேதுமில்லை... அதான் நீங்க யோகம்னேனே...''

''ஆக பாஸ்கருக்கு அனுவின் மீது மாளாக் காதல் இல்லை. அப்படியானால் தன்னைப் பாரிசிலிருந்து அழைத்து வந்த காரணம்? அதுவும் கோயிலில் ஜெபித்து, மோதிரம் தந்து மனைவி என்ற கவுரவத்துடன் அழைத்து வந்தது எதனால்...?



முகம் சிவக்க மோதிரத்தைத் திருகியவளை விநோதமாய் பார்த்தாள் அனு.

''பத்மினிக்கா... உங்க ரெண்டு பேருக்கும் நிஜமாவே கல்யாணமாயிடுச்சா என்ன?''

''இல்லை... அதாவது மோதிரம்தான் அதைக் கூட நாங்க மாத்திக்கலை. தந்து போட்டுக்கச் சொன்னார்.''

''அப்ப ஒரே அறையிலே தங்கறது?''

''நான் டிரெஸ்சிங் ரூமில்...'' பத்மினியின் முகம் சூடானது.

''அதாவது ஒரே படுக்கையில் இல்லை. எல்லாம் முறைப்படிதான் நடக்குது. ஆனா பாசு அத்தான் சொன்ன கதையில்தான் நிறைய ஓட்டை...''

''நான் நம்பித்தான் வந்தேன்.''

''அது சரி... பாசு அத்தான் தன் அம்மா கிட்ட 'நீங்க இல்லாமல் முடியாதும்மா'ன்னு ஒரு வார்த்தை சொல்லிட்டா இங்கேயே அத்தை டேரா போட்டிடுவாங்க. அதில்லாம எங்க வகையில் தூரத்து கிட்டத்து சொந்தக்கார பாட்டிமார் குறைஞ்சது ஒரு டஜன் பேருண்டு.

'வாங்க பாட்டி'ன்னார். 'வந்தேண்டா பேராண்டி'ன்னு ஆஜர் ஆயிடுவாங்க. எல்லாத்தையும் விட்டுட்டு பாரிஸிலேருந்து 23 வயசான அம்மணியைத்தான் கூட்டிட்டு வரணும்... அதுவும் மனைவியாகன்னு...'' செல்ல நக்கலுடன் சிரித்தாள் அனு.

''எனக்கு உங்கக் குடும்பச் சூழல், தெரியாதே அனு... அந்நேரம் சிந்திக்கவே முடியாத சூழ்நிலை எனக்கு...'' குழப்பமும் தெளிவுமாய் தன்னை மாறி மாறிப் பந்தாட பத்மினிக்கு தொண்டையை ஏதோ இறுக்கியது.



இரு பெண்களுமே நீள பெருமூச்செறிந்தனர். ''இவரென்ன இன்னும் வரலை... மாசக்கணக்காய் அவருக்காய் காத்திருக்கேன்க்கா...'' காதலுடன் புலம்பினாள்.

''ரெண்டு மாதங்களுக்கு முன்னே மும்பையில் மோகனைப் பார்த்தேனே...''

''ஆனா நான் பாத்துக்கலையே... அப்பப்ப ஃபோன் செய்தாலும் பார்க்க வரலை அவர். காலம் முழுக்க நாம ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கணும்னா இப்ப வேலையில் முழு மூச்சாய் பாடுபடணும்ன்னுட்டார். அதுவும் சரிதான?''

''ம்ம்...'' தலையாட்டிய சமயம் தன் முகத்தில் மின்னலடிக்க விதிர்த்தாள். போட்டோ எடுத்திருந்தது பாஸ்கர்.

''வயிறு பசிக்குது அம்மணிகளா... உங்களுக்கு செவிக்கு உணவு கிடைச்சால் போதும். எங்க வயிறும் நிரம்பணுமே...''

''அதுக்கு ஏன் போட்டோ எடுக்கணுமாம்?''

''நீ சொல்றதை பத்து அழகாய் ஆமோதிச்சா... அதான்...''

''அது மட்டுந்தானா?'' அவன் வாயோரம் சிரிப்பொன்று ஒளிந்து விளையாடியது.

''அனும்மா கோபம் தீர்ந்தது போல?''

''வேற ஒரு பக்கம் கோபத்தைக் கிளப்பிவிட்டு என்னுடைய ஆத்திரத்தை ஆத்திகிட்டேன்'' அவன் முகத்தில் அசட்டு களை ஏறியது.

''பத்மினிக்கா எதுக்குத் தலையாட்டினாங்க தெரியுமா? இங்கே நம்மூரில் இல்லாத பாட்டிமாரான்னு, பாரிஸிலேருந்து ஒரு குமரியை என் துணைக்காய் கூட்டிட்டு வரணும்னு உங்க



குட்டைத் தூக்கிப் போட்டு உடைச்சேன்... அத்தைக்கு இந்த விஷயமெல்லாம் தெரிஞ்சா உங்க தலைக்கே ஆபத்து...! என்ன அழகாய் கண்ணாமூச்சு விளையாடியிருக்கீங்க...?''

அவன் கை காமிராவைப் பிடுங்கி அவன் முகம் போன போக்கையே ஒரு படம் பிடித்தாள்.

''இதை உங்க பேரப்பிள்ளைகிட்ட கூட காட்டுவேன். தன் காதல், கல்யாண குட்டு அம்பலமானதும் உங்க தாத்தா இப்படித்தான் முழிச்சாருடான்னு...''

''விட்டா நீளக்கதை பின்னறியே... மோகனுடைய நீல போர்டைப் பார்த்துட்டு பாவமே சொல்லலாமேன்னு வந்தா...''

''நிஜம்மா... ஐயோ நிஜம்மாவா...''

மறுகணம் இறக்கை முளைத்த தேவதை போல மாய மானாள் அனு.

## 16

தென்னை மரங்கள் விடாது சாமரம் வீசின என்றாலும் இனமறியாத இறுக்கம் உணர்ந்தனர் இருவரும். மூச்சுவிடக் கூட சிரமமான ஒரு சூழல்.

''பேசுங்களேன்' என்பதுபோல சிணுங்கலாய் சீண்டியது ஓடை.

''நாங்கள் ஒட்டு கேட்கத்தான் கேட்போம்'' என்று பிடிவாதமாய் கிளை மாற்றி மாற்றி உட்கார்ந்து காத்திருந்தன பறவைகள்.

''அனு எல்லாம் சொல்லிட்டா போல...?'' கேட்டவன் குரல் கனத்திருந்தது.

மெள்ள நிமிர்ந்து பாஸ்கரின் முகம் பார்த்தாள். அவன் கண்களில் வருத்தமிருந்தது. வழக்கமான சீண்டல், கம்பீரம் இவற்றை மீறிய வருத்தம்.

''ஸாரி பத்மினி. நான் உன்னை நடிக்க வைச்ச இந்த நாடகமே தப்பு... நிர்கதியாய் நின்றவளை இரக்கமில்லாமல் என் மனைவியாய் நடிக்க வைச்சது... ச்சே... முட்டாள்தனம் என்ன செய்றோம்னு புரியாமல் செய்துட்டேன்.''

''அப்பவும் சரி இப்போதும் சரி நான் குழம்பியிருக்கிறேன். நீங்க அனுவைக் கல்யாணம் செய்துக்கப் போறதாய்...''

''நான் அப்படிச் சொன்னேனா?'' யோசித்தவளுக்கு அவன் அப்படி சொல்லவில்லை என்று ஒத்துக் கொள்ளதான் வேண்டியதிருந்தது.

''சொல்லாமலேயே உன்னை அப்படி நம்ப வைச்சது உண்மைதான் பத்து. அப்பதான் நீ அந்த இருட்டு வீட்டிலேருந்து கிளம்புவேன்னு...''

''அந்த வீட்டை எப்படியும் நான் காலி செய்திருக்கணும். ஆனா வேறெங்கே போறதுன்னு எனக்கும் தெரியாத நிலை...'' இவளும் இழுத்தாள்.

''அந்த இராத்திரி, ரொம்ப நூதனமான சூழல்ல உன்னை சந்திச்சது என்னை ரொம்பப் பாதிச்சது பத்து... அது கடவுளாய் தந்த சந்தர்ப்பம்னு நினைச்சேன்... இப்போ இன்னும் அதிகமாய் அதை நம்பறேன்... அதை நழுவவிட்டிருந்தா நான் முட்டாள். எனக்கு உதவற எண்ணத்தில்தான் நீயும் சுலபமாய் கிளம்பினே...''



அவளுக்கு நிற்க முடியாதபடி கால்கள் தொய்ந்தன. மறுபடி ஓடைக்கரையில் அமர்ந்தவள் புற்களைக் கீரையாய் ஆய்ந்தாள். விரல்கள் நடுங்கின.

''எனக்கு இப்போதும்கூட அன்னைக்கு எனக்குள்ளே தோன்றிய உணர்வுகளை புரிஞ்சுக்க முடியலை... உன்னை பத்திரமாய் இங்க கூட்டிட்டு வரணும்... பிறகு கைநழுவிடாமல் பார்த்துக்கணுங்கறதைத் தவிர... வேறேதும் தோணலை.''

கவிழ்ந்திருந்த அவள் முகத்தின் வெட்கச் சிவப்பு அவனைக் கிறக்கியது. ''முதல்ல உனக்குக் கொஞ்சம் புதுக்காற்று தேவை... நான் அந்த ஜன்னல் காற்றாய் இருக்கலாம்னு நினைச்சவனுக்கு பிறகுதான் புரிஞ்சுது நீ எனக்கு சுவாசக் காற்றுன்னு. உன்னை விட்டுரக் கூடாதுங்கற வெறியில் உண்மைக்குக் கொஞ்சம் அதிகச் சாயம் பூசிச் சொன்னேன்...''

அவனும் அவளின் அருகே அமர்ந்தான்... மிக அருகே. பசும்புல்லின் மணத்தை மீறியது அவனது ஆண் வாசனை. தழைந்த விழிகளுக்குத் தெரிந்த அவன் ரோமமோடிய வலிய கரங்களும், மார்பும் கிறக்கின. இதெல்லாம் கனவோ என்ற கலக்கம் சதா உள்ளே குடைந்தது.

''அனுகிட்ட உங்ககிட்ட ஏதும் சொல்ல வேண்டாம்னேன்... அவள் என் மேலே கொஞ்சம் எரிச்சல்ல வேற இருந்தா... ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கு அநீதியான்னு என்னை வசனம் பேசி வெளுத்து வாங்கிட்டா... மோகனுக்கு உடனே கிளம்பி வந்து என்னைக் கல்யாணம் பண்ணிக்கோன்னு போன்ல உத்தரவு போட்டுட்டா. அம்மாவுக்கு அக்காமாருக்கு ஓரளவு விஷயம் கசிஞ்சு 'வரோம்டா வரோம்'னு படுத்தறாங்க... ஆனா...''





காற்றில் பறந்த அவள் நெற்றி கேசத்தை ஒதுக்கியபடி தயங்கினான். அந்த மிருதுவான ஸ்பரிசத்தில் இவளுக்கு தேகமெங்கும் தகித்தது.

''ஆனா உன் நோக்கம் தெரியாமல் நான் என்ன சொல்ல... ம்ம்...?''

எதிர்பார்ப்புடன் தன் முகத்தை பாஸ்கர் குனிந்து ஆராய்கிறான் என்று உணர்ந்தவள் மேலும் மும்முரமாக புல்லை ஆய்ந்தாள்.

''இந்தத் தவிப்போடயே நம் நாடகம் தொடர்ந்துச்சு. அனுகிட்ட நீ பாசமாய்ப் பழகினே... அதிலே குழம்பினேன்... என் காதலியாய் நீ நினைச்ச அனுவை நீயும் நேசிச்சால், என் மேல வித்தியாசமான பிரியம் இல்லைன்னுதான் அர்த்தம்?'' இப்போது அவன் விரல்களும் புல்லை ஆய ஆரம்பித்திருந்தன.

''நான் இங்கே வர முடிஞ்சதுக்கான காரணமே அனுதானே? நல்ல பொண்ணு அவள்...''

''உன்னுடைய நல்ல குணத்தை, வேலையிலே காட்டிய திறமைகளை, ஷகீலா அத்தை விஷயத்தில் பெருந்தன்மையாய் நீ காட்டின வழியை எல்லாம் நான் ரசிச்சேன்... ஆனால் நீ என்னை விரும்பறியாங்கறதுல மட்டும் குழப்பம்...''

''நீ அனுவுடையவர்னு இருக்க...''

''எனக்கு அந்த கிரிஸ்டல் கப்பை பரிசாய் தந்ததை சாதகமாய் நினைச்சா, நீ அனுவுக்கும் ஒரு பரிசு வாங்கிட்டு ஓடினே... குழப்பம் தொடர்ந்து...''



''உங்களுக்கு மட்டுமாய் வாங்கினால் நல்லாயிருக்காதுன்னு... அதான்...''

''யா... ஹூ...!'' அவன் போட்ட கூச்சலில் அதிர்ந்து விட்டாள்.

''என்ன... என்னாச்சு?''

''இப்பத்தான் குழப்பம் ஒரு முடிவுக்கு வந்தது!'' என்றவன், உற்சாகமாய் தன் தோள்களைப் பற்றிக் குலுக்க வெலவெலத்து விழித்தாள்.

''கல்யாணத்துக்கு... நம்ப நிஜ கல்யாணத்துக்கு நாளை குறிச்சிடலாந்தானே...''

''அதெல்லாம்... வேணாம்... அதாவது வந்து இனி பெரியவங்க வந்து எல்லாத்தையும் முறையாய் செய்யட்டும்.''

''அப்ப நாம இனி காதலை முறையாய் செய்வோம்... பெண்ணே!'' தோள்களைப் பற்றியிருந்த அவன் கைகள் அவளைச் சுற்றி இறுக்கின. கன்னத்தில் இளசாய் ஆரம்பித்த முத்தம் உதடு நோக்கி அழுத்தமாய் முன்னேறியது.

தென்னைகள், பறவைகள், ஓடை நீர் எல்லாம் குதூகல சாட்சியாய் இருக்க, அவர்களின் முதல் முத்தம் அரங்கேறியிருந்தது...